கல்கி

வைரவிழா ஆண்டு

KALKI 10.3.2002

ரூ. 6.00



Steelwin®

THE RECLINER CHAIR

முழுமையான சுகம்

உங்கள் விரல் முனையில்



Imagine being able to do all this on one chair! Steelwin's amazing Recliner can change from chair to hammock to bed and everything in between, in a trice, at a gentle flick of the elegant arms rest. That's the Recliner. A chair that changes to suit your need.

CHENNAI : Triveni & Co. 5, Raja Street, T. Nagar, Chennai - 600 017. Ph: 4360111.

Siva Sakthi Industries, 100, Menambedu Road, SIDCO IND. ESTATE, AMBATTUR, Chennai - 98. Ph: 623 3957.

BANGALORE : Steelwin, 131, Devatha Plaza, Residency Road, Bangalore - 560 025. Ph: 080 - 2210541, 2221866

DEALERS

• **Purasawalkam :** ○ Sakthivel Enterprises, Ph: 6433556 • **Annanagar :** ○Carrefour, Ph:6210933. ○J.F.A, Ph: 6223377. National Furnitures, Ph:6212666, • **Annasalai :** ○Apollo chairs, Ph:8411960. ○Spencer & Co., Ph: 8523611. ○Chellarams, Ph: 858 3046 • **Royapettah High Road :** ○J.F.A., Ph: 813 1384.○Sathya Furniture Co. Pvt. Ltd., Ph: 4983929. ○ Cyber Cove Furniture Mart. Ph: 8207211. • **Ashok Nagar :** J.F.A. Ph: 3713493. • **Teynampet:** ○Imperial Furniture Co., Ph: 4349644. ○Kapsons, Ph:4339986. • **T.Nagar :** ○Fantasy Furniture Co., Ph : 8234420. ○Gunas Marketing, Ph: 4340083. ○Muthu Furniture, Ph:4344193. ○New Gold House Foams & Furnishers, Ph: 8230375. ○Anush Furniture, Ph: 4338021. • **Lloyds Road :** ○Indroyal Furniture Co., Ph: 826 8966. • **Vadapalani:** ○Palve, Ph: 4840812. • **Egmore:** ○New Foam Palace, Ph : 8250688 • **Kilpauk :**○Seating World, Ph : 6444005 • **Adyar :** ○Deepak Furnitures, Ph: 4465625 ○Maruthi Decors, Ph: 4420783 • **Thiruvanmiyur :** ○Punyas Agencies, Ph: 4481520. ○Jayaraja Furniture, Ph: 4456315 • **Guindy:**○Cybercove Furniture Mart, Ph : 2322111 • **Nanganallur :** ○Balasubramaniam & Co., Ph: 2332425 • **Avadi :** ○Sri Lakshmi Agencies, Ph : 6551549 • **Thiruvottiur:**○Comfort Foams & Furniture, Ph : 5735849

List of Dealers in Tamil Nadu

• **Coimbatore:** Elite Furniture, Ph: 399122. Rexin Land, Ph:233240. Elite Furniture Mart, Ph:236662. Carrefour, Ph: 302303. • **Erode :** A.P. Thomas, Ph: 257471. • **Karaikudi :** Sree Laxmi & Sons, Ph:38286 • **Kumbakonam:** Standard Steel Furniture, Ph: 421846. Bismi Furniture, Ph: 425262. • **Madurai :** Sacs Enterprises, Pvt. Ltd., Ph: 536212. Sri Vinayakam Furniture, Ph: 746746. Sacs & Sons, Ph: 747656. • **Mayiladuthurai:** Bismi Furniture Pvt. Ltd., Ph: 22856. • **Nager Koil:** Rohith Furniture, Ph: 76955. • **Pudukottai: Mumtaj** Furniture Mart, Ph: 22060 • **Ramanathapuram:** Surya Home Applicante, Ph: 21009. • **Salem:** Millennium Neo Furn, Ph: 419145. • **Thanjavur:** Standard Steel Furniture, Ph: 31493. • **Tirunelveli:** Bright Furniture, Ph: 333028. • **Tirupur:** Woodland Furniture works, Ph: 425181. • **Trichy:** Cauveri Furniture, Ph: 764661 - Galaxy Wood House, Ph: 763551 - Vedham Furniture, Ph: 760433. • **Tuticorin:** Ganga Rajesh Furniture, Ph: 326245. • **Kovilpatty:** Bharath Furniture Super Market,Ph: 21258. • **Vellore :** T.P.G. & Sons, Ph : 20333. • **Sivakasi :** Bharath Agencies, Ph: 422789. • **Sankaran Kovil :** Rajesh Agencies, Ph:22410

List of Dealers in Kerala

• **Calicut:** ○Ruby Furniture Co., Ph: 721307 • **Cochin:** ○Diwaniya Associates, Ph:330888 ○Manuel Sons Exporters Pvt Ltd, Ph: 366742 ○Comfurn Furnitures & Interior Decorators, Ph : 345688 • **Thiruvananthapuram:** ○Marikar (Motors)Ltd., Ph: 477420 • **Trichur:** ○M.D. Francis & Sons, Ph:420613 ○M.D. Francis & Co., Ph: 212464 ○Furniture Plaza, Phone : 443453

List of Dealers in Andhra Pradesh

• **Hyderabad:** ○Furniture World, Ph: 3353708 ○ Om Prakash Iron Metal Works, Ph : 4602260 - ○Posh Living Furniture, Ph: 6661322 • **Nellore:** ○House Beauty Furniture, Ph: 326586 • **Secunderabad :** ○Aalishaan Furniture, Ph : 7844750 ○Linga Plaza, Ph:7744859 • **Visakhapatnam :** ○Wood Decor, Ph:706752 ○Wood Land, Ph: 552313 ○Buba's Furniture Furnishings, Ph: 516255 ○The Decograph Interiors, Ph: 530770 • **Vijayawada :**○Amulya Steel Wood Furnitures, Ph: 574584 ○Alankar Tubular Furniture Mfg.Co., Ph: 579725

PONDICHERRY: Bismi Furniture Pvt. Ltd., Ph: 346139. Sadhuram Industries, Ph: 338588.



இனி அம்மாதான் முதல்வர் என்று ரத்தத்தின் ரத்தங்கள் குஷியாக இருக்க, அம்மாவையே குஷிப்படுத்தும் காரியத்தைச் சப்தமில்லாமல் செய்து முடித்திருக்கிறார் பிரபல ஓவியரான ஸ்வர்ணலதா சந்திரசேகர். சந்தியாவின் கறுப்பு வெள்ளைப் படத்தை மெகா சைஸில் வண்ணத்தில் உருவாக்கியுள்ளார். தஞ்சாவூர் பாணி ஓவியத்திலுள்ள பொன் வர்ணத்துக்கு அசல் தங்கத்தையே பயன்படுத்தியுள்ளார் ஸ்வர்ணலதா. (பின்னே சும்மாவா! அம்மாவின் அம்மாவாச்சே!)

சந்தியாவை வரையும் எண்ணம் எப்படி வந்தது? "ஜெயலலிதா பதவி விலகிய சம்பவத்தின்போது, முகத்தில் தெரிந்த துணிச்சலும், நம்பிக்கையும் என்னை வரையத் தூண்டின. பிரஷைக் கையில் எடுத்த பிறகு திடீரென ஒரு யோசனை. ஒரு பெண்ணின் அழகுக்கு மட்டுமல்ல, துணிச்சலுக்கும் தாய்தான் காரணம் என்று தோன்றவே சந்தியாவை வரைந்தேன்'' என்கிறார்.



• ஸ்வர்ணா

சந்தியாவின் இளமைக் கால புகைப்படம் அவ்வளவு சுலபத்தில் கிடைக்கவில்லையாம். கடைசியில் கை, ஸாரி

தங்க அம்மா!

ஃபோட்டோ கொடுத்தவர் ஃபிலிம் நியூஸ் ஆனந்தன் தான். அதில் சந்தியா உம்மென்றிருந்தது என்னவோ போலிருக்க, அப்புறம் சந்தியா 'ஸ்மைல்' பண்ணுவது மாதிரி மாற்றி விட்டாராம் ஸ்வர்ணலதா.

அதற்குள் படம் பற்றி தகவலறிந்த சில மாண்புமிகுகளும், பல வி.ஐ.பி.களும் அதைத் தங்களுக்குத் தர வேண்டும் என்று செல்லமாகவும் அன்பாகவும் மிரட்டியிருக்கிறார்கள்! ஸ்வர்ணா அழுத்தமாக 'நோ' சொல்லிவிட்டார்.

''என்னோட மனத் திருப்திக்காக வரைஞ்சேன்'' என்றவர், படத்துக்கு பைனல் டச் கொடுத்து முடித்த அந்த நிமிஷத்தில்தான் ஜெயலலிதா டான்சி வழக்கிலிருந்து விடுதலையானதாகச் சொல்லி நெகிழ்ந்தார்.

"இது அவங்க அம்மா படம். அவங்க கிட்ட இருக்கறதுதானே நியாயம், ஸோ இதை ஜெயலலிதாவிடமே கொடுக்கப் போகிறேன்'' என்றார்.

''அதெல்லாம் சரி. உங்களுக்கு அரசியல்ல...'' என்பதற்குள், "அய்யோடா! ஆளை விடுங்கப்பா!" என்று அலறினார்.

• செல்வி சந்தானம்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

கோத்ரா இன்ஸிடென்டை நினைச்சுப் பார்த்தா நைட் தூக்கம் வரமாட்டேங்குது. ஸ்டேய்ன்ஸ் பாதிரியார் கொலைக்குப் பிறகு இந்தியாவுல நடந்திருக்கற மற்றொரு மகா பயங்கரம்.

ஏன் இப்படியெல்லாம் நடக்குதுன்னு யோசிச்சுக்கிட்டே இன்னைக்கு (28.2) விவேகானந்தரோட 'சகோதர சகோதரிகளே' (வெளியீடு: ராமகிருஷ்ண மடம், சென்னை -4. விலை ரூபாய் 50/-) புக்கைப் புரட்டி, கையில கிடைச்ச பக்கத்தைப் படிச்சா... ரொம்ப அழகா அதுல ஆன்ஸர் கிடைச்சுது. சில பாராகிராஃப்ஸ் அடங்கிய அந்தப் பகுதில அங்கொரு வரி இங்கொரு வரி எடுத்துத் தரேன், பாருங்க:



மதத்தைப் போல் வேறெந்த மனித உந்து சக்தியும் உலகை இந்த அளவுக்கு ரத்த வெள்ளத்தில் ஆழ்த்தியதில்லை.

இதுவரை இப்படித்தான் இருந்திருக்கிறது. இனியும் இப்படித்தான் இருக்கும் என்று எண்ண இடமும் இருக்கிறது.

மதம் என்பது எங்கள் தந்தையின் மதம்; எங்கள் தேசத்தின் மதம் என்றெல்லாம் ஆகிவிட்டது. மதத்தைப் பின்பற்றுவது நாட்டுப் பற்றின் ஓர் அம்சமாகிவிட்டது.


மதத்தைப் பொறுத்தவரையில் உலகம் தழுவிய எந்த அம்சத்தையும் காண்பது கஷ்டம்... நாம் எல்லோரும் மனிதர்கள், ஆனால் நாம் எல்லோரும் சமமா?...

நம்மிடையே ஆற்றலில் ஏற்றத்தாழ்வு உள்ளது; அறிவில் ஏற்றத்தாழ்வு உள்ளது; உடல் வலுவில் ஏற்றத்தாழ்வு உள்ளது. இவை நம்மிடையே ஏற்றத்தாழ்வை உண்டாக்கியே தீரும்.

மனிதன் பெறுகின்ற உண்மையின் தரிசனங்கள் ஒவ்வொன்றும் இறைக் காட்சியே தவிர வேறல்ல. நாம் எல்லோருமே தண்ணீர் எடுப்பதற்காக கையில் பாத்திரங்களுடன் ஏரிக்குச் செல்கிறோம்... பாத்திரங்களை நிரப்பிக் கொள்கிறோம். தண்ணீர், கையிலிருக்கும் பாத்திரங்களின் வடிவைப் பெறுகிறது... ஆனால் எல்லா பாத்திரங்களிலும் இருப்பது தண்ணீர்; தண்ணீரைத் தவிர வேறெதுவும் அல்ல. மதங்களின் விஷயமும் இப்படித்தான் நமது மனங்களே இந்தப் பாத்திரங்கள்... நமது மனப்பாத்திரத்தின் வடிவத்திற்கு ஏற்ப இறைக்காட்சி பெறுகிறோம். இருந்தாலும் அவர் ஒருவரே.

மத விஷயத்தில் ஒருவனது தனித்துவத்தை அழிக்காமல் அதே வேளையில் அவன் மற்ற அனைவருடனும் ஒன்றுபட்டிருப்பதற்கான வழியைக் காட்டுகின்ற திட்டம் மட்டுமே நடைமுறைக்கு ஏற்புடையதாக இருக்க முடியும்.

நானும் ஒரு சிறிய திட்டம் வைத்திருக்கிறேன்... முதலில், 'எதையும் அழிக்காதீர்கள்' என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளுமாறு மனித குலத்தை வேண்டுவேன்.



• தி பிரின்ஸஸ் டைரீஸ்

இன்னிக்கு நடக்கறது இதுக்கு நேர் ஆப்போஸிட்டா இருக்கு. அழிக்கறதே முதல் கோட்பாடுன்னு ஒரு கூட்டம் இறங்கியிருக்கு. அதனால்தான் கோத்ரா கோரங்கள்.

இந்த மாதிரி பகீர் நியூஸெல்லாம் பாதிக்காத, ஆண்டிபட்டி ரிசல்ட்டுக்கெல்லாம் அலட்டிக்காத ஒரு ஊருக்கு லாங்ட்ரைவ் போனேன். ஊத்துக்காடு! மாதவன் புகழ் 'அலை பாயுதே' சினிமால வர டைடில் ஸாங் ஞாபகமிருக்குமே. அந்தப் பாட்டோட ஒரிஜினலை எழுதின வேங்கடகப்பயர் பிறந்து வளர்ந்து, கிருஷ்ணனைக் கொஞ்சி மடியில் உட்கார வைச்சுக்கிட்ட ஊர். ஊர்னா என்ன... சும்மா ஒரு கோயில் இரண்டு தெரு; அப்புறம்

கிருஷ்ணன் சர்ப்பத்தின் தலையிலே நாட்டிய மாடின காளிங்கன்மடுன்னு ஒரு குட்டை.

குருக்கள் காலங்கார்த்தாலயே பூஜை முடிச்சுக்கிட்டுப் போய்ட்டாராம். கம்பி கேட் போட்டு மூடின சன்னதியில, மங்கலான லைட்டிங்ல கிருஷ்ணர் படு ஏகாந்தமா காளிங்க நர்த்தனம் பண்ணிக்கிட்டிருந்தார்.

சுத்தியும் ஈ காக்காய் கிடையாதுன்னு சொல்லிட முடியாது. ஏன்னா கோயில் சுவரையொட்டின மொட்டை மரத்துல ஒரு பறவைகள் மாநாடு. இந்தியன் ரோலர்ன்ற ஜோரான காரணப்பெயருள்ள பறவைக் கூட்டம்! மரக்கிளையை விட்டு எகிறிப் பறக்கறதும் அந்தரத்துல நீலச் சிறகு விரிச்சு குட்டிக்கரணம் போடறதும் - ஒரே கூச்சல், ரகளை! இந்தப் பறவை சர்க்கஸை கைகூப்பி தரிசனம் பண்ணிக்கிட்டிருந்தவர்... ஊத்துக்காடு வேங்கடவியார்! அவர் சன்னிதிக்கு நேர் எதிரே தான் இந்த சர்க்கஸ் டெண்ட்.



கிருஷ்ணனைப் பத்தி மட்டுமில்லாம சரஸ்வதி, முருகன், சிவன்னு நிறைய ஸ்வாமிகளைப் பத்திப் பாட்டும் கீர்த்தனையும் தமிழ் சம்ஸ்கிருதம்னு இரண்டு மொழியிலயும் போட்டிருக்காராம். மொட்டை மரத்து மாநாடு பத்தி பாட்டு போடறதுன்னா எப்படிப் போட்டிருப்பார்னு கற்பனை பண்ணிப் பார்த்தேன்:

தொந்தரவு தானேனே!
கோபாலகிருஷ்ணா!
அந்தரத்தில் களித்தாடும் சுந்தர
பறவைகளின்
தொந்தரவு தானேனே!

பந்தைப் போல எழுவதும்
பல்டியடித்து குன்வதும்
மொந்தைக் கள்ளு குடித்தாற்போல்
தொண்டை நோக கூவுவதும்
தொந்தரவு தானேனே!

உந்தன் நீலமேனியோடு
சொந்தம் கொண்ட சிறகுகள்
தொந்தமுடன் பெட்டைதன்னை
இன்பம்கொள்ள அழைத்திடும்
தொந்தரவு தானேனே!

தன்னன்தனியா யிருக்கும்
என்னைச் சீண்டி சோதிக்கவே
வன்மமுடன் நீ நடத்தும்
இந்தப் பொல்லா நாடகத்தின்
தொந்தரவு தானேனே!

தொந்தரவு தானேனே!

வால்ட் டிஸ்னியோட, 'தி பிரின்ஸஸ் டைரிஸ்' (The Princess Diaries)ன்னு ஒரு படம் பார்த்தேன்.

அப்பா இறந்து போன பிறகு அம்மாவோட சாதாரணமா வாழுற சுவீட் சிக்ஸ்டீன் பொண்ணுக்கு, தான்தான் அந்த நாட்டோட இளவரசின்னு தெரிஞ்சா எப்படி இருக்கும்? அதுதான் கதை!


'இளவரசிக்குன்னு ஒரு ஸ்டைல் இருக்கு' என்று (பாட்டி)ராணி ஜூலி ஆன்ட்ரூஸ் ஒவ்வொண்ணா சொல்லிக் கொடுக்கும்போது இளவரசி ஆன் ஹாதவே பண்ற சின்ன சின்ன காமெடி ரசிக்கும்படியா இருக்கு.

'இவதான் இளவரசி'ன்னு தெரிஞ்சதும், படிக்கிற ஸ்கூல் தேடி வந்து மீடியாகாரங்க பண்ற தொந்தரவும் ஸ்கூல்ல படிக்கிற ஒரு மாணவனோட டேட்டிங் போகும்போது அதை ரகசியமா ஹெலிகாப்டர்ல வந்து துரத்தித் துரத்திப் படம் பிடிக்கிறதும், கூட படிக்கிறவங்களே இளவரசியை ஏமாத்தி படம் எடுக்க வைக்கறதும், டயானாவோட கதையை நிறைய ஞாபகப்படுத்தது.

அதோடகூட ஆட்ரி ஹெப்பர்ன் நடிச்ச ஒரு அட்டகாசமான படமும் ஞாபகம் வருது : ரோமன் ஹாலிடே!

ஆட்ரி ஹெப்பர்னா! சுமி உன் வயசென்னன்னு கேட்காதீங்க... எவர்க்ரீன் படங்கள் எல்லா தலைமுறைகளுக்கு மானவை.

- சுமி



சுமி சூப்பர்மார்க்கெட்

பூமிகா - பெயரிலேயே பூவை வைத்திருக்கும் ஃபாட்டி பைவ் கேஜி தாஜ்மஹால். 'பத்ரி' 'ரோஜாக் கூட்டம்' என்று வந்தவை இரண்டே தமிழ்ப் படங்கள் தான் என்றாலும் இந்தப் பஞ் சாப் கவிதைக்குத் தியேட் டரில் விசில் பறக்கிறது. கடவுளே! ஜோதிகா சீஸன் முடிந்துவிட்டதா என்ன? அபிமான கதாநாயகிகளோடு தினசரி ஒரு கனவாவது காணும் டீன் ஏஜ் ரசிகர் களிடம் கேட்டால் உண்மை நிலவரம் தெரிந்துவிடும். ஏதோ தமிழ் சமுதாயத்துக்கு நம்மால் முடிந்த நல்ல காரி யத்தைச் செய்வோம் என்ற பொறுப்புணர்ச்சியோடு, 'ரோஜா கூட்டம்' திரை யிடப்படும் தியேட்டர்களை வளைய வந்தோம்.

சென்னை அசோக்நகர் உதயம் திரையரங்க வளாகம்:

"ஆப்பிள் பெண்ணே நீதானோ?" பாடலை உற்சாகமாய் முணு முணுத்தபடி வெளியே வந்து கொண்டிருந்த ரசிகரை மடக்கி, 'பூமிகா நடிப்பு எப்படி?' என்றதுதான் தாமதம். பூமிகா புராணமே பாட ஆரம்பித்துவிட்டார் குரு.

"பூமிகா தோற்றத் துலதான் ஒரு ரோஜா செடி மாதிரி இருக் காங்க. ஆனா நடிப் புல ஆல மரம்.



• அபு



ஜோதிகா என்னாங்க ஜோதிகா! இவங்க பளீர் சிரிப்பு, ஜிலீர் பார்வைக்கு முன்னாடி யாரும் நிற்க முடி யாது. எனக்கென்னமோ ரொம்ப பயமா இருக்கு சார்! இந்த மாதிரி நடிகைகளை ஒண்ணு நம்ம தமிழ் சினிமாக்காரங்க அடையா ளம் கண்டுபிடிச்சு என்கரேஜ் பண்ண மாட்டாங்க! இல் லேன்னா ஷாலினியை அஜித் வந்து கல்யாணம் செய்துகிட்ட, மாதிரி பூமிகாவுக்கும் ஒரு ராஜ

குமாரன் வந்துட்டா இன்னொரு நல்ல நடிகையை இழந்துடுவோம்" என்று புலம்பினார்.


தேவிபாரடைஸில் நண்பகல் காட்சி முடிந்து வெளியேறிய ரசிகர்கள் மத்தியில் தமது சிபிசி மோட்டார் சைக்கிளை ஸ்டைலாக ஸ்டார்ட் செய்து கொண்டிருந்தார் நிஷாந்த். "அண்ணாசாலையில் எட்டு வண்ண வான வில்லைப் பார்த்தேன்" பாடலை முணுமுணுக்க - ஆஹா! இன்னொரு பூமிகாபித்தன் கிடைத்த மகிழ்ச்சியில் அவரை மடக்கினோம்.

"இந்த வைரமுத்துவுக்கு எப்படித்தான் கற்பனை ஊறுமோ தெரியலிங்க... மனுஷன் பூமிகாவை உள்ளது உள்ளபடி வர்ணிச்சிருக்கார். ஜோதிகா அரைசதம் அடிச்சுட்டாங்க. பூமிகா மாதிரி ஒரு புதுப்புயல் வந்தால்தானே எங்களை மாதிரி பசங்களுக்கும் உற்சாகமா இருக்கும். ஆனால் நான் கேள்விப்பட்டவரைக்கும், அவங்க தமிழ்லே புதுசா எந்த படமும் ஒத்துக்கலையாமே" என்று பரிதாபமாக கேட்க, நாம் ஓட்டமெடுத்து நின்றது பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள பத்மம் திரையரங்க வளாகம். பிற்பகல் காட்சி முடிந்து எதிர்பட்டார் பாலிவுட் ஹீரோ மாதிரி இருந்த எமி.

"பூமிகா இப்போ தெலுங்கிலேதான் டாப். தெலுங்கிலே அவங்க அறிமுகமான 'தோலி பிரேமா' படத்துலேருந்து லேட்டஸ்ட் வரைக்கும் பார்த்துட்டேன். ஆச்சர்யம் தெரியுமா? பூமிகா இதுவரைக்கும் பண்ணின எல்லா கேரக்டருமே காதலுக்காக ஏங்குற மாதிரிதான். இந்த மாதிரி கேரக்டர்னா அவங்களுக்கு அல்வா சாப்பிடுற மாதிரி!" என்ற எமியிடமும் எக்ஸ்க்யூஸ் வாங்கிக் கொண்டு தங்கசாலை பாரத் தியேட்டர் வாசலில் இன்னொரு பூமிகாதாஸனுக்காகத் தவமிருந்தோம். படம் முடிந்து வெளியே வந்த அபு, நம் தோளைத் தொட்டு "சார் படம் சூப்பர்! பூமிகா தூள்" என்றார் நாம் கேட்காமலேயே!

"அரியர்ஸ் எக்ஸாம் எழுதப் போய்ட்டு பூமிகாவை ஃபாலோ பண்ணிக்கிட்டே போய், திரும்பவும் தன்னோட வீட்டுக்கிட்டேயே வந்து நிற்கிற ஹீரோ ஸ்ரீகாந்த் மாதிரி என் வாழ்க்கையிலும் நடந்திருக்கு சார்... பூமிகா மாதிரி ஒரு பொண்ணு கிடைச்சா அரியர்ஸ் என்ன சார்... ஐஏஎஸ் எக்ஸாமையே மிஸ் பண்ணலாம்!"

தடுப்பூசிக்கெல்லாம் கட்டுப்படாத நோயொன்று தமிழகத்தில் பரவிக்கொண்டிருக்கிறது.





• எமி

புயல் கிளப்பும் பூமிகா!

– ஸ்ரீ சக்கரம்

படங்கள்: வர்ஷா

அட்டை வண்ணப்படம்: ஜெயகுமார்

அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!!

சலுகை, சலுகை மேல் சலுகை, இலவச நூல்கள், தவணை முறை ஆகிய அனைத்தும் உண்டு.

தமிழ்ப்புத்தக வரலாற்றில் வர்த்தமானன் பதிப்பகத்தின் மாபெரும் புரட்சி !

மாபெரும் முன்வெளியீட்டுத் திட்டம்



திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளார்

அருளிய

திருவருட்பா

மூலமும் உரையும்

4000 பக்கங்களுக்கு மேல் 8 தொகுதிகளில்

விலை ரூ.1250.

சலுகை விலை ரூ.750

திருவருட்பா (8 தொகுதிக்ள்)	ரூ. 1250.00
வடலூர் சுத்த சன்மார்க்க நிலையத் தலைவர் **அருட்செல்வர் டாக்டர். நா. மகாலிங்கம்** அவர்கள் வழங்கும் உதவித்தொகை	ரூ. 300.0(
	ரூ. 950.00
முன்வெளியீட்டுச் சலுகை	ரூ. 200.00
சலுகை விலை	ரூ. 750.00

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவ சமயத்துக்கு ஆற்றிய அளப்பரும் தொண்டினை நாடு அறியும். அத்தகைய அருளாளர் வழியிலேவந்தவர், அருட்பிரகாச வள்ளலார். 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ!' என வள்ளலார் உரைப்பது கருதத்தக்கது.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி
என்பது அவர் அருளிய மந்திர மொழியாகும்.

வள்ளலார் இரக்கமே உருவானவர். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் அவரது உள்ளம் வாடியது இதனால் தான்! இந்த இரக்க உணர்வை இராமலிங்க அடிகளார் பல பாடல்களில் பாடியிருக்கிறார். எடுத்துக் காட்டாக இதோ ஒரு பாடலின் பகுதி :


"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் ; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்!"

வள்ளலார், குற்றமே இல்லாத சித்தராக் - மெய்ஞ்ஞானியாக - தவயோகியாக - ஜீவன் முக்தராகத் திகழ்ந்தவர்.

மனித வாழ்வில் ஒரு தவறும், ஒருகுறையும், ஒரு குற்றமும் நேரக் கூடாது என்பது வள்ளலார் உணர்த்தும் வாழ்வு நெறி.

அடிகள் அருட் கவிஞர் என்பதற்கு அவர் அருளிய திருஅருட்பா சான்று. அடிகள் அருள் ஞானி என்பதற்கு அவர் பெற்ற திருஅருட் பிரகாச வள்ளலார் என்ற பெயரே சான்று! வள்ளலார் பேசுவது இறைவன் பேசுவதாகவே ஆகிறது. 'நான் உரைக்கும் வார்த்தை எல்லாம் நாயகன் தன் வார்த்தை' என்று கூறுவது திரு அருட்பாவுக்கு மிகப் பொருத்தமாகும்.

நெப்போலியனின் படை வீரன் ஒவ்வொருவனும் தன்னுடைய தோளில் தொங்கும் பையில் சேனாதிபதிக்குரிய சின்னத்தை வைத்திருந்தான் என்று சொல்வதுண்டு. அதன் பொருள் என்னவென்றால், அவனுக்கும் ஒரு நாள் சேனாதிபதி பதவியை வகிக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்பது தான் ! அது போல நாம் அனைவரும் மரணமிலாப் பெரு வாழ்வைப் பெறத் திருவருட்பாவினைக் கையில் ஏந்துவோமாக!



இந்நூல்களைத் தபாலில் பெற, சலுகை விலையான ரூ. 750/- இல் ரூ.350/- (M.O./D.D.) மட்டும் அனுப்பிப் பெயரைப் பதிவு செய்து கொள்க! (DD யினை Varthamanan Pathippagam என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்புக).

நூல்கள் அனுப்புவது எப்போது? பணம் வந்த வரிசைப்படி இம்மாதம் 21ஆம் (21.03.2002) தேதியிலிருந்து நூல்கள் (இலவச நூல்கள் உட்பட) V.P.P. பார்சல் மூலம் இரண்டு கட்டுகளாக அனுப்பப்படும். மீதித் தொகை ரூ.400/- தபால் செலவு மற்றும் கட்டுச் செலவு (2 கட்டுகளுக்கும்) ரூ.100/- சேர்த்து ரூ.500/- செலுத்திப் பெற்றுக் கொள்க.

அருட்செல்வர்
டாக்டர் நா. மகாலிங்கம்
அவர்களின்
80 ஆம் ஆண்டு
பிறந்த நாள்
சிறப்பு வெளியீடு !

நேரில் பணம் செலுத்த விரும்புவோர் கவனிக்க : தவணை முறையிலோ (அ) ஒரே தவணையிலோ எமது அலுவலகத்தில் பணம் செலுத்தி முறையான ரசீது பெறலாம். ரசீதினில் குறிப்பிடும் தேதியில் நூல்களை நேரிலேயே பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 8.00 மணி வரை உணவு இடைவேளையின்றி. ஞாயிறு வார விடுமுறை.

❁ M.O. / D.D. மூலம் பணம் அனுப்புவர்களுக்குத் தபால் மூலம் தான் நூல்கள் அனுப்பப்படும். நேரில் தரப்படமாட்டாது. ❁ Cheque ஏற்கப்படமாட்டாது.

இலவச நூல்கள் (ரூ.150 மதிப்புடையவை)
1. ஜோதி வழியில் வள்ளலார்
2. திருவருட்பா திருவமுதத் திரட்டு
இந்தச் சலுகைகள் (இலவச நூல்கள் உட்பட) அனைத்தும் 20.03.2002க்குள் பணம் அனுப்பிப் பெயரைப் பதிவு செய்வோர்க்கு மட்டுமே உண்டு.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :
VARTHAMANAN PATHIPPAGAM
15, Sarojini Street,
T. Nagar, Chennai - 17.
(Near Usman Road Gitanjali Hotel)

இந்நூலிற்கு உரைவகுத்த பெரும் **புலவர் மாணிக்கனார் எம்.ஏ.,** அவர்கள் பல ஆண்டுகள் அ.மா. ஜெயின் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவர்; சங்க இலக்கியங்கள் அனைத்திற்கும் எளிய தமிழில் இனிய முறையில் உரைவகுத்தவர்; இதுவரை உரைகாணாமல் இருந்த கந்தபுராணத்திற்கு உரை வகுத்துச் சாதனை புரிந்தவர்; இவை தவிர, திருப்புகழ், திருமந்திரம், வில்லி பாரதம், பெரிய புராணம் ஆகியவற்றிற்கும் உரை கண்டவர். தற்காலம் இவரைப் போல் பண்டை இலக்கியங்களுக்கு உரை காண்போர் யாரும் இல்லை. இந்த அளவில் உரைப் பெருக்கத்தின் பரப்பளவை நோக்கும் போது இவரைத் தற்கால நச்சினார்க்கினியர் எனத்துணிந்து கூறலாம். **இவரது பண்பட்ட அனுபவத்தின் வெளிப்பாடாகத் தற்போது திருவருட்பா வெளிவருகிறது.**

ஜெயலலிதாவின் புதிய டீம்!

“பன்னீர் செல்வம் போன்ற தூய தொண்டனைப் பெற்றதில் பெருமையடைகிறேன்” என்று சில நாட்களுக்கு முன் சொன்னார் ஜெ. அப்படிப்பட்டவருக்கு அமைச்சரவையில் இரண்டாம் இடத்தைக் கொடுத்து, கூடவே பசையுள்ள பொதுப்பணித்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை என்று வழங்கியிருக்கிறார் ஜெ. இனி யாருடைய செல்வாக்கு அந்தத் துறைகளில் கோலோச்சும் என்பது வெளிப்படை.



நீதிமன்ற விவகாரங்களில் பரிச்சயமான பொன்னையனிடமிருந்து 'சட்டம்' பிடுங்கப்பட்டிருக்கிறது. தடுமாறும் நிதி'யை அவர் முழுமையாகக் கவனிக்க வேண்டும் என்று ஜெ. விரும்புகிறார்.

மின்சாரத்தை ஜெயக்குமாரிடம் இருந்து எடுத்து, அவருக்குச் சட்டத்தையும், ஷாக்கையும் சேர்த்தே கொடுத்திருக்கிறார் ஜெ! தோழியின் கணவரைப் பகைத்துக் கொண்டதால் தளவாய், வருவாய்க்கு தள்ளப்பட்டிருக்கிறார் என்கிறார்கள். போக்குவரத்து தொழிலாளர் வேலை நிறுத்தத்தைக் கையாண்டதற்குப் பரிசா, பனிஷ்மெண்டா என்று தெரியாத நிலையில் நைனார் நாகேந்திரனுக்கு மின்சாரம் பாய்ச்சப்பட்டிருக்கிறது.

தம்பிதுரை, பி.ஸி. ராமசாமி, செம்மலை, துரைராஜ், தனபால், ஜீவானந்தம், வளர்மதி ஆகியோர் தலை தப்பியதோடு போனஸாக இலாக்காக்களும் மாற்றப்படாமல் தப்பியுள்ளனர்.

காளிமுத்துவுக்கு மாற்றம் வரும் என்று அனைவரும் எதிர்பார்க்க, சபாநாயகராகவே நீடிக்கிறார் அவர்!

வழக்கமாக எல்லா அமைச்சரவையிலும் ஒரு முஸ்லீம் அமைச்சரைப் போட்டு, அவரிடம் வக்ப் துறையை ஒப்படைப்பார்கள். ஆனால் மரபை மீறி, நடராஜன் என்ற புதிய அமைச்சருக்கு வக்ப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார் ஜெ.


சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த மில்லர் என்பவருக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 'இந்துத்வா அமைப்புகளோடு ஜெ. நெருங்கிப் போகிறார்' என்ற பொருமல் சிறுபான்மை சமூகத்திடம் ஏற்கெனவே இருக்கிறது.

தி.மு.க.வைப் போலல்லாமல் அ.இ.அ.தி.மு.க.வில் ஒரு சிறப்பு என்னவென்றால், கட்சியிலோ அல்லது அரசிலோ யாருக்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் பொறுப்பு கிடைக்கலாம் அல்லது பறிக்கப்படலாம் என்ற நிலை!

உதாரணமாக சென்ற அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்ட விஸ்வனாதன் மீண்டும் அமைச்சராகியிருக்கிறார்.

கட்சி உயிர்த் துடிப்போடும், தலைமையின் மீது முழு விசுவாசத்தோடும் இருப்பதற்கு அம்மாவின் இந்த அணுகுமுறை ஒரு முக்கியக் காரணம்!

— கௌசி





2002 மார்ச் 10
விஷு மாசி 26
மலர் : 60
இதழ் : 32

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பி.ஜே.பியின் படுதோல்வி!

"வட மாநில தேர்தல்களில் பி.ஜே.பி. அடைந்த தோல்வியை மத்திய அரசு பேரிலான மக்கள் விமர்சனமாகக் கொள்ள முடியாது" என்பது பிரதமரின் கூற்று! தேர்தலுக்கு முன்னரும் அவர் அப்படியேதான் பேசினார் :

"மாநிலங்களில் பி.ஜே.பியின் வெற்றி - தோல்வி, மத்திய அரசைப் பாதிக்காது" என்றார்.


ஆனால், பிரதமரின் தேர்தல் பிரசார பேச்சுக்களில் அடிபட்டவை, மாநிலங்களுக்கான செயல்திட்டங்களோ தொழில் திட்டங்களோ அல்ல... மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள விஷயங்களும் பிரச்னைகளுமே அவரால் பேசப்பட்டன.

இந்தோ - பாக் உறவுகள், 'முஷாரஃப்புடன் பேச மாட்டோம்' என்ற பிடிவாத உறுதிமொழி, 'எல்லையில் ராணுவக் குவிப்பு தொடரும்' என்ற சூளுரை, ராம ஜன்ம பூமி பிரச்னை குறித்த பி.ஜே.பியின் தன்னிலை விளக்கம்...

- இவையே வாஜ்பாயின் தேர்தல் பிரசார உரைகளில் அதிகம் அலசப்பட்டன.

மத்திய அரசின் செயல்பாடைப் பிரகடனப்படுத்தி, மத்திய அரசின் அமைச்சர்களும் பிரதமரும் மாநிலங்களில் போய் வோட்டுக் கேட்டுவிட்டு, 'தேர்தல் முடிவுகள் மத்திய அரசின் பேரிலான விமர்சனம் இல்லை' என்று எவ்வாறு கூறலாகும்?

உத்தர பிரதேசத்தில் மிக வலுவாக இருந்த பி.ஜே.பி, அதிர்ச்சிதரும் தோல்வியைச் சந்தித்



திருக்கிறது.

பழைய உ.பியின் பகுதியான உத்தராஞ்சல் மாநிலத்திலும் படுதோல்வி.


பஞ்சாபில், பி.ஜே.பி. இடம் பெற்ற சமாஜ்வாதி அகாலிதளம் கூட்டணி, காங்கிரஸிடம் தோற்க, மணிப்பூரிலும் மெச்சிக் கொள்ளும்விதமான அளவில் பி.ஜே.பி. இடங்களைப் பிடிக்கவில்லை.

இதற்கெல்லாம் தார்மிகப் பொறுப்பேற்று பிரதமர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று யாரும் கேட்கவில்லை. ஆனால், பி.ஜே.பியின் தோல்விக்கும் இழப்புகளுக்கும் என்ன காரணம் என்பதை அவரும் அவரது சகாக்களும் ஆராய்ந்து பார்த்துச் சுயவிமர்சனம் செய்து கொள்வது மிக அவசியம்.

'முஸ்லிம் வோட்டுகள் வராவிட்டால் பாதகமில்லை; அவை இல்லாமலே பி.ஜே.பி. வெற்றி பெறும்' என்று அவசரப்பட்டு அறிக்கைவிட்ட பிரதமர், பின்னர் தாம் அவ்வாறு கூறவில்லை; தமது வார்த்தைகள் திரிக்கப்பட்டன என்று மறுக்க வேண்டியதாயிற்று. எவ்வாறாயினும், பி.ஜே.பியின் ஹிந்து ஆதரவு நிலை என்பது நெடுகிலும் பிரகடனப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் இஸ்லாமியர்களின் வோட்டுக்களைப் பெரிய அளவில் இழப்பது உறுதி.

விச்வ ஹிந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் வேறு, இன்னொரு பக்கம் அயோத்தி பிரச்னையைக் கிளறிக் கொண்டிருக்கின்றன. இவ்வமைப்புகளைச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு, நீதியை மதித்து நடக்கும்படி செய்ய பிரதமரால் இயலாமல் போனது தோல்விதான். தேர்தல் தோல்வியைவிடப் பெரிய தோல்வி இது. இதன் பயங்கர விளைவுகளைதான் இன்று குஜராத்தில் காண்கிறோம். மாநில பி.ஜே.பி.அரசு, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவராமல் கைகட்டி யிருக்கும் கேவலத்தையும் பார்க்கிறோம். வி.எச்.பி. தலைவர்களின் தான்தோன்றித்தனமான பேச்சு, குஜராத்தில் எரியும் நெருப்புக்கு எண்ணெய் வார்த்துக் கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கும் கலவரம் பரவி வருகிறது.

இவையெல்லாம், அமைதியை விரும்பும் பெரும்பான்மையான ஹிந்துக்களின் மனத்தில் அச்சத்தையும் அருவருப்பையும்தான் ஏற்படுத்தும்.



உள்நாட்டில் வகுப்பு மோதல்களற்ற அமைதி, அண்டை நாடுகளுடன் நல்லுறவு என்ற நிலையைத்தான் சராசரி இந்தியன் விரும்புகிறான்.

இதைத் தவிர அவன் விழைவது அடிப்படைத் தேவைகளின் பூர்த்தியைத்தான். உண்ண உணவும் உடுத்த உடையும் கட்டுப்படியாகிற விலையில் கிடைக்க வேண்டும். இதற்கு விலைவாசி கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்; உற்பத்திப் பெருக்கமும் பொருளாதார மேம்பாடும் வேண்டும்.

மத்திய அரசால் இந்த அம்சங்களையெல்லாம் திருப்திகரமாக வழங்க முடிந்திருக்கிறதா என்று பார்த்தால் ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது.

இந்த ஏமாற்றத்தின் பிரதிபலிப்பு வட மாநிலங்களில் நடந்த வாக்குப் பதிவில் நன்றாகவே தெரிகிறது. பின்னர் வந்த பட்ஜெட் இந்த ஏமாற்றத்தை மேலும் அதிகரித்திருக்கிறது.

நிதர்சனத்தை ஏற்க மறுத்து, தேர்தல் முடிவுகள் மத்திய அரசை பாதிக்காது என்று தட்டிக் கழிப்பது விவேகமன்று.

'1991ல் தொடங்கிய பொருளாதார சீர்திருத்தங்கள் வலுவிழந்து அடங்கிவிட்டன' என்று தேசிய பொருளாதார ஆய்வு அறிக்கை கூறுகிறது.

இவ்வறிக்கையை மக்களவையில் சமர்ப்பித்த நிதியமைச்சர், வேலை வாய்ப்புப் பெருக்கத்திலும் உற்பத்திப் பெருக்கத்திலும் நாடு வெகுவாகப் பின் தங்கிவிட்டதை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு ஒருபுறம் பொருளாதாரம் நலிவடைய, மறுபுறம் அண்டை நாடுகளுடன் நல்லுறவு இல்லாததால் ராணுவச் செலவுகளும் பாதுகாப்புச் செலவுகளும் அதிகரிப்பது இருமுனை அபாயம்.

பின்னதைக் குறைக்க 'பாக்'குடன் பேச்சுவார்த்தை மூலம் முயற்சி செய்ய வேண்டும். முன்னதைச் சீர் செய்ய, அதிகாரிகளின் ஆற்றலையும் வல்லுனர்களின் அறிவுரையையும் கேட்டுப் பெற வேண்டும். மத்திய அரசு இதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து நடைமுறைப் படுத்தாவிட்டால், மாநில தேர்தல்களில் பி.ஜே.பிக்குக் கிடைத்த தோல்வி நாடாளுமன்றத் தேர்தலிலும் தொடரவே செய்யும். ○



“உலகிலேயே மிக போரான விஷயங்கள் கம்ப்யூட்டர், டி.வி. மற்றும் நியூஸ் பேப்பர்கள்,” என்று தடாலடியாகக் கூறியிருக்கிறார் கார்ட்டூன் மாமேதை ஆர்.கே. லக்ஷ்மண்.

‘இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் கார்ட்டூனிஸ்ட்ஸ்’ என்ற அமைப்பு லக்ஷ்மணுக்கு ‘வாழ்நாள் சாதனையாளர்’ விருது கொடுத்து கௌரவித்திருக்கிறது. அதைப்பெற்றுக் கொள்ள, சமீபத்தில் லக்ஷ்மண் தமது மனைவியுடன் பெங்களூர் வந்திருந்தார்.

“சுமார் பத்து வருடங்களுக்கு முன் வரை பயங்கரவாதம் என்ற சொல்லை யாரும் கேட்டதில்லை. முன்பெல்லாம் ப்ளேனில்



கப்பன்பார்

போவதைக் கௌரவமாகக் கருதினோம். ஆனால் இன்றோ பயணிகளையே சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறார்கள். கம்ப்யூட்டர், மற்றவன் என்ன பண்ணுகிறான் என வேவு பார்ப்பதற்கு இன்று உபயோகிக்கப்படுகிறது” என்று டெக்னாலஜியைக் கிண்டினார்.

திருவாளர் பொது ஜனத்தைப் பற்றி கூறுகையில் “இந்நாட்டின் மௌன மெஜாரிட்டியின் ஒட்டுமொத்த பிரதிநிதி அவர்” என்றார்.

வளரும் கார்ட்டூனிஸ்டுகளுக்கு அவர் சொன்ன அறிவுரை, உடல் ஊனமுற்றவர்களைக் கேலிச் சித்திரமாக்காதீர்கள் என்பதே.

அரசியல் தலைவர்கள் கார்ட்டூன்களைப் பற்றிப் பேசும்போது உற்சாகமாகிப் போனார் லக்ஷ்மண்.

“லாலு, ஜெயலலிதா, கருணாநிதிதான் எனக்கு வரைவதற்கு அதிகம் பிடிக்கும். ஒருமுறை ராஜீவ் காந்தி என்னைச் சந்தித்தபோது, ‘‘எனக்கு உங்கள் கார்ட்டூன் மிகவும் பிடிக்கும். ஆனால் நீங்கள் என்னைக் குண்டாக வரைந்து விடுகிறீர்கள்’’ என்றாராம் தமாஷாக!

மக்ஸேஸே விருது பெற்ற லக்ஷ்மணுக்கு ஒரு விநோத விசிறி. இவருடைய ஒவ்வொரு கார்ட்டூனுக்கும் அன்பளிப்பாக மூன்று ரூபாய் அனுப்புவாராம்.





கச்சேரிகள்!

கடந்த ஐந்து மாதங்களில், கர்நாடகா காவல் துறையில் சுமார் ஒன்பது பேர் மாரடைப்பு வந்து இறந்து போயிருக்கிறார்கள். பணியில் இறுக்கம் அதிகமென்பதால் இவ்வாறு நிகழ்கிறதாம்! இதைத் தடுக்க பெங்களூர் போலீஸ் மற்றும் வோக்கார்ட் ஆஸ்பத்திரி, ஹார்ட் இன்ஸ்டிட்யூட்டுடன் சேர்ந்து 'ப்ராஜக்ட் ஹார்ட் லைஃப்' என்று ஒரு பயிலரங்கம் நடத்தியது. போலீஸ் கமிஷனர் ஹெச். டி. சங்லியானா இந்தப் பயிலரங்கத்தைத் தொடங்கி வைத்தார். ஈஸிஜி போன்ற பரிசோதனைகள் இலவசமாகச் செய்யப்பட்டன.

''போலீஸ்காரர்கள் இறுக்கமான வாழ்க்கை வாழ்கிறார்கள். இதனால் பலவித இதய நோய்களால் பாதிக்கப்படுகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக இதய நோய் வருவதைத் தடுக்கலாமே'' என்றிருக்கிறார் சங்லியானா. இத்துடன் நில்லாமல் போலீஸ்காரர்களுக்கு அறிவுரையும் வழங்கியிருக்கிறார்.

ஆனால் பயிலரங்கத்துக்கு வந்த காவல் துறையினர் கில்லாடிகள்! மது, சிகரெட் போன்ற பழக்கங்கள் இருந்தபோதும் மேலதிகாரிகளின் மிரட்டல்தான் தங்கள் உடல்நிலையை அதிகம் பாதிப்பதாகச் சொல்கிறார்கள்!

கப்பன் பார்க்கில் அதிகாலை வாக்கிங் போகிறவர்களுக்கு ஓர் இனிய பரிசு. இனி ஒவ்வொரு ஞாயிறும் சுமதுர இன்னிசைக் கச்சேரியைக் கேட்டுக் கொண்டே வீறுநடை போடலாம். 'உத்யான தல்லி உதயராகா' (உத்யானவனத்தில் உதயராகம்) என்று பெயர் கொண்ட இந்த நிகழ்ச்சி காலை ஏழு மணியிலிருந்து எட்டு மணி வரை நடைபெறும். கடந்த வாரம் பி.சங்கர் ராவின் அருமையான புல்லாங்குழல் கச்சேரி. இனி வளரும் இசைக் கலைஞர்களுக்கு பார்க்கில் கச்சேரி செய்ய வாய்ப்பு கொடுக்கப்படுமாம். கன்னடம் மற்றும் கலாசாரத் துறை அமைச்சரான ராணி சதிஷ்தான்



இந்தக் கச்சேரி ஐடியா கொடுத்தவர்.

பொது மக்களிடமிருந்து அமோக வரவேற்பு கிடைக்கவே, அமைச்சர் குஷியாகி மைசூர், மங்களூர், குல்பர்கா, பெல்காம் போன்ற ஊர்களிலும் பார்க் கச்சேரி நடத்த திட்டமிட்டிருக்கிறாராம்.

அபிஷேகத்துக்கு ஐம்பது லட்சம் செலவு என்றால் ஆச்சர்யமாயில்லை! 42 அடி உயர சிலைக்கு இளநீர் கரும்புச்சாறு, மூலிகைக் கூழ், சந்தனம் கொண்டு அபிஷேகம் என்றால் செலவாகாதா பின்னே! அபிஷேகத்துக்குரியவர் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட பாகுபலி! பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு முறை இவருக்கு மஸ்தாபிஷேகம் நடைபெறும். கார்கலா நகரில் இவ்வருடம் அதைக் களைகட்டச் செய்யவிருப்பவர் எஸ்.எம்.கிருஷ்ணா! விழாவின் மொத்த செலவு ஐம்பது லகரமாம். மெகா சாமி. மெகா செலவு!

'கல்பதரு' என்ற சிறப்புப் பெயர் பெற்ற தும்கூர், விழாக் கோலம் பூண்டு ஜொலித்தது. கன்னட சாகித்ய சம்மேளனம் மிகப் பெரிய அளவில் இங்கு நடைபெற்றது. ஆயிரக் கணக்கான இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள் கலா ரசிகர்கள் இதில் பங்கு பெற்றனர். விழாவுக்கு முன்னர் குழப்பம் பின்னர் குழப்பம், சண்டை, அவதி இடையே என்று சம்மேளனத்தின் தலைவர் யு.ஆர்.அனந்தமூர்த்தி கருத்து வேறுபாடு காரணமாக இதில் கலந்து கொள்ளவே போவதில்லை என அறிவிக்க, அவரைச் சமாதானப்படுத்தினார்கள். பிறகு சம்மேளனம் தும்கூரிலா உடுப்பியிலா என்று சண்டைப் பிடித்துக் கொண்டார்கள். விழாவிலும் பல குழப்பங்கள். அரசு ஊழியர்களுக்கு 'பாஸ்' கிடைக்காததால் உள்ளே நுழைய அனுமதி கிடைக்கவில்லை. விடுவார்களா? கத்தி, ஆர்ப்பாட்டம் செய்து, கேரோ செய்துவிட்டார்கள்! 'ஒரு நாள் ஊதியத்தை இந்த சம்மேளனத்திற்காக கொடுத்திருக்கிறோம். அதற்கு இந்த மரியாதை தானா எங்களுக்கு?' என பல அரசு ஊழியர்கள், பொருமியிருக்கிறார்கள்.

- லதா சேகர்

PAY NO INCOME-TAX UPTO RS,1,89,000

JEEVAN SANCHAY AND CHILDREN'S MONEY BACK POLICIES WITH GUARANTEED RETURN UPTO 10.77% CLOSES 15th & 30th MARCH RESPECTIVELY

LIC JEEVAN SANCHAY POLICY WITH GUARANTEED TAX FREE RETURN AND LIFE COVER FOR Rs. 1,00,000/-SUM ASSURED WITH ACCIDENT BENEFIT

Age	Policy Term yrs.	Yearly Premium Rs.	Money Back Payments Rs.	Maturity Amount with G.A.&L.A. and 10% compounded value of money back returns	Yield %
30	25	5594	15000 every 5 yrs	Rs. 4,97,136	10.16
35	20	7306	20000 every 5 yrs	Rs. 3,78,630	10.23
40	15	9634	25000 every 5 yrs	Rs. 2,60,107	9.6
43	12	11496	20000 every 4 yrs	Rs. 2,28,154	10.77

LIC JEEVAN SURAKSHA PLAN WITH 100% TAX EXEMPTION REINTRODUCED

ASK FOR FREE PAMPHLET & FULL DETAILS

RSN ENTERPRISES


4850078, 4850539
4345101, 4345263
e-mail :rsn40@yahoo.com

West Mambalam Office : 40/32, Govindan Road, West Mambalam, Ch-33. (Near Srinivasa Theatre)
T. Nagar Office : 23, Rameswaram Road, T. Nagar, Ch-17. (Near Ranganathan Street)

பல வருடங்களுக்கு முன்னால் 'சந்திரலேகா' என்ற தமிழ் சினிமா படத்தில் ஒரு சர்க்கஸ் காட்சி. சர்க்கஸ் கூடாரத்தின் ஒரு பகுதியில் அதன் மானேஜர், தமக்கு முன்னால் உள்ள கணக்கு புத்தகத்தைப் பார்த்துக் கொண்டு ஆழ்ந்த கவலையில் இருக்கிறார். ஏனென்றால் அவருடைய கணக்கு புத்தகத்தில் வரவு செலவு கணக்கு சரியாக இல்லை. திடீரென்று அவர் முகத்தில் ஒரு பிரகாசம். தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறார். ஆம்! இப்படித்தான் கணக்கு எழுத வேண்டும். கணக்கை எழுதுகிறார்:

"யானைக்கு அல்வா வாங்கிப் போட்டது ரூ. 1000/-

குதிரைக்கு குலோப்ஜாமூன் வாங்கிப் போட்டது ரூ. 2000/-"



ஏற்போக்கு பட்ஜெட்!

அவருக்கு வரவு செலவு கணக்கு சரியாகி விடுகிறது. திருப்தியுடன் எழுந்திருக்கிறார்.

நமது மத்திய நிதி அமைச்சர் சின்ஹா, 2002 - 2003 ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது, இந்த யுக்தியைத்தான் கையாண்டிருக்கிறாரோ என்ற சந்தேகம் எழுகிறது. பல வரி விதிப்புகள் காரண காரியமின்றி நிகழ்ந்திருக்கின்றன. சில வரிச் சலுகைகளினால் பொது மக்களுக்கு எந்தவிதமான சௌகரியமும் ஏற்படப்போவதில்லை. உதாரணத்துக்குச் சில [illegible]றைப் பார்ப்போம்.

சமையல் கேஸ் ரூ. 40/- விலை ஏறிவிட்டது. மண்ணெண்ணெய் ஒரு லிட்டருக்கு ரூ. 1.50 அதிகரிப்பு. இன்று சமையல் கேஸ் இல்லாத வீடே இல்லையென்று சொல்லலாம். இந்த 40/- ரூபாய் விலை உயர்வு எல்லா நடுத்தர மக்களையும் மிகவும் பாதிக்கும். இந்த விலை உயர்வை ரூ. 20/- ஆக குறைக்கலாம். மண்ணெண்ணெய் உயர்வும் நியாயமில்லை. யார் மண்ணெண்ணெய் உபயோகிக்கிறார்கள்? பெரும்பாலும் ஏழை எளிய மக்கள்தான்.

பெட்ரோல் விலை குறைவினாலும், டீசல் விலை குறைவினாலும் பஸ் கட்டணமோ, ரயில் கட்டணமோ அல்லது லாரிகளின் மூலம் அனுப்பப்படும் சரக்குகளின் விலையோ குறையப் போவதில்லை. தனிப்பட்ட முறையில் காரோ அல்லது 2 சக்கர வாகனங்களோ வைத்திருப்பவர்களுக்குச் சிறிய தொகை மிச்சப்படும். ஆனால் இது அவர்களுடைய சேமிப்பைக் கணிசமாக உயர்த்தாது.

கார்டு, கவர், இன்லேண்ட், உள்நாட்டுக் கவர் எல்லாமே மிகவும் விலை உயர்த்தப்

பட்டிருக்கிறது. தபால் இலாகாவின் சேவை மிக உயர்ந்த அளவில் இருந்தால் இந்த விலை உயர்வை ஏற்றுக் கொள்ளலாம். இன்று கூரியர் சர்வீஸ் மிகப் பெரிய அளவில் நடைபெறுவதற்குத் தபால் இலாகாவின் திறமையின்மையே காரணம். இந்தத் தருணத்தில் இந்த விலை உயர்வு ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. முழுக் கட்டண உயர்வையும் வாபஸ் பெறுவதே நல்லது.

நேர்முக வரியாக, ரூ. 60,000/-க்கு அதிகமாக வருமானம் உள்ளவர்களுக்கு 5% உபரி வரி. இது என்ன நியாயம்? இன்று சாதாரணமாக 4 பேர் கொண்ட குடும்பத்தை நடத்த மாதம் ரூ. 10,000/- வரை செலவாகிறது. இந்த 5% உபரிவரி மத்தியதர வர்க்கத்தினரை மிகவும் பாதிக்கும்.

சேமிப்புகளுக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. வருங்கால வைப்பு நிதி மற்றும் தபால் அலுவலக சேமிப்புக் களுக்கு வட்டிவிகிதம் குறைத்திருப்பது நியாயமே அல்ல. அரசாங்கம் கட்டுக்கடங்காமல் போகும் தனது செலவை ஈடுகட்ட சிறுசேமிப்பாளர்களின் வட்டி விகிதத்தில் கைவைத்திருக்கிறது!

இதுபோல் இன்னும் பல அம்சங்களில் இந்த பட்ஜெட் மிகவும் பாரபட்சமாக அமைந்திருக்கிறது. அளவுக்கு மீறிப் போகும் அரசு செலவினங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் மேலே சொன்ன சர்க்கஸ் கதையின் உத்தியைத்தான் நிதி அமைச்சர் கையாண்டிருக்கிறார்.

இந்த வரவு செலவு திட்டத்தை நிதி அமைச்சர் சின்ஹா ஐந்தாவது ஆண்டாகச் சமர்ப்பிக்கிறார்.. ஐந்தாண்டு காலமாக ஒரு பணியைச் செய்து வரும் அமைச்சர், புதிய நோக்குடன் அதை அணுகத் தவறிவிட்டார்.

மொத்தத்தில் இந்த வரவு செலவு திட்டம் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படாது. பல இனங்களில் தேக்கம் ஏற்படும். சேமிப்பு குறையும். சின்ஹாவின் வரவு செலவு திட்டத்தை ஆளுங்கட்சியைத் தவிர மற்றவர்கள் குறை கண்டிருக்கிறார்கள். இதனால் பட்ஜெட் சட்டமாவதற்கு முன்பு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மனத்திற்கொண்டு பல அம்சங்களை மறு பரிசிலனை செய்ய வேண்டும்.


– வி. கோபாலன்

கல்கி – VBC Jewellery

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி - 1 முடிவுகள்

'கண்டேன் கடவுளை' என்ற தலைப்பில் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் வாசகங்கள் எழுதியனுப்பச் சொல்லிக் கேட்டிருந்தோம். வந்து குவிந்தவற்றில் மூழ்கி இரண்டு முத்தான வாசகங்களைத் தேர்ந்தெடுத்து, தலா நான்கு கிராம் தங்கம் பரிசு தந்திருக்கிறோம்.



பரிசு பெறும் வாசகங்கள்:

இடிக்கவே முடியாத மசூதியெங்கும் கட்டவே முடியாத கோயிலெங்கும் கடவுளை நான் காண்கிறேன்.

இ. கஸ்தூரி,
274/111 விநாயகர் காலனி,
அகஸ்தியர்பட்டி - 627416.

நம்பிக்கையோடு வோட்டுப் போடும் அப்பாவி முகத்திலே, கண்டேன் கடவுளை!

தன. புகழேந்தி,
8. AG. பிளாக்,
பல்லக்குமாநகர்,
சென்னை - 4.

தங்கம் வென்றவர்களுக்கு வாழ்த்துகள்!

மிகக்கவர்ச்சிகரமான
அதிநவீன சமையலறை,
உங்கள் தேவைக்கேற்ப
குறைந்த விலையில்

விஸ்வகர்மாவின் புதிய சமையலறை மாடல்
உங்கள் கண்களுக்கு விருந்து. நீடித்து உழைப்பது.
குறைந்த விலை, தாராளமான வடிவமைப்பு.
இன்றே விஸ்வகர்மாவிற்கு வருகை தந்து
நீங்கள் இதுவரை கண்டிராத அற்புதமான
சமையலறை மாடலை கண்டுகளியுங்கள்.

அனைத்து விதமான
உயர்தர ஃபர்னிச்சர்களும்
எங்களிடம் கிடைக்கும்.
அத்துடன், உங்கள்
விருப்பத்திற்கேற்ப
வடிவமைத்தும் தரப்படும்.



தமிழ்நாட்டின் அனைத்து இடங்களிலும் எங்கள் சர்வீஸ் உண்டு

ஸ்ரீ விஸ்வகர்மா
இண்டீரியர் & ஃபர்னிச்சர்
குனா காம்ப்ளெக்ஸ், 304, அண்ணா சாலை, (தேனாம்பேட்டை சிக்னல் அருகில்)
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. போன் : 4353233 செல் : 98410 66007
We accept Master / VISA, American Express & BOB Cards. Car parking facility available.
டீலர்ஷிப் விசாரணை வரவேற்கப்படுகின்றன

உங்கள்
இல்லத்திற்கு /
அலுவலகத்திற்கு
இன்டீரியர் டெகரேஷன்
உங்கள் தேவைக்கேற்ப
செய்து தருகிறோம்.
குறைந்த செலவில்.

மாங்கல்யம் மேரேஜ் மேட்சிங் சென்டரில்

திருமண தகவல் புரட்சி!


உங்கள் வீட்டில் மேள, தாளத்தோடு கல்யாணம் காணும் கனவில் இருக்கும் கன்னியருக்கோ, காளையருக்கோ நல்லதொரு இல்லற ஜோடியை தேடித்தரும் பொறுப்பை உங்களின் 'மாங்கல்யம்' ஏற்றுக் கொள்கிறது.

அவரவர் வசதிக்கேற்ப உடனே திருமணம் நடைபெற, நீண்ட நாட்களாக திருமணம் ஆகாதவர்கள், தங்களுக்குப் பொருத்தமான வரனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமா ? உங்களுக்கு உதவ 'மாங்கல்யம்' தயாராக இருக்கிறது.

மதம், இனம், உட்பிரிவு, கோத்திரம், உயரம், கல்வித் தகுதி, வேலை, வேலை பார்க்கு மிடம், வயது வரம்பு இவற்றுடன் தினம், கணம், மாகேந்திரம், ஸ்த்ரீ தீர்க்கம், யோனி, ராசி, ராசி அதிபதி, வசியம், ரஜ்ஜு, நாடி ஆகிய பத்து பொருத்தங்களும் உள்ளவா என பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஜாதகங்களிலிருந்து ஆராய்ந்து சிபாரிசு செய்கிறோம். அனைத்து சாதி, மத உட்பிரிவினரும் பதிவுசெய்து கொள்ளலாம். கணிப்பொறிமயமாக்கப் பட்ட (இன்டர்நெட், வெப்சைட்) உலகளாவிய திருமண தகவல் மையம் மூலம், ஜோதிட பொருத்தங்கள் விவரங்களுடன் அனைத்து சமூகத்திலும் அவரவர் தகுதிக்கு மணமகன், மணமகள் புகைப்படத்துடன் விபரங்கள், விலாசங்கள் அறிய பதிவுக் கட்டணம் ரூ.500/- மட்டும். திருமணத்திற்கு பிறகு எந்த கட்டணமும் கிடையாது. பதிவு செய்ய தொடர்புகொள்ளுங்கள் :



மாங்கல்யம்
(உலகளாவிய கணிப்பொறிமயமாக்கப்பட்ட மேரேஜ் மேட்சிங் சென்டர்)
13, பொன்னம்பல வாத்தியார் தெரு, (கபாலீஸ்வரர் கோயில் அருகில்) மயிலாப்பூர், சென்னை - 600 004.
Tel : 4616466, Fax : 4616311 E- mail : sivasiva@vsnl.net



அனைத்து ஜாதி, மதங்களிலும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வரன்கள் உள்ள ஒரே மேரேஜ் மேட்சிங் சென்டர்!

"ஹலோ! அக்கௌண்டண்ட் ஆறுமுகம் மனைவி மங்களம்தானே... உங்க கணவர் ஆபீசிலே நேற்று ஐந்நூறு ரூபாய் லஞ்சம் வாங்கினதா போலீசு கைது பண்ணிட்டுப் போவுது!"

"என்ன அநியாயம் இது! இருநூறு ரூபா வாங்கினதாதானே நேற்று என்னிடம் கணக்கு சொல்லி பணம் தந்தார்!"

- கு. அருணாசலம்





"ஆபீஸ்லே எல்லாரும் தூங்கு றாங்க... நீங்க மட்டும் கொட்டாவி விட்டுக்கிட்டே இருக்கீங்களே... ஏன்?"

"நான் 'ட்ரெய்னிங் பீரியட்'லே இருக்கேன்..."

- தஞ்சை தாமு

"லைப்ரரியனைப் பரீட்சை ஹாலுக்கு இன்விஜிலேட்டரா போட்டது தப்பா போச்சு சார்."

"என்னாச்சு?"

"புத்தகம் வேணும்னு கேட்ட மாணவர்களுக்கெல்லாம் எடுத்துக் கொடுத்திருக்கார்!"

- சீர்காழி வி. ரேவதி




"மன்னா! ஒருவர் புகார் கொடுக்க வந்துள்ளார்..."

"ஆராய்ச்சி மணி அடிக்க வேண்டியதுதானே?"

"ஆராய்ச்சி மணியைக் காணலைன்னுதான் புகார் கொடுக்க வந்துள்ளார், மன்னா!"


- வந்தவாசி பா. ஜெயக்குமார்



"அல்வா எப்படி இருக்குன்னு வாயைத் திறந்து சொல்லுங்களேன்."

- எஸ். மோகன்





BIS அங்கீகாரம் பெற்ற
ஒரே நகை மாளிகை
சேலத்தில் ANS மட்டுமே
gold
ANS JEWELRY
ANS ஜீவல்லரி
Swarnapuri Showroom
284 Omalur Main Road
Swarnapuri, Salem 636004
ஸ்வர்ணபுரி ஷோரூம்
284 ஓமலூர் மெயின் ரோடு
ஸ்வர்ணபுரி, சேலம் 636004
Tel (0427) 440703, 440704
Fax (0427) 442946
Bazaar Showroom
184 Bazaar Street
Salem 636001
கடை வீதி ஷோரூம்
184 கடை வீதி
சேலம் 636001
Tel (0427) 264221, 265180
Fax (0427) 267516
ஸ்வர்ணபுரி ஷோரூம்
916
BUREAU OF INDIAN STANDARDS
ஹால்மார்க்டு கோல்டு
உங்கள் நம்பிக்கைக்குகந்த கோல்டு
World Gold Council
PART OF YOUR CELEBRATIONS. SINCE 1928.



"அந்த மாட்டுத் தரகன் ஏதும் வந்தானா? பணம் கிணம் கொடுத்தானா, பழனாத்தா?"

"அதை ஏங் கேக்குறே?"

டவுன் பஸ் பலத்த ஹாரன் ஒலியுடன் வந்து நின்றது. பக்கத்து ஊர் ஜனங்கள், மூட்டை, கூடைகளுடன் முண்டியேறும் கூட்டத்தில் தவிப்புடன் ஏறினார்கள் பழனாத்தாளும், அருக்காணியும்.

மெதுவாக ஊர்ந்து சென்ற பஸ்ஸுக்குள் காட்டுக் கூச்சல். பூனவாடி நாலு மைல்தான். வழியெல்லாம் நின்னுட்டு இந்த பஸ் போய்ச் சேரும்போது அரைமணியாவது ஆகும். அவரவரும் சொந்தக் கதைகளைப் பேசினார்கள்.

கொங்குஜீவன்


"இப்படித் துப்புக்கெட்ட ஆம்பிளையைப் பாத்ததுண்டா அருக்காணி? எவனோ மாட்டுத்தரகன் வந்தானாம். பேசினானாம். ரெண்டு மூணு தடவை வூட்டுக்கு வந்தான். மாட்டைக் கொடுத்திட்டாரு. இரண்டாயிரத்துக்குக் குறையாமப் போகும். இப்ப மாடும் போச்சு. தரகனைப் பத்தியும் துப்பு இல்லை."

"ஏன் பழனாத்தா? அண்ணன் என்ன வேணுமின்னா மாட்டைப் புடிச்சுக் குடுத்தாரு? ஏதோ நேரம்; புதூர் மாரியப்பன் பேரைச் சொன்னதும் நம்பி வுட்டுட்டாரு."

"ஆமா. இவன் மாரியப்பனைச் சொன்னான். மாட்டைப் புடிச்சுட்டுப் போனதும் வந்த மாரியப்பனைக் கேட்டா, எனக் கொண்ணும் தெரியாதுங்கிறான். என்ன சுந்தரகோளமோ!"

"எல்லாம் ஒண்ணுக்குள்ள ஒண்ணு. உள்வேலையாகக் கூட இருக்கும். பித்தலாட்டக்காரனுக! நம்பவே முடியாது."

சந்தையிலே...



"வாயைத் தொறந்தா மூட மாட்டீங்களே. டிக்கட் வாங்குங்க... வாங்கிட்டு வழியை வுட்டு ஓரமா நில்லுங்க"– கண்டக்டர்.

"ஏங் பேசக் கூட வேண் டாம்ன்னு சட்டமா? ரெண்டு பூளவாடி குடு."

"அல்லே அருக்காணி. சந்தைக்கா? பழனாத்தாளும் வராப்புலே?" கூட்டத்தில் ஒரு விசாரிப்பு.

"ஆமாங்க அத்தை."

"மாட்டுத் தரகனைப் பத்தி துப்பு ஏதும் கெடைச்சதா?"

"இல்லீங்க அத்தை. இன்னைக்குச் சந்தையிலும் தேடிப் பாக்க வேண்டியதுதான். எல்லாம் நேரம்."

பழனாத்தாள் கண்ணில் தரகனின் மீசையும் உருமாலைக் கட்டுமே நின்றன.

"கும்புடுறனுங்கோ!" பவ்யமாகக் கும்பிட்டு நின்றான்.

"நா புதூர் மாரியப்பன் சொந்தக் காரனுங்கோ. மாட்டுத் தரகு தொழிலுங்கோ. இங்க மாடு விக்கணும்னு கேள்விப்பட்டனுங்கோ."

கோடையில் மேய்ச்சலும் இல்லை. தண்ணியும் வற்றி விட்டது. இரண்டு எருமைகளையும், ஆடுகளையும் மேய்த்துக் கட்டுவது பெரும் பாடு. மாட்டை விற்பதாகத் தான் இருந்தனர். எப்படியும் இரண்டாயிரத்துக்குத் தள்ளிவிட வேண்டும். கறவை வேறு நின்று விட்டது.

"எவ்வளவு கறக்குமுங்க?"

வற்றிக் கிடந்தது மாடு.

"என்ன காலைலே ஒரு லிட்டர். சாயந்தரம் ஒரு லிட்டர்."

"விலை என்ன?"

"ரெண்டாயிரத்து இருநூறுன்னா முடிச்சுடலாம்."

"சரி, பார்ப்போம்."

அதற்குப்பின் தரகன் ஒரு தடவை வந்தான், மூங்கில் தொழுவில் மாடு கேட்பதாக... பின் பழனாத்தாள் இல்லாத சமயம் மாட்டை ஓட்டிச் சென்று விட்டான். ஆனால் பணம்தான் சொன்னபடி தரவில்லை. ஏமாந்த பொழப்பை ஊரே பேசிச் சிரித்தது. புருஷனும், பொண்டாட்டியும் இதற்காக அடிக்கடி சண்டை போட்டதே மிச்சம்.

"அறிவுள்ள ஆம்பிள்ளைன்னா இப் படிச் செய்திருப்பியா?"

"என்னடி பண்ணச் சொல்றே. இரண்டு தடவை வந்தபோதும் நல்லாத்தான் பேசினான். இப்படி கழுத்தை அறுப்பான்னு யாருக்குத் தெரியும்?"

"தெரியாத ஆளுகிட்ட மாட்டைப் பிடிச்சுக் குடுக்குறமே. ஒண்ணு யாரையாவது சொல்லச் சொல்லியிருக்கணும். இல்லாட்டி



கதையை விமர்சிப்பவர் பாடகி ஹரிணி.

"நீ நல்லாயிருப்பியாடா! மாட்டைப் புடிச்சுக்கிட்டுப் போயிட்டு, பணம் குடுக்காம ஏமாத்தறியே!" என்று கூவி அழும் பழனாத்தாவின் விம்மல் நெஞ்சைக் கீறுகிறது. உயிரூட்டி உலவவிட்டது போன்ற மனோகரின் படம் கரிசல்காட்டுச் சித்திரம்.



''ஏழாவது வரியைச் சிவப்பு மையால் அடிக்கோடிட்டு வெரிகுட்னு எழுதியிருக்கீங்களே! ஏன் ஸார்?''

''நீ டைப் செய்த ஒரு பக்க கடிதத்தில் அந்த ஏழாவது வரியில் மட்டும்தான் எழுத்துப்பிழை எதுவுமில்லை!''

- உ. ராஜாஜி

பணத்தை வாங்கியிருக்கணும். அந்த அறிவிருந்தா நான் ஏன் சீரழியறேன்?"

"என்னடி! கஞ்சிக்கில்லாம நீ இங்கே சீரழியறே... அறைஞ்சேன்னா பல்லு பேந்துடும்!"

''நீ என்னை அடிச்சுக் கொல்லு. உன்னைக் கட்டிட்டு அழுவுறதுக்கு, செத்தாவது தொலையறேன்!"

ஆத்திரத்துடன் அவளது தலைமயிரைப் பிடித்து இழுத்து அடிக்கத் தொடங்கினான்.

பூளவாடி சந்தை. பெரிய மைதானம். சுற்றியும் அவர்கள். தற்காலிகப் பந்தல்களை மூங்கில் கழிகள் தாங்கிக் கொண்டிருந்தன.

"அருக்காணி. அந்தத் தரகன் மட்டும் கிடைக்கட்டும். பாரு என் ஆத்திரத்தை!''

"அட, நீ சும்மா இரு பழனாத்தா. அவன் தட்டுப்பட்டா, நைஸா பேசி, நாம நம்ம பணத்தை வாங்கிப்புடுவோம்."

தானியக் கடைகள். சர்க்கரை மூட்டைகள். பொரிகடலை. பலசரக்குக் கடைகள்... தாண்டி ஈசான மூலையிலே மாடுகள். ஆடுகள். தரகர்கள். ஆடுகள் 'மேமே' என்று கத்தின. மாடுகள் சோர்ந்து போய்த் தலையை ஆட்டிக் கொண்டிருந்தன. சம்சாரிகளுடன் துண்டுக்குள் கைகளை விட்டு பேரம்பேசிக் கொண்டிருந்தனர், தரகர்கள்.

வாடிய முகத்துடன் கூட்டத்தில் தரகனைத் தேடினாள்.

அதோ... மடித்துவிட்ட முழுக்கைச் சட்டை, மஞ்சள் முண்டாசுடன் இருந்தவனைப் பார்த்தே விட்டாள்.

"அடேய், நீ நல்லா இருப்பியாடா? மாட்டைப் புடுச்சுட்டுப் போயிட்டு பணம் குடுக்காம ஏமாத்தறியே!" கோபத்துடன் அந்தத் தரகனை உலுக்கினாள். வற்றிப் போன அவன் உடம்பில் அவனை அதட்டி அசைக்கும் வலிமை இல்லை.

"என்னை வுடுங்க! நா மாட்டைப் புடிச்ச அன்னிக்கே பணத்தை உங்க புருஷன்கிட்டே கொடுத்திட்டேன்."

பழனாத்தாளின் தலையில் இடியாய் வார்த்தைகள் இறங்க, கண்கள் கரைந்து இருண்டன. கைப்பிடி தளர்ந்தது.

"அடேய் மாரியப்பா! இவரு சொல்றது நெஜந்தானா?"

மென்று விழுங்கினான் மாரியப்பன்.

"நெஜத்தைச் சொல்லுடா!" அருக்காணி உலுக்கினாள்.

"உங்க புருஷன்தான் சொல்ல வேண்டாம்னு சொன்னாங்க."

"அவ்வளவு தூரம் போயிட்டுதா? சரி, பணத்தை என்ன பண்ணினீங்க?"

"சாராயக் கடை பாக்கிக்கே ரூபாய் ஆயிரம்கிட்ட கொடுத்தாரு. எங்களுக்கு ஆளுக்கு நூறு ரூபா தரகு கமிஷன் கொடுத்தாரு."

"குடி கெடுத்தவனுகளே! சாராயக் கடை பாக்கிக்கு என் மாடுதான் கெடைச்சுதா? நீங்க நல்லா இருப்பீங்களா? உங்க குடி விளங்குமா? அந்த மாரியாத்தா உங்களுக்குப் படியளப்பா."

அழுகையும், ஆத்திரமுமாகக் குமுறினாள் பழனாத்தாள்.

"அக்கா! அழுகாதீங்கோ. கட்டினவன் இப்படி இருந்தா கண்டவனுக்கெல்லாம் இளப்பம்தான். அண்ணன் இப்படிக் கேவலம் பண்ணுவான்னு நான் நினைக்கலே."

பழனாத்தாளிடம் உயிர்ப்பு மங்கி விட்டது. அந்த முகத்தில் அழுகையும், சோகமும் இருட்டும் அப்பிக் கொண்டன.

"அக்கா, நா வூடு வரை வரட்டுமா?"

''நீ போய்க்கோ அருக்காணி. நா இப்படியே போயிடுவேன்..."

மேல்சட்டை இல்லாமல் விளையாடிக் கொண்டிருந்தன பிள்ளைகள். அவனிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிக்க என்று யோசனையில் தலைச் சுமையை இறக்கி வைத்தாள். அவன் முகத்தையும், மூட்டையையும் பரிதாபமாய்ப் பார்த்தன பிள்ளைகள். படுக்கையில் புரண்டு கிடந்தான் குமாரசாமி. அவனைச் சுற்றி சாராய வாசம்....

இலவச இணைப்பு

சுத்தவாக்ய சர்வமுகூர்த்த பஞ்சாங்கம்

32 பக்க தனிப்புத்தகம்

★ வித்வான் வே.லட்சுமணன்

★ ஸ்ரீவேணுகோபாலன்

★ பாலகுமாரன்

★ வலம்புரிஜான்

எழுதும்

தொடர்கள்

ஏராளமான

ஆலயங்களின்

அருள் மணக்கும்

செய்திகள்

கட்டுரைகள்

அதிக பக்கங்கள்

ஓம்

சரவணபவ

தெய்வீக மாதஇதழ்

மார்ச் இதழ் இப்போது விற்பனையில்...

விபரங்களுக்கு : சாருபிரபா பப்ளிகேஷன்ஸ்,
105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி : 8420658, 8554242

மூலிகை கேலரி

பிச்சு உதற ஆரம்பித்துவிட்ட கோடை வெயிலைச் சமாளிக்கிறது இலேசுபட்ட விஷயமா? ஆனா தினமும் எலுமிச்சை சாறு குடிக்கிற வழக்கம் இருக்கிறவங்களானா ஒண்டிக்கு ஒண்டி மோதிப் பார்த்துடலாம்.

தாக சாந்தி தர்றதோட, வாயு, பித்தம், கபம் எல்லாத்துக்கும் 'பேக் அப்' சொல்லிடும், உங்கள் அன்பு ஈச்சி... எலுமிச்சி!


மலைப்பாங்கான பிரதேசத்துலே, பஸ் பிரயாணம் செய்யும்போது, ஒரு சிலருக்கு மூச்சுத் திணறும். வாந்தி வரும். அப்போ, எலுமிச்சைப் பழத்தைக் கசக்கி நுகர்ந்து பார்த்தால், அந்த உணர்ச்சிக் குறையும்.

அது சோப் விளம்பரமாகட்டும், ஷாம்பூ விளம்பரமாகட்டும். 'எலுமிச்சையின் புத்துணர்ச்சி' என்றதுமே கடலோ அருவியோ பொங்கிப் பொங்கி, மாடலிங் பெண்ணைக் குளிப்பாட்டுவது போலக் காட்டுவார்கள். அது நிஜம்தான்! எலுமிச்சையில் புத்துணர்ச்சி ததும்ப வைக்கும் நறுமணமிருக்கிறது! எலுமிச்சைத் தோலில் தயாரிக்கப்படும் 'லெமன் ஆயில்' - அழகு நிலையங்களில் மிக அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.


சரும அழகைப் பராமரிக்கும் அற்புத சக்திமான் இந்த எலுமிச்சை... தினமும் குளிக்கப் போகுமுன், இரண்டு சொட்டு எலுமிச்சை சாறை முகம், கழுத்து, கை பகுதிகளில் தடவி, பயத்தமாவு தேய்த்துக் குளிக்க, சருமம் மிருதுவாகவும், பளபளப்பாகவும் இருக்கும். அது மட்டுமா? நமைச்சல், அரிப்பு, படை, தேமல், சிரங்கு போன்ற பிரச்னைகளுக்கும் 'நோ என்ட்ரி'!

கர்ப்பிணிப் பெண்கள், காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் ஒரு டீஸ்பூன் எலுமிச்சை சாறில் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து சாப்பிட்டு வர, பிரசவம் சுகமாக இருக்கும். எலுமிச்சை, மாதுளை, சாத்துக்குடி சாறுகளுடன் தேன் கலந்த 'மாதுளங்காய் ரசாயனம்' என்ற ஆயுர்வேத மருந்து கடைகளிலும் கிடைக்கிறது. குழந்தை பெறும் வரை சாப்பிட்டு வர, தலை சுற்றல், வாந்தி, உடல் அசதி போன்றவை இருக்காது.

முழு நிலவு போல முகமிருந்தாலும், ஆங்காங்கே ஒன்றிரண்டு



ஊச்சி... எலுமிச்சி!



பரு இருந்தால், அழகு குறைவுதான் அம்மணி! தினமும் இரவு படுக்கப் போகுமுன், எலுமிச்சை சாறு பூசி, வெதுவெதுப்பான நீரில் முகம் அலம்பி விடுங்கள். மறுநாள் பரு காய்ந்திருக்கும்.

புற்று மண்ணைச் சலித்தெடுத்து, அதனுடன் சம அளவு எலுமிச்சை சாறு, கடுகு எண்ணெய் சேர்த்து குழைத்துக் கொள்ளுங்கள். இதை வீக்கம், புண்கட்டிகள், நீண்ட நாள் காயங்கள் மீது பூச, குணம் விரைவில் தெரியும்.

'பட்டணத்து வாழ்க்கையில் இரத்த அழுத்தமெல்லாம் சகஜமப்பா!' என ஒரு சிலர் லைட்டாக எடுத்துக் கொள்வார்கள்.... ஆனால் அதற்கும் ஒங்கு தாங்காக ஈடு கொடுப்பது எலுமிச்சம் பழம்தான்! தினமும் காலை பத்து மணி அளவில், ஒரு பெரிய தம்ளர் இள மோரில், அரை மூடி எலுமிச்சம் சாறு கலந்து, 'ஒன்ஸ்மோர்' என ருசித்துப் பாருங்கள். ஏற்கெனவே பி.பி இருந்தால், சண்டித்தனம் செய்யாமல் நார்மலாகி விடும். பி.பி இல்லாமலிருந்தால், உங்கள் திசையிலேயே தலை வைத்துப் படுக்காது.

எலுமிச்சை இலைகளையும், வேப்பிலையையும் நிழலில் காய வைத்துக் கொண்டு, சாம்பிராணிப் புகையில் சேர்த்துப் போடுங்கள். கொசு, ஈ, மூட்டை பூச்சி, சிலந்தி என பூச்சித் தொல்லையே வீட்டில் இருக்காது...

உடலின் வெப்பம் தணிந்தாலே, பாதி நோயைக் கம்பெடுத்து விரட்டி விட்டமாதிரிதான். அந்த விஷயத்தில் நம்ப எலுமிச்சைப் பழம், பழம் தின்று கொட்டை போட்ட சர்வீஸ்காரர்! தினமும் ஒரு தம்ளர் எலுமிச்சை சாறை, நிறைய நீர் விட்டு, தேன் அல்லது சர்க்கரை அல்லது உப்பு கலந்து அருந்தி வந்தாலே, உடல் சூடு 'ஓடு...ஓடு' என ஓட்டம் எடுக்கும்.

இரவு நேரம். திடீரென்று காதில் வலி. தாங்க முடிகிற வலியா? முடியாதுதான்...! பேசாமல் சமையலறைக்குப் போய், ஒரு துண்டு இஞ்சி, ஒரு பல் பூண்டு, இரண்டையும் தட்டி, சில சொட்டு எலுமிச்சை சாறில் கலந்து, பஞ்சில் நனைத்து, காதில் விட, காதுவலி மறைந்துவிடும். தூக்கம் கண்களைத் தழுவும்.

எலுமிச்சை விதைகளுக்கும் கற்ப மூலிகைக் குணமுண்டு. எலுமிச்சை விதைகளைப் பொடி செய்து, வெந்நீரில், தேன் கலந்து சாப்பிட்டு வந்தால், ஊளைச்சதை குறைந்து, 'சிக்' என்ற அழகு கிடைக்கும். மேனியின் வனப்பு கூடும்.

எலுமிச்சை சாறில், இரண்டு கல் உப்பு சேர்த்துப் பல் தேய்த்துப் பாருங்கள்! அட! சூப்பர் ஷைம் பல் வரிசை!

ஒரு டேபிள் ஸ்பூன் எலுமிச்சை சாறுடன், கோழி முட்டையின் வெள்ளைக் கரு, இரண்டு டேபிள் ஸ்பூன் பயத்தமாவு, அரை டேபிள் ஸ்பூன் பாதாம் மாவு கலந்து நன்றாகக் குழைத்து, முகத்தில் பூசுங்கள். சருமம் இயற்கையாக 'ப்ளீச்' ஆகும்!

எலுமிச்சை சாறை, தேங்காய் எண்ணெயில் கலந்து, பொறுக்கக் கூடிய சூட்டில் தலையில் தேய்த்து, மஸாஜ் செய்யவும். அரை மணி நேரம் ஊறிய பிறகு, சீயக்காய்த் தேய்த்துக் குளிக்க, தலை முடி பட்டு போல மின்னும். பொடுகு, பேன், ஈறு தொல்லையிருந்தாலும் அத்தனையும் பணால்!

படங்கள்: ஸ்ரீஹரி

ராஜம் முரளி

✉ மரம் - கவிதை மனத்தில் வேர்பிடித்து நின்றது!
வேலூர் - 4, மலை அரசன்

✉ மூலிகை கேலரியில் இடம் பெற்ற, 'ரோஜா மேனியா' பார்க்க, படிக்க பரவசத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தது அதி அற்புதம்!
மதுரை - 16, ஆர். லட்சுமி.

✉ 'நல்ல நேரம் என்பது ஒருவனுக்கு எப்போது வருகிறது?' என்ற கேள்விக்கு 'உளமாற உழைக்க ஆரம்பித்ததும்' என்றது பாராட்டுக்குரிய பதில்!
சேத்துப்பட்டு-801, பா. குணா.

✉ நானும் பார்த்து விட்டேன். வேறு எந்த இதழிலும் ராசிபலனை இவ்வளவு புதுமையாகவும், வித்தியாசமாகவும் சொன்னதே இல்லை. ரஜினியின் ஸ்டைல் எவ்வளவு ஈர்ப்புக்குரியதோ, அதுபோல கல்கியின் ராசி பலனும் படு ஸ்டைல்!
சின்னமனூர், எஸ். ராஜமழை

✉ கதாசிரியர்களின் கஷ்ட நிலையைச் சித்திரித்திருந்தது மதுமிதவின் 'நல்லதா ஒரு கதை!'
நெய்வேலி, சு. இந்துமதி.

✉ லேட்டஸ்ட் நிலவரப்படி உலகத்தமிழர்களால் புன்னகை அரசி என்று ஏற்றுக் கொள்ளப்படுபவர் சிநேகா மட்டுமே. ஆனால் தராசு ரோஜாவின் சொந்த வாழ்க்கை சோகத்துக்காகப் பரிதாபப்பட்டு 'அனுதாப அவார்டு' கொடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது!
நெல்லையப்பபுரம், டி. செல்வன்.

✉ 'வரிக்கு வரி சிரி' சிறுகதையைப் படித்து விழுந்து விழுந்து சிரித்தேன். இப்படிச் சிரித்தால் அப்படிச் சிரிக்கும் சிரிப்புக்குப் இன்றைய சூழ்நிலையில் யாரேனும் வரி போட்டாலும் போடலாம் என்ற நினைப்பு வந்ததும் சிரிப்பை நிறுத்திக் கொண்டேன்.
திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

✉ இயற்கை போட்ட தப்புக் கணக்கால் கணங்கியிருப்பவர்களை முன்னேற்ற துடிப்புடன் களமிறங்கியிருக்கும் வசுதா வெற்றி பெற வேண்டும்!
ஸ்ரீரங்கம், எஸ். கௌரிலக்ஷ்மி.

✉ தலையங்கம் கண்டேன். ஆண்டிபட்டியில் ஜெயலலிதா வெற்றி பெற்று தாம் முதல்வராகும் பட்சத்தில் ஆண்டிபட்டிக்கு மட்டும் சலுகைகள் செய்யாமல், அனைத்து பகுதிகளுக்கும் தலைவி என்ற எண்ணத்தோடு செயல்பட வேண்டும் என்ற அறிவுரை

அனுதாப அவார்டு



நியாயமானது. அதற்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்த கார்ட்டூன் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது. ஜெயலலிதா சிந்திப்பாரா?
மதுரை - 16, பொ. பொன் இலக்கியா.

✉ புறநகர் ரயிலில் பயணம் செய்யும் நம்மூர் பயணிகள் செய்யும் அவலங்கள் எண்ணிலடங்கா. காலை மட்டுமா எதிர் இருக்கையில் வைக்கிறார்கள். வேர்க்கடலை தோல் எதிரே அமர்ந்திருப்பவரின் சட்டையில், பான்பராக் துப்புதல் இது போன்ற எத்தனையோ! ஜப்பானியர் செயலைப் படித் தவுடன் மலைத்துப் போனேன்.
சென்னை - 118, சி.தெ. இளமுருகன்.

✉ அம்மா இடுப்பில் கொழு கொழு ஆண்டிபட்டிக் குழந்தை... ஏக்கமாய் ஏழை பாலகன். கார்ட்டூன் கற்பனைக்கு ஏகப்பட்ட புன்னகை நன்றிகள்.
திருவண்ணாமலை, எல்.எம். அபிதா.

✉ 'அம்மாவுக்கு அட்வைஸ்' என்றும் 'ஆண்டிபட்டி அரசி' என்ற தலையங்கம் தீட்டியும் ஏதோ வேறு யாருமே தேர்தல் சமயத்தில் தொகுதிக்கு அதிகமாகச் செய்யாதது

போலவும் ஜெயலலிதா அவர்கள் மட்டுமே அத்து மீறி செலவு செய்ததாகவும் எழுதுவது ஒரு நடுநிலை பத்திரிக்கையாய் நின்று செல்படுவதாய்த் தெரியவில்லை. பழுத்த அரசியல்வாதி, அறுபது ஆண்டுகாலம் அனுபவம் வாய்ந்தவரான கலைஞரை சட்டசபையைப் புறக்கணிக்காமல் செல்லச் சொல்லி அறிவுரை எழுத முடியவில்லை உங்களால்! இனிமேலாவது நடுநிலை வகியுங்கள் இல்லை என்றால் மஞ்சள் துண்டைத் தாங்களும் ஒன்று வாங்கிப் போட்டுக் கொள்ளுங்கள்.

சென்னை - 24,

இரா. சீதாராமன்.

✉ 'ஜபல்பூர்' தொடர், மெனி தொடராக இருக்கக் கூடாதா என்ற ஏக்கம் ஏற்பட்டது.

திருச்சிராப்பள்ளி,

சரஸ்வதி பஞ்சு.

✉ எப்படியோ ஜில்லு கிடைத்து விட்டான். தன் தந்தையைச் சீட்டாட்ட பிடியிலிருந்தும் விடுவித்து விட்டான். கதையில் வரும் கதாபாத்திரங்களை மட்டுமல்ல. வாசகர்களையும் கவர்ந்து விட்டான் ஜில்லு!

தஞ்சாவூர்,

வெங்கட் முருகானந்தம்.

✉ சூதாட்டம் பற்றி, பலர் பலவிதமாக எழுதியிருப்பினும் இது சற்று புதுமையாக உள்ளது (பாச வைத்தியம்).

சேலம், கு. பிரசாத்.

✉ மினி தொடர் என்றாலும் ஒரு மெகா தொடருக்குரிய விறுவிறுப்பையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தித் தந்தனர் கதாசிரியர் சிவகுமாரும், ஓவியர் ஜெயராஜும்!

மதுரை - 16,

நெல்லை. வி. சிவா.

✉ ஒரு கெட்ட பழக்கத்தினால் உண்டான அஜாக்கிரதைக்கான விளைவை, மனத்தைப் பாதிக்கும்படி சொன்ன ம.வே. சிவகுமார் பாராட்டுக்குரியவர்!


பெத்தானியாபுரம், ஏ. முத்துலட்சுமி.

✉ அருமையான சஸ்பென்சுடன், பதறியபடி படிக்க வைத்த மினி தொடர்! 'அரைஞாண் கயிறு' என்றுதான் சொல்வார்கள். அரையணாக் கயிறு அல்ல! எனினும் கதை ரசிக்கும்படி நறுக்கென்று இருந்தது.

சிங்கப்பூர்,

ராஜலட்சுமி ரங்கநாதன்.

பாச வைத்தியம்!



ஸ்ரீலேகாவைத் துரத்துகிறார்கள்

"ஏய்... ப்ளீஸ் பா!" என்று ரோஜா பூக்களுடன் கல்லூரிப் பெண்களை, இளைஞர்கள் துரத்துவது 'தையதையா' விஷயம்!

ஆனால் ஸ்டெல்லாமாரிஸ் கல்லூரியில், பி.ஏ. ஃபைன் ஆர்ட்ஸ் படிக்கும் பொன்மதி ஸ்ரீலேகாவை, இளம் பெண்கள் கூட்டம் துரத்தித் துரத்தி, தொந்தரவு தந்தால் அது என்னவாக இருக்கும்?

"அது ஒண்ணுமில்லை. நான் ரொம்ப நல்லா மிமிக்ரி பண்ணுவேன். அஜித், விஜய், பிரசாந்த், சூர்யா, ஷாருக், ஹ்ருத்திக் மாதிரி பேசிக் காட்டுவேன். அதான், அவங்களுக்குப் பிடிச்ச கதாநாயகன் மாதிரி பேசிக் காட்டுவதற்காக என்னைத் துரத்தறாங்க... இந்த அன்புத் தொல்லையை நான் ரசிக்கிறேன்" என்றார் ஸ்ரீலேகா.



• ஜோதிகாவுடன்...

மிமிக்ரி கலை வளத்தை, தோழிகளுடன் மட்டுமே நிறுத்திக் கொள்வதில் என்ன த்ரில் இருக்க முடியும்? சம்பந்தப்பட்ட ஆட்களிடமே பேசிக் காட்டி, பாராட்டு வாங்கிவிட்டதில் தான் ஸ்ரீலேகாவுக்குப் பெருமை.

"ஷாலினியிடம், 'வாலி' படத்தின் வசனத்தையும் ஜோதிகாவிடம் 'குஷி' படத்தின் வசனத்தையும் பேசிக் காட்டினேன். ஷாலினிக்கு ஒரே சந்தோஷம். அஜீத்துக்கு ஃபோன் பண்ணி என்னை அறிமுகப்படுத்தினாங்க. ஜோதிகாவைக் கேட்கணுமா?




• எம்.எஸ்.வியுடன்...

'மை காட்! கார்ஜியஸ்யா'னு புளகாங்கிதம் அடைஞ்சாங்க" என்றார் பெருமை பொங்க.

"ஆண் குரலும், பெண் குரலுமாக மாற்றி மாற்றிப் பேசுவது சிரமமில்லையா?"

"நான் எந்த குரலையாவது ரொம்ப ரசிச்சா, அந்தக் குரல் தானாகவே எனக்குப் பழக்கப்பட்டுவிடும். கொஞ்சம் பிராக்டிஸ் செய்தவுடன் நல்லாவே செட் ஆயிடும்" என்று அஜீத் குரலில் ஆரம்பித்து, விஜய் குரலில் முடித்தார். அப்பாடா! இந்த வார கல்லூரி வைரத்துக்குப் பொருத்தமான பெண் கிடைச்சாச்சு என்று மனசுக்குள் ஒன்லைன் ஓடியது!

மிமிக்ரி, பாட்டு, டான்ஸ், வெரைட்டி





புரோகிராம், என எதையும் இவர் விட்டு வைப்பதில்லை என்றாலும் ஸ்ரீலேகாவுக்குத் தூரிகை தான் பெஸ்ட் ஃப்ரெண்ட்! ஓவியம்தான் சுவாசக் காற்று!

"என்னை ஓவியத்துக்கு அறிமுகப்படுத்தியது என் பாட்டி சரோஜாதான். அவங்க ரொம்ப தத்ரூபமா வரைவாங்க. கொண்டைய்யா ராஜு படங்களை நிறைய வரைஞ்சிருக்காங்க. சின்ன வயசுலே கோடுகளும் வட்டங்களும் என்னைப் பிரமிக்க வைத்தன. நான் வரைந்து தள்ளுவதைப் பார்த்த அப்பா, பிளஸ் டூ முடித்ததும் ஃபைன் ஆர்ட்ஸ் எடுக்கச் செய்தார். 'ஃபைன் ஆர்ட்ஸ் ஸ்டூடன்ட்'னு சொல்லிக்கறப்பவே மலைப்பாக இருந்தது. ஆன் மேடம், ரஜினி மேடம் போன்றவர்களின் படைப்பாற்றலைப் பார்த்து என்னோட ரசனையே மாறிவிட்டது'' என்கிறார் ஸ்ரீலேகா.

கல்லூரி வைரம்




மாடர்ன் ஆர்ட்டை விட, ரியலிஸ்டிக் ஆர்ட்தான் தம்மை மிகவும் கவர்ந்ததாகச் சொல்லும் ஸ்ரீலேகாவுக்கு, கோட்டோவியங்களிலும் தனி ஆர்வமுண்டாம்!

கல்லூரி முடித்ததும் நேரே தமது அப்பா ரத்னகுமார் நடத்தும் விளம்பர நிறுவனத்திற்கு வந்து அலுவலக வேலைகளில் பயிற்சி பெறுகிறார் ஸ்ரீலேகா.

''கம்ப்யூட்டர் பிடித்துப் போயிற்று. அதனாலே கிராஃபிக்ஸ், டிஸைனிங் எல்லாம் செய்கிறேன். அப்பா விளம்பரப்பட இயக்குனராக இருப்பதால், படப்பிடிப்பிலிருந்து காப்ஸுலிங் வரை நான் பழகிக் கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லும் ஸ்ரீலேகா, பங்கு பெற்று தடாலடி புகழ் பெற்றது: ஜோதிகா, கையகல தோசைக்கு, நிறைந்த பீங்கான்கிண்ணத்திலிருந்து எண்ணெய் வார்க்கும் விளம்பரம்தான்! இதில் ஆர்ட் டைரக்ஷனில் உதவியிருக்கிறார் ஸ்ரீலேகா!

— டாலி

69ம் பக்கம் இடம் பெற்றுள்ள சிறுகதைக்கான ஓவியம் ஸ்ரீலேகாவின் கை வண்ணம்!



• 16 பட்டை லிங்கம்



• அபூர்வ கோலத்தில் நட்சிணாமூர்த்தி

தேன் கூடு

காஞ்சிபுரம் செல்லும் வழியில் சுங்குவார்சத்திரம் அருகே திருஇலம்பயங்கோட்டூரில் ஸ்ரீகனககுசாம்பிகை சமேத ஸ்ரீ தெய்வநாயகேஸ்வரர் திருக்கோயில் உள்ளது. திருஞானசம்பந்தரால் பதிகம் பாடப் பெற்ற இத்தலத்து சிவபெருமானைத் தரிசனம் செய்தால் மறுபிறவியே இல்லை என்பது ஐதீகம். இத்தலத்தில் ஸ்ரீயோக தட்சிணாமூர்த்தி, அபூர்வ திருக்கோலத்தில் வீற்றிருக்கிறார். ஆலயத்தின் மேற்கு முகமாக 'ரம்பாபுரி நாதராக' பதினாறு பேறுகளை அளிக்கின்ற பதினாறு ஒளிப் பட்டைகளை உடைய சிவலிங்கம் உள்ளது.

— கே.எம்.டி.பிரம்மேச குருக்கள், பேரம்பாக்கம்

எல்லா இடங்களிலும் பெருமாள்தான் பள்ளிகொண்ட கோலத்தில் பக்தர்களுக்குக் காட்சி அளிப்பார். ஆனால் அலகாபாத் திரிவேணி சங்கமத்தின் அருகிலுள்ள அனுமார் கோவிலில் ஆஞ்சநேயர் பள்ளி கொண்ட கோலத்தில் அருள்பாலிக்கிறார்!

- இரா.கணேசன், சேலம்

புள்ளியை விளக்கப் புகின் அது பிரம்மத்தின் விளக்கம் போன்றே அமையும். பிரம்மத்தைப் போன்றே புள்ளிக்கு நீளமோ, அகலமோ, கனமோ எதுவும் கிடையாது. ஆனால் ஜியோமிதியில் புள்ளியின் மகத்துவம் அதிகம். எதையும் புள்ளியிட்டு அதன் அடிப்படையில்தான் துவங்க வேண்டும். அது போல் தான் பக்தி சாத்திரத்திலும் சாலக்ராமத்துள் சிதைவற்ற சர்வ வியாபியான கடவுள் புள்ளியில் சுருங்கி இருப்பதாகக் கொள்ளலாம்.

- விநோபா பாவே

- எஸ்.நாராயணன், தஞ்சை

திருவரங்கத்திலுள்ள அரங்கநாதர் கோவிலில் தேங்காயை உடைத்து நைவேத்தியம் செய்வதில்லை. பதிலாக தேங்காய்த்துருவல் தான் படைக்கிறார்கள். தேங்காய் உடைக்கும் போது உண்டாகும் ஒலியால் பெருமாளின் நித்திரை கலைந்துவிடும் என்பது நம்பிக்கை.

ஜுரப் பிள்ளையார்!

கும்பகோணம் - நாகேசுவரர் கோவிலில் குடி கொண்டிருக்கும் ஒரு விநாயகருக்கு 'ஜுரப் பிள்ளையார்' என்று பெயர். இங்கு நைவேத்தியமே பருப்பு ரசம் தான்!


சிதம்பரம் நடராஜர் கோவிலின் கோபுர வாயில்களுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. கிழக்குக் கோபுர வாசல் வழியாக மாணிக்க வாசகரும், தெற்கு கோபுர வாசல் வழியாக அப்பரும், வடக்கு வாசல் வழியாகச் சுந்தரரும் சென்று நடராஜப் பெருமானை வழிபட்டனர்.

- மு.இராமசாமி, தேசூர்

பஞ்சாயதன பூஜையில் பயன்படுத்தப்படும் புனிதக் கற்கள் கூழாங்கற்கள். இவற்றிற்கு கண், காது, மூக்கு எதும் இல்லை; இவை அழுக்கடைவதும் இல்லை.



• ஸ்ரீகனக குசாம்பிகை



• ஸ்ரீ தெய்வநாயகேஸ்வரர் திருக்கோயில்

கல்லின் பெயர் - பாணலிங்கம். கிடைக்குமிடம் - நர்மதை ஆற்றில் ஓங்கார குண்டம். வெண்ணிறக்கல். தெய்வம் - சிவன்.

கல்லின் பெயர் - சொர்ணமுகி சிலை. கிடைக்குமிடம் - ஆந்திராவிலுள்ள சொர்ணமுகி ஆறு. தங்கரேகை ஓடிய கல். தெய்வம் - தேவி.

கல்லின் பெயர் - சாளக்கிராமம். கிடைக்குமிடம் - நேபாளத்திலுள்ள கண்டகி ஆறு. கருநிறக்கல். தெய்வம் - திருமால்.

கல்லின் பெயர் - சூரியனுக்குரிய கல். கிடைக்குமிடம் - தஞ்சாவூர் வல்லத்துக்கருகில், பளிங்குக்கல். தெய்வம் - சூரியன்.

கல்லின் பெயர் - சோணபத்திரக்கல். கிடைக்குமிடம் - கங்கையில் கலக்கும் சோணா ஆற்றுப் பகுதி. தெய்வம் - கணபதி

இவற்றால் தேசிய ஒருமைப்பாடும் புலனாகிறதன்றோ!

- கே.எஸ்.நாராயணன், சென்னை

சுவாமி ராம தீர்த்தர் ஜப்பான் நாட்டில் ரயிலில் பிரயாணம் செய்தார். ஒரு ஸ்டேஷனில் ரயில் நின்றது. பழம் வாங்க நினைத்தார். கிடைக்கவில்லை. அடுத்த ஸ்டேஷனிலும் இதுபோலவே ஆயிற்று. எனவே 'ஜப்பானில் பழம் கிடைக்காது போலிருக்கிறது' என்று சொல்லிக் கொண்டார். அதைக் கேட்ட ஒரு ஜப்பானிய இளைஞன் இரயிலிலிருந்து இறங்கிச் சென்று எங்கோ போய் ஒரு கூடை நிறைய பழங்கள் வாங்கி வந்து சுவாமிஜியிடம் கொடுத்தான். சுவாமிஜி வியப்படைந்து, பணம் கொடுப்பதற்காக, பழத்தின் விலையைக் கேட்டார். அந்த இளைஞன் " விலையா ? உங்கள் நாட்டுக்குப் போய் ஜப்பானில் பழம் கிடைக்காது என்று சொல்லாமலிருந்தாலே போதும் அதுவே விலை!" என்றான். அந்த இளைஞனின் தேச பக்தியைக் கண்டு சுவாமி ராம தீர்த்தர் பிரமித்துவிட்டார்.

(ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்திலிருந்து)

– கே.கவின், பொள்ளாச்சி


யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூன்று மதத்தினருக்குமே புனித நகரமாக விளங்குவது ஜெருசலம். இப்படி அமைந்திருப்பது உலகிலேயே இது ஒன்று மட்டும்தான்.

- ஆர்.ஆர். பூபதி



சைவர்கள் திருவண்ணாமலையை, லிங்கமாக வழிபட, சக்தி அன்பர்கள் மகாமேருவாக வழிபட, வைணவர்கள் இந்த மலையைச் சுதர்சன சக்ரமாக வழிப்படுகின்றனர். சுதர்சனமும் அக்னி ரூபம்தானே!

– பா. குணா, திருவண்ணாமலை.



தயா

அடிதடி ரவுடியிஸக் கதைகளில் மூச்சுத் திணறும் தமிழ் சினிமாவுக்கு, 'தயா' மூலம் ஆக்ஸிஜன் தர முயன்றிருக்கிறார் பிரகாஷ்ராஜ்.

சாரதா அம்மா என்கிற சமூக சேவகியிடம் வேலைக்குச் சேர்ந்து, அவரது அன்பைச் சம்பாதித்த பின்பு, அவருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டு வர வேண்டும் என்பதுதான், தொழில்முறை ரவுடி தயாவுக்குத் தரப்படும் வேலை. அன்பு Vs ரவுடியிஸம் இடையே நடக்கும் இந்தப் போராட்டத்தில் யார் ஜெயிக்கிறார்கள் என்பதை, போரடிக்காமல் சொல்லியிருக்கிறார் அறிமுக இயக்குனர் செந்தில்குமார்.

படம் நெடுகிலும் ஆக்ரமித்திருக்கும் பிரகாஷ்ராஜின் அபார நடிப்பும், வி. பிரபாகரின் 'நச்' வசனங்களும் நம் கவனத்தைச் சிதற விடாமல் பார்த்துக்கொள்கின்றன.

கதாநாயகி மீனா விட்ட ஒரே அறையில், ரவுடி பிரகாஷ்ராஜ் திருந்தி விடுவதாகக் காட்ட, 'ஆஹா! இனி புதிய பாதை பார்த்திபன் பாணியில் காதல், கல்யாணம் என்று படம் நகரப் போகிறது' என்ற சராசரி ரசனையோடு சப்புக் கொட்டியபடி உட்கார்ந்திருந்தால் நம் எதிர்பார்ப்பில் இடி விழுகிறது!

பிரகாஷ்ராஜ் திருந்தி விடுவதாக நடித்து ஒவ்வொரு முறையும் முருங்கை மரம் ஏறி, அடிக்கும் அந்தர் பல்டிகள் படத்தின் இறுதிவரை விறுவிறுப்பை வாரி வழங்குகின்றன. ஆனால் பல சமயம் பல்டிகள் ஓவர் டோஸ் ஆகிவிடுகின்றன.

மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி மீது குடிசை போட்டிருக்கும் தயா, அந்த முகவரிக்கு வீட்டு வரி கட்டி, கேஸ் கனெக்ஷன் வைத்திருப்பதாக ரேஷன் கார்டு காட்டுவது போன்ற உயர்வு - நவிற்சிக் காட்சிகள் படத்துக்கு நகைச்சுவை பங்களிப்பு செய்கின்றன. டூயட் பாடல்களும், சிம்ரனின் ஒற்றைப் பாடல் நடனமும் தேவையில்லாத இம்சைகள் என்றாலும் பல ரசிகர்கள் அந்த இடைவெளியை கேண்டீன் பக்கம் செலவிட்டுத் திரும்புகிறார்கள். இது போன்ற குறைகளை ஈடுகட்டுவது யாரும் யூகிக்க முடியாத க்ளைமாக்ஸ்தான்!

"என்னைத் தயவு செய்து மன்னிச்சுடாதீங்க! நீங்க மன்னிச்சுட்டா, அந்த வலியை என்னால தாங்க முடியாது" என்று கதறும் பிரகாஷ் ராஜை ஒரு சிறகொடிந்த ரவுடியாகப் பார்க்கிறபோது பரிதாபம் வருகிறது.

இந்தப் படத்தின் மூலம் ஒரு நல்ல இயக்குனரும், புதிய ஹீரோவும் கிடைத்திருப்பது ஒருபுறம் இருக்கட்டும், குண்டர் தடுப்புச் சட்டத்தில் இருக்கும் சிறைவாசிகளுக்குத் திரையிட்டுக் காட்டினால் 'தயா' போன்ற படங்கள் அவர்களை யோசிக்க வைக்கும்.

- விஷுவல்தாசன்

- ஆவெரஜ்

சுவடுகள் - 9

நினைவு தந்த நன்னன்!

திருப்பூர் கிருஷ்ணன்

நான் சென்னை வந்த புதிதில் ராமகிருஷ்ண மடம் செல்லத் தொடங்கினேன். நா.பா. உள்படப் பல எழுத்தாளர்களின் நண்பரான சுவாமி கமலாத்மானந்தரின் உரையாடலால் கவரப்பட்டேன். 'பரமஹம்சரின் அமுதமொழிகள்' என்ற மூன்று பாக நூல் தன்மயானந்தர் மொழிபெயர்ப்பில் தயாராகி வந்தது. பரமஹம்சர் பாடிய வங்கக் கவிதைகளை ஆங்கில வழி தமிழில் கவிதைகளாக்கும் பணியை நானும் சௌந்தரா கைலாசமும் மேற்கொண்டோம். அமுத மொழிகள் வாசிப்பு என் ஆன்மிக ஐயங்களையெல்லாம் தெளிவுபடுத்தியது. நாத்திகத்துக்கும் ஆத்திகத்துக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்த என் மனம் ஆன்மிக நெறியில் உறுதிப்பட்டது.

இக் காலகட்டத்தில்தான் 'சிறுவர் பாடல்கள்' என்ற ஒலிப்பேழை என்னிடம் மதிப்புரைக்காக வந்து சேர்ந்தது.

இலக்கிய ரசிகர்கள் திடுக்கிடும்படியான ஒரு செயல் அந்த ஒலிப்பேழையில் நிகழ்ந்திருந்தது. பழம்பாடல்கள், தற்காலப் பாடல்கள் என பல அதில் இடம்பெற்றிருந்தன. 'பாலும் தெளிதேனும் - ஔவையார் பாடல்' என்ற குறிப்பும் முகப்பு அட்டையில் இருந்தது. ஆனால் விநாயகருக்குக் கும்பிடுபோட்டு ஔவையார் எழுதிய அந்தப் பாடலிலிருந்து விநாயகர் பலவந்தமாக (தும்பிக்)கையைப் பிடித்து இழுத்து வெளியேற்றப் பட்டிருந்தார்.

மூலப்பாடல்: 'பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்துனக்கு நான்தரு வேன்–கோலம்செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா.'

ஒலிப்பேழையில் இடம் பெற்ற திருத்தப் பட்ட பாடல்: 'பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய் தூய மதிமுகத்துக் கண்மணியே நீ எனக்கு முத்தமொன்று தா.'

விநாயகரைப் பாடலிலிருந்து நாடு கடத்த வேண்டிய தேவை என்ன? இந்த வெண்பாவின் மூல ஆசிரியரான ஔவையாரிடமிருந்து இதற்கான அனுமதியைப் பெற்றது யார்? ஒலிப்பேழைக்கு ஆலோசனை வழங்கியவர் மா. நன்னன் என ஒலிப்பேழையிலேயே குறிப்பிட்டிருந்தார்கள். நான் வருத்தமடைந்தேன்.

நன்னன் நாத்திகர். தமிழறிஞர். தொலைக் காட்சியில், முன்னே ஆள் இல்லாமல் பாவனையாக ஆளை வைத்துக் கொண்டு அவர் நடத்திய தமிழ்ப் பாடத்தின் ரசிகன் நான். நன்னனும், முத்துக் கண்ணப்பர்,



தமிழண்ணல், புதுவையைச் சேர்ந்த கோபாலய்யர், திருமுருகன் போன்ற இலக்கணப் புலவர்களும் தமிழுக்கு அவசியம் தேவை என்பதே என் கருத்து. இலக்கணம் என்ற கடிவாளத்தை இழுத்துப் பிடித்தால் தான் மொழிக் குதிரையில் சீராகச் சவாரி செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இலக்கணத்தில் புலமை பெற்ற இராவதம் மகாதேவனின் மாணவன் என்று என்னைப் பற்றிச் சொல்லிக் கொள்வதில் எனக்கு நிறைவு ஏற்படுவதுண்டு. நான் பெரிதும் மதிக்கும் நன்னன் ஆலோசனையில் வெளிவந்த ஒலிப்பேழையில் இப்படி ஒரு செயல் நடந்திருந்தது என்னைக் கோபத்தை விடவும் அதிகமாக வருத்தத்தில் ஆழ்த்தியது.

இப்படியே போனால் என்ன ஆகும்? ஆழ்வார் பாடல்களிலிருந்து திருமாலையும் நாயன்மார்கள் பாடலிலிருந்து சிவனையும் வெளியேற்றிவிட்டால் அந்தப் பாடல்களில் என்ன மிஞ்சும்? அல்லது தமிழில் தான் என்ன மிஞ்சும்?

ஒருவர் ஆத்திகராக இருப்பதும் நாத்திகராக இருப்பதும் அவரவர் விருப்பம். ஆனால் நம் முன்னோர் மீது நம் கருத்தைத் திணிப்பது என்ன நியாயம்?

ஔவையார் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய மூதாட்டி. அவரது விநாயகர் அகவல் யோகசாத்திரம் முழுவதையும் தன்னுள் தேக்கிய ஆன்மிகப் பெட்டகம். ஔவையாரை ஔவையாராக ஏற்பதே பண்பாடு. அவர் கருத்து உடன்பாடாக இல்லையென்றால் ஏற்காமல் இருந்துவிடலாம். ஆனால் அவர் வரிகளின் இடையே நம் கருத்தைத் திணித்து அவர் பாடலை மாற்றுவது சரியல்லவே.

நாத்திகமும் ஆத்திகமும் வெவ்வேறு மனநிலைகள். எதுதான் முடிந்த முடிவென்னும் வழக்கு உலகம் உள்ளவரை இருக்கும். ஆத்திக நாத்திக வாதப் பிரதிவாதங்களால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. அவரவர் வழி அவரவருக்கு எனப் பக்குவமடைவதே சிறந்தது. நன்னன் கவிஞர் தானே? ஆத்திகக் கலப்பில்லாத ஒரு கவிதையை அவரே எழுதியிருக்கலாமே?

ஔவையார் கவிதையின் ஜீவனே அதிலுள்ள ஆன்மிகச் சிந்தனை தான் அல்லவா! அவர் கவிதையை மாற்றி, அவர் பெயரோடு அதை இடம்பெறச் செய்வது என்பது இறந்த மூதாட்டியை உயிர்ப்பித்து அவரது கழுத்தை நெரிப்பதற்குச் சமமாயிற்றே!

இப்படிப் பலவிதமாக என் சிந்தனைகள் விரிந்தன. அவற்றைத் தொகுத்து ஒரு கட்டுரையாக்கினேன். குறிப்பிட்ட ஒலிப்பேழை பற்றிய அந்த விமர்சனக் கட்டுரை கணையாழியில் வெளியாயிற்று.

நன்னன் அக்கட்டுரையை எவ்விதம் எதிர்கொள்வார் என்றறிய ஆவலோடிருந்தேன். அவர் பண்பாட்டோடு கணையாழிக்கு ஒரு கடிதம் எழுதினார்.

'ஒலிப்பேழைக்கு நான் பொது ஆலோசகர் தானே தவிர அதில் இடம் பெற்றுள்ளவற்றையெல்லாம் நான் படித்தோ கேட்டோ அறிந்து ஆலோசனை கூறவில்லை' எனக் குறிப்பிட்டிருந்தார். முன்னோர் படைப்பில் கை வைக்கலாகாது என்ற என கோட்பாட்டை அவரும் ஏற்கிறார் என்பதுதானே அதன் பொருள்!

நக்கீரனாய் நெற்றிக் கண் திறந்த நான், அவரது பண்பென்னும் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கிக் குளுமையடைந்தேன். அறியாமல் நேர்ந்த தவறைக் கூட ஒப்புக் கொண்டு விளக்கம் தர ஒரு தனி நெஞ்சுரமும் நேர்மையும் வேண்டும். அவ்விரண்டும் அவரிடம் நிறைந்திருந்தது எனக்கு நிறைவுதந்தது.

படம்: ராஜன்



''நம்ம கட்சியின் தலைவர், அநியாயத்துக்கு 'ரீல்' விடறார்...''

''எப்படி...?''

''அடுத்த மாதம் 'ஜார்ஜ் புஷ்' கட்சியுடன், நம்ம கட்சியை இணைக்கப்போறாராம்!''

— நாமக்கல் பாலு

உ
சிவமயம்

திருவாரூர் மாவட்டம் - குடவாசல் வட்டம் - 20, கூந்தலூர்
அருள்மிகு விசாலாட்சி அம்பிகாசமேத விஸ்வநாதர் ஆலய
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

மஹா கும்பாபிஷேகம்

புண்ணிய பூமியாகிய இப்பாரத கண்டத்திலே அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் ஸர்வேச்வரரான சிவபெருமான் தம்மை ஆன்மாக்கள் தரிசித்து உய்யும் பொருட்டு அர்ச்சாவதாராமாக திருகோயில் கொண்டு எழுந்தளியிருக்கும் பற்பல அற்புத ஸ்தலங்களில் ஒன்றாக சிறந்து விளங்குவது **கூந்தலூர்.** சிறந்த புண்ணிய க்ஷேத்ரமாக விளங்கும் கும்பகோணத்திற்கு கிழக்கும், சமயக்குரவர்கள் நால்வராலும் பாடப்பட்ட திருவீழிமிழலைக்கு மேற்கும், தென்காசி க்ஷேத்திரம் என்று பாராட்டப்படும் ஸ்ரீ வாஞ்சியத்திற்கு வடக்கும் திருநல்லம் என்று தேவாரத்தில் குறிப்பிடப்படும் கோனேரிராஜபுரத்திற்கு தெற்குமாக மையங்கொண்டு அரிசொல்லாற்றின் தென் கரையிலே அமைந்து விளங்கும் **கூந்தலூர்.** இங்கு கோயில் கொண்டுள்ள **அருள்மிகு விசாலாட்சி அம்பிகா ஸமேத விஸ்வநாதர்ஆலய** அஷ்டபந்தன **மஹாகும்பாபிஷேகம்** நிகழும் விஷு வருஷம் பங்குனி மாதம் 17-ந் தேதி (31.3.02) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் **ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்** அவர்களின் அருள் ஆக்ஞைபடி நடைபெற உள்ளது. பக்தகோடிகள் அனைவரும் வந்திருந்து கும்பாபிஷேகத்தை கண்ணார கண்டு தரிசித்து பேரின்பம் பெருவாழ்வு பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இப்படிக்கு
இறையருள் நற்பணி மன்றம்
கூந்தலூர் கிராமவாசிகள் மற்றும் அறங்காவலர்கள்

செயல் அலுவலர்,
எஸ். கோவிந்தராஜலு



மதுரை மாநகர
கல்கி, மங்கையர் மலர்,
கோகுலம், துக்ளக்
ஏஜெண்டு
திரு. கே. கோவிந்தராஜன்
மகன்

கோ.திருப்பதி B.Com.க்கும், **ஆர்.சுகன்யா** B.B.A.க்கும்

22.02.2002 வெள்ளிக் கிழமை மதுரை தருமை ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபத்தில் மிகச் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. நகர பிரமுகர்கள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

வாழ்க மணமக்கள்!

● நகை இ. மகராசன், கடமலைக்குண்டு.

? தன்னை கிருஷ்ண பரமாத்மாவின் அவதாரமாக லல்லு வர்ணித்திருக்கிறாரே?

! புல்லாங்குழல் மட்டும்தான் பாக்கி. வேஷம் பூர்த்தியாகி விடும்!

● சின்னை எஸ். ராஜமழை, சின்னமனூர்.

? 'தேர்தலின்போது வாக்குறுதிகளை அள்ளி வீசுவது விதிமீறல் அல்ல' என்று கருணாநிதிக்கு ஜெ. பதிலளித்துள்ளாரே?

! தேர்தலுக்குப் பல வாரங்கள் முன் தேர்தல் அறிக்கை வெளியிடலாம். அது கட்சியின் பொதுவான கொள்கைகள் தொடர்பானதாக இருக்க வேண்டும். முதல்வர் பதவியில் அமரப் போகிறவர் தமது தொகுதிக்கு மட்டும் இதைச் செய்வேன்; அதைச் செய்வேன் என்று தேர்தல் தினத்துக்கு மூன்று நாட்கள் முன்னதாகப் பேசுவது, வாக்காளர்களுக்கு லஞ்சம் தருவதற்கு ஒப்பாகும்.

● டி. சந்திரன், சித்தோடு.

? டாக்டர் பிரகாஷ் வழக்கில் நீதிமன்றம், காவல்துறை சரியாகச் செயல்படுமா..?

! இங்கே வழக்குகளையும் விசாரணைகளையும் இழுக்கடித்து இழுக்கடித்து, அவை முடிவதற்கு முன் மறு தேர்தல் வந்துவிடுகிறது; அல்லது குற்றவாளியின் மரணமே நிகழ்ந்து விடுகிறது. எப்படி விசாரணைகள் நடக்க வேண்டும்?... 'என்றான்' விசாரணையை பி.பி.ஸி. சானலில் பாருங்கள் புரியும்!

● வ. வைகுண்டம், சென்னை - 61.

? கல்கி ஒரு கதம்ப உணவு, சரியா?...

! சரிதான். ஆனால் சின்ன திருத்தம் – சரிவிகித சத்தான கதம்ப உணவு!

ஜெ. வெற்றி எதைக் காட்டுகிறது?

● சே. வள்ளி, தென்கடப்பந்தாங்கல்.

? கணவன் - மனைவிக்குள் பிணக்கு வருவது எப்போது..?

! அதற்கு நேரம் காலமா வேண்டும்! எப்போது வேண்டுமானாலும் வரும். ஆனால் வருகிற வேகத்தில் தீர்த்துக் கொள்ள வேண்டும். அடுத்தநாள் வரை தொடரவிடாதிருப்பது புத்திசாலித்தனம்.

● கிருஷ்ண ராஜ்கோபால், சென்னை - 92.

? சோனியா காந்தி ஹிந்துக்களின் எதிரி என்று சொல்கிறாரே அசோக் சிங்கால்?

! இவர்கள்தான் மொத்த ஹிந்துக்களுக்கும் பிரதிநிதி மாதிரி, சிங்கால் மற்றும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் பேசுவது எரிச்சலைத் தான் தருகிறது.

● ஆர். கர்ணன், பெத்தரெங்கப்புரம். ❐

? ஜெயலலிதாவின் இன்றைய பலம் என்ன? பலவீனம் என்ன?

! பலவீனம் கடந்த காலம்; பலம் நிகழ்காலம்; மறுபடி பலவீனம் தலையெடுக்காமல் பார்த்துக் கொள்வது அவரது நல்ல காலம்; அல்லாது போனால் போதாத காலம்!

● பாலு, கௌரிவாக்கம்.

? பெண்கள் யாரையும் நம்பி வாழக்கூடாது என்று கிரன்பேடி கூறியுள்ளது பற்றி...?

! அண்டி வாழக்கூடாது என்று சொல்லியிருப்பார். பொருளாதார சுதந்திரம் தருகிற தன்னம்பிக்கையும் பாதுகாப்பும் உணர்வு ரீதியான உறவுப் பாதுகாப்பைப் போலவே மிக முக்கியம்.



• பலமும் பலவீனமும்



• மாறுபாடு



• 'லக்' கான்!

☐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
ஆர். கர்ணன்,
பெத்தரெங்கப்புரம்,
தனக்காகுளம் அஞ்சல்,
வடக்கன்குளம். 627 116.

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:
எஸ்.ஏ. பாலசுப்பிரமணியன்,
4/9ஏ, 23வது தெரு,
ஜெய்நகர், அரும்பாக்கம்,
சென்னை - 600 106.

● எஸ்.ஏ. பாலசுப்பிரமணியன்,
சென்னை - 106. *

? கடத்தப்பட்ட அமெரிக்க நிருபர் டேனியல் பேர்ள் படுகொலை எதைக் காட்டுகிறது?

! மனித மனத்தின் குரூர உச்சத்தை; முஷாரஃபின் பொய்கள் கலந்த பொறுப்பின்மையை; அவரை நம்புகிற அமெரிக்காவின் அசட்டுத்தனத்தை.

● பேச்சுவரசு, ஆரணி - 1.

? ஜெ. வெற்றி எதைக் காட்டுகிறது?

! லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயிப்பார் என்று எதிர்பார்த்து நாற்பதாயிரம் தான் வித்தியாசம் என்ற நிதர்சனத்தைப் பார்க்க, பகட்டுத் திட்டங்கள் கண்டு ஏமாறுவோர் குறைந்து வருகிறார்கள் என்பதை.

● கே.வி.ராமன், சென்னை - 73.

? இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே வரலாற்றுச் சிறப்புமிக்க உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதே... இதிலிருந்து உலகநாடுகள் கற்கும் பாடம்..?

! அவசரப்படாதீர்கள்; புலிகளை நம்ப முடியாது; போர்



• மூன்று பாடங்கள்!



• 'கிருஷ்ணா' பிரசாத்!



நிறுத்தம் என்பது அவர்களுக்குத் தங்களைப் பலப்படுத்திக் கொள்ள கிடைக்கும் அவகாசம் என்பது ஏற்கெனவே பலமுறை நிரூபிக்கப்பட்ட விஷயம். இம்முறையும் அம்மாதிரி ஆகாது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. ஸ்ரீலங்கா தலைவர் சந்திரிகா, ஏற்கெனவே இந்த உடன்படிக்கையில் தமக்கு நம்பிக்கை இல்லை என்று கூறிவிட்டார்.

● உமரி பொ. கணேசன்,
மும்பை - 37.

? தமிழகத்தில் ஐந்துமாதமாக முடங்கிக் கிடந்த அரசு நிர்வாகம் இனியாவது செயல்படுமா..?

! செயல்பட்டால் சரிதான்; ஆனால் பன்னீர்செல்வத்துக்கு ஜெ. வழங்கியுள்ள பாராட்டைப் பார்த்தால் அரசு நிர்வாகம் முடங்கிக் கிடப்பதே உத்தமம் என்று அவர் கருதுவது போலல்லவா தெரிகிறது!

● அ. சுகுமார்,
காட்டுக்கானூர்.

? லகானுக்கு 'லக்' இருக்குமா...?

! ஆஸ்கார் 'நாமினேஷன்' வரை வந்ததே 'லக்'தான் ஸாரே!

• பெண்ணுணர்வு




'போனாப் போகட்டும் போடா' என்று தத்துவம் பாடவா முடிகிறது? 'இருக்கிறார்', 'இல்லை', என்று மாறி மாறி நாடகமாடிக் கொண்டிருந்த பாகிஸ்தான், கடைசியில், பக்ரீதும் அதுவுமாக, ஆட்டை வெட்டுவதுபோல் டேனியல் பேர்லை கொலை செய்ததை வெளிச்சமிட்டு, மும்பையையே இருளடிக்க வைத்து விட்டதே? பாரீஸிலிருந்து, மும்பை போஸ்ட்டிங்கில் வந்த இந்த 'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' பத்திரிகையாளருக்கு, இப்படி ஒரு கோர முடிவா? மும்பையில் தங்கியிருந்த ஆறு ஃபாரின் ஜர்னலிஸ்டுகளில், இவர்தான் மிகவும் மெல்லியல்புடைய உற்சாகி என்கிறார்கள் இவரையறிந்த பத்திரிகை உலக நண்பர்கள். அடிக்கடி விருந்து வைப்பாராம். இவர் பாட, மனைவி மரியம் ஆடுவது, மனத்துக்கு ரம்மியமான விருந்தாக இருக்குமாம். பிறக்கப் போகும் குழந்தையைப் பார்க்காமல் போய் விட்டாரே என்று புலம்பாதவர்களில்லை! ஹூம்... நாளை நடப்பதை யாரறிவார்?



• டிமெல்லோ

நாளை நடப்பதை அறிவதிருக்கட்டும். நேற்று நடந்தது என்று திட்டவட்டமாகத் தெரிந்ததையே, அறிந்து கொள்ள மாட்டேனென்கிறார்களே. என்ன செய்ய? இந்திய வரைபடத்தில் உத்தரான்சலும், ஜார்கண்டும், சட்டீஸ்கரும் செதுக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேல் ஆகப் போகிறது. ஆனாலும், இன்னும் எங்கள் பாட புத்தகங்களில் பழைய 25 மாநிலங்களே இடம் பெறுகின்றன. கல்வித் துறை, திடீரென்று சென்ற டிசம்பரில், எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்களெல்லாம் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்தவேளையில், ஒரு ஒன்பது பக்கங்களை இந்த மூன்று மாநிலங்களையும் பற்றி வெளியிட்டு, அதையும் பழைய சிலபஸுடன் இணைத்துக் கொள்ளுங்கள் என்று அறிக்கை அனுப்பியது. அவ்வளவுதான்! பள்ளிகளில் ஒரே கூச்சல், குழப்பம், கடைசியில், பழசோ புதுசோ, எந்த பாடத் திட்டத்தின் அடிப்படையில் விடைகள் அமைந்தாலும்... அட, விடை என்று ஒன்று இருந்தால் போதாதா? மார்க் போடுவதாக, கல்வித் துறை அறிவித்துவிட்டது! ம்ம்... சரித்திரத்தை மாற்றினாலும் பூகோளத்தை மாற்ற முடியாதோ?



• ஏக்தா கபூர்

கெடுவதற்கும்

மாற்ற முடியாதவற்றை மாற்றிக் காட்டுவதுதான் தெய்வச் செயல்! இந்தோரிலிருந்து புறப்பட்டு, வந்து கொண்டிருந்த ஹெலிகாப்டர், ஆயிரம் அடியில் பறந்து கொண்டிருந்தபோது முதல் இன்ஜின் சுழன்று கொண்டது. 900 அடியில் இரண்டாவது இஞ்சினும் உயிரைவிட, விர்ரென்று கீழிறங்கி, சேறும் சகதியுமான பகுதியில் விழுந்து சுக்கு நூறானது. எரிபொருள் டாங்கி வெடித்துச் சிதறியது. ஆனால்... உள்ளே இருந்த நால்வரும் சிறு சிராய்ப்புக் கூட இல்லாமல் தப்பி விட்டனர். அந்த நால்வரில் ஒருவர், பிரபல பின்னணிப் பாடகி அனு



• டேனியல் பேர்ல்

ராதா பௌத்வால். "என் கையில் இருந்த பையில், கணபதி, தேவீமா படங்கள் இருந்தன. அதை மார்போடு அணைத்துக் கொண்டு, அன்னை இருக்கிறாள். அவள் காப்பாற்று வாள் என்று மனசுக் குள் சொல்லிக் கொண்டே இருந் தேன். அதே போல காப்பாற்றி விட்டாள்" என்கிறார் அனுராதா. நம்பினார் கெடுவரோ?

கெடுவதற்கும் கெடுப் பதற்கும் அவார்டா? கேள்விப் பட்டதில்லையே என் கிறீர்களா? பெண்களை மோசமாகக் காட்டும்



அவார்டு கெடுப்பதற்கும் அவார்டு!

படம், ஸீரியல், இவற்றுக்கு முறையே துரியோதனா அவார்டும் ராக்ஷஸா அவார்டும், பெண்கள் இயக்கம் ஒன்று அறிவித்திருக்கிறது! படங்களுக்கு ஒரு 40 நாமினேஷன்கள் வந்திருக்கின்றனவாம். சீரியல் விஷயம் சவசவதானாம். ஆனால், பிரபல ஸீரியல் "ஸாஸ் பீ கபி பஹு தி"யின் தயாரிப்பாளர் ஏக்தா கபூருக்கு இந்த அவார்டை வழங்கலாம் என்று சிலர் முன் மொழிந்திருக்கின்றனர். காரணம், சமீபத்திய எபிஸோட் ஒன்றில், கருவுற்றிருக்கும் ஒரு பெண்மணி, ஸோனோக்ராஃபி எடுப்பதாக வும், பிள்ளை குழந்தை என்று தெரிய வந்ததும், அவரை எல்லோரும் பாராட்டுவது போலவும் சித்திரிக்கப்பட்டிருப்பதுதான். பாவம்... இப்போதுதான் கதையை ஒரு 20 ஆண்டுகள் முன்னோக்கி அமைத்திருக் கிறார்கள். அதற்கே எக்கச்சக்கமான நையாண்டிகள். மிஹிர் ஆக நடித்த பிரபல ஹீரோ அமர் உபாத்யாய் வேறு, 'ஐயோ, நரையுடன் நான் நடிக்க மாட்டேன்' என்று கழண்டு கொண்டுள்ளார். இப்போது இது வேறு, புதுத் தொல்லை!

'தொல்லை பேசியா? தொலைபேசியா?' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்த துடிப்புடன் காத்திருக்கிறார் பாந்த்ராவாசியான பாமினின் டிமெல்லோ. 72 மணி நேரத்தில் 500க்கு மேற்பட்ட 'கால்'களைப் பெற்றுத் தொலைத்தவராயிற்றே..? ''என் மாமா 'ஷா'வுக்கு ஒன்றும் ஆகவில்லையே? மணிபென் படேல் என்ற பெண்மணி 'ஓகே' வா? அடிபட்டவர்களை எந்த ஆஸ்பத்திரியல் அட்மிட் செய்திருக் கிறீர்கள்?" இப்படியே தொடர்ந்தார்போல் ஃபோனில் விசாரிப்புகள்! சூரத் அருகே, சயாஜி எக்ஸ்பிரஸ் டீரெயில் ஆனதும், சில செய்தித் தாள்களில், 'உதவி எண்' வரிசையில் டாமினிக்கின் தொலைபேசி எண்ணும் இடம் பெற்றுவிட்டது. எண் சரிதான். ஆனால் அது அகமதாபாத்துக்குரிய நம்பர் என்பதைத் தெரிவிக்காமல் விட் டிருக்கிறார்கள். லோக்கலாக அடித்தால், அது இவருக்கு வர, தொலைபேசி சிணுங் கினாலே இவருக்கு ஒரே அலர்ஜியாகி விடுகிறது.

- ஜெயஸ்ரீ ராஜ்

குமாரி. பிரியங்காவின் பரத நாட்டியம் அரங்கேற்றம்

மும்பை, முலுண்ட் திரு. முத்துசுவாமி, திருமதி. ஜெயந்தி முத்துசுவாமி அவர்களின் குமாரத்தி **குமாரி. பிரியங்கா முத்துசுவாமி**யின் பரத நாட்டிய அரங்கேற்றம் 3.2.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில், மும்பை, முலுண்ட் மகாகவி காளிதாஸ் நாட்டிய மந்திர் மன்றத்தில் நடைபெற்றது.



குமாரி. பிரியங்கா, முலுண்ட், வாணி வித்யாலயாவின் ஆறாம் வகுப்பு மாணவி. தன் ஐந்தாவது வயதிலிருந்து கடந்த ஆறு வருடங்களாக நாட்டியம் பயின்று வரும் மாணவி. ஆரம்பத்தில் செல்வி. கார்த்தியாணியிடமும், முலுண்ட் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் நடன பள்ளியில் திருமதி. ஷாலினி நடராஜனிடமும், பிறகு மும்பை, மாதுங்கா, ஸ்ரீராஜராஜேஸ்வரி பரத நாட்டிய கலா மந்திரில் குரு. திருமதி. கருணாம்பாள், குரு. திரு. வசந்தகுமார் அவர்களிடமும் முறையாக நாட்டியத்தைப் பயின்றவர். நாட்டியத்தை தவிர குமாரி. பிரியங்கா ஓவியம் வரைவதிலும், விளையாட்டுத் துறையிலும் தேர்ந்தவர். இவரது பெற்றோர்களின் ஊக்குவிப்பாலும், சிறந்த பயிற்சியாலும் பரதக் கலையினை தனி ஆர்வத்துடன் கற்றுக் கொண்ட இவரது **பரத நாட்டிய அரங்கேற்றம்** 3.2.2002 அன்று நடைபெற்றது.

இவ்விழாவை மும்பை, முலுண்டில் பல வருடங்களாக கலைச்சேவை செய்துவரும் முலுண்ட் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியும், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பரதநாட்டிய கலாமந்திரும் முன்னின்று நடத்தியது.

இந் நிகழ்ச்சியினை பாராட்டிய ஒவ்வொருவரும் மற்றும் ரசிகர்களும் குமாரி. பிரியங்காவின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சியானது. 'இந்த பதினோரு வயதிலேயே அவர் பல மேடைகளில் ஆடி அனுபவம் பெற்ற ஒரு நாட்டிய பெண்மணியின் நாட்டியம் போன்றிருந்தது' என்று புகழ்ந்தனர். தில்லை அம்பலத்து அருள்மிகு நடராஜனை வணங்கி நாமும் குமாரி. பிரியங்காவின் கலைச்சேவை தொடர மனதார வாழ்த்துவோமாக.

ADVT



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கை யில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356; 475 5799
Email: svhome1rediffmail.com

சிவகாமியின் சபதம்

பூர்வகதை

காஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு பல்லவ சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த மகேந்திரவர்ம சக்கரவர்த்தியின் குமாரர் மாமல்ல நரசிம்மருக்கும், அரண்ய மத்தியில் வீடு கட்டிக் கொண்டு வாழ்ந்த ஆயனச் சிற்பியின் மகள் சிவகாமிக்கும் காதல் ஏற்பட்டு வளர்ந்து வருகிறது.

பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்த வாதாபி புலிகேசியின் சைன்யத்தை எதிர்ப்பதற்காக மகேந்திரர் பல்லவ சைன்யத்துக்குத் தலைமை வகித்து வடக்கே செல்கிறார். போகும் போது, தம் குமாரரிடம் காஞ்சிக் கோட்டைக்கு வெளியே போவதில்லையென்று வாக்குறுதி பெற்றுக்கொண்டு செல்கிறார்.

ஆயனச் சிற்பிக்காக அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து வரச் சென்ற பரஞ்சோதி என்னும் இளைஞன் வழியில் பல்லவ சைன்யத்தைச் சேர்த்து அரும் பெரும் வீரச் செயல்கள் புரிகிறான். அவனைக் காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தமாக்கும் பொருட்டுச் சக்கரவர்த்தி அனுப்பி வைக்கிறார்.

பரஞ்சோதி மாமல்லரிடம் நட்புரிமை பூண்ட பின் ஆயனச் சிற்பியின் அரண்ய வீட்டுக்கு வந்து, எதிரி சைன்யம் நெருங்கி வருவதால் ஆயனரும் அவர் மகளும் ஒன்று காஞ்சிக்கோட்டைக்குள் வர வேண்டும் என்றும், இல்லாவிடில் சோழ நாட்டுக்குப் போகலாமென்றும் தெரிவிக்கிறான்.

பரஞ்சோதியை ரதத்தில் ஏற்றிக் கொண்டு வந்த கண்ணபிரான், குமார சக்கரவர்த்தியிடமிருந்து சிவகாமிக்குக் காதல் ஓலை கொண்டு வந்து கொடுக்கிறான். அதைப் படித்த கிளர்ச்சி

அமரர் கல்கி

யினால் சிவகாமி ஆனந்த பரவசமாக நடனம் ஆடுகிறாள்.

நாகநந்தி என்னும் புத்த பிக்ஷு, மாமல்ல நரசிம்மனைப் 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்று குறிப்பிட்டு, அவன் பல்லவ சிம்மாசனத்துக்குத் தகுதி யற்றவன் என்று சக்கரவர்த்தி தீர் மானித்து விட்டதாகச் சொல்கிறார். இந்த வார்த்தைகள் உருக்கிய ஈயத் தைப் போல் சிவகாமியின் செவியில் விழுகின்றன. மாமல்லரின் காதல் ஓலைகளை நெருப்பில் இட்டு எரித்து விட எண்ணிச் சிவகாமி அந்த ஓலை களை வைத்திருந்த மரப் பொந்தில் போய்த் தேடுகிறாள். பொந்தில் ஓலை களைக் காணவில்லை.

பதின்மூன்றாம் அத்தியாயம்

சத்ருக்னன் வரலாறு

பாக்கினி நதிக்கரையில் பல்லவ சைனியத்தின் பாசறையில் ரிஷபக் கொடி கம்பீரமாகப் பறந்த கூடாரத்தின் உள்ளே மகேந்திர சக்கரவர்த்தி வீற்றிருந்தார். அவருக் கெதிரே சக்கரவர்த்தியின் அந்தரங்க ஒற்றனாகிய சத்ருக்னன் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த் தால் வெகுதூரம் பிரயாணம் செய்து வந்தவனாகக் காணப்பட்டான். உடம் பெல்லாம் சொட்டச் சொட்ட வியர்த்திருந்தது. எட்டு மாதத்திற்கு முன்னால் அவனைப் பார்த்ததற்கு இப்போது அடையாளங்கூடக் கண்டு பிடிக்க முடியாதபடி உருவம் மாறிப் போயிருந்தது.

சக்கரவர்த்தி, சத்ருக்னனை உற்றுப் பார்த்துவிட்டு, "யார், சத்ருக்னனா?" என்று கேட்டார்.

"அடியேன்தான், பல்லவேந்திரா!"

"ரொம்பவும் உருவம் மாறிப் போயிருக்கிறாய்!"

"ஆமாம். பிரபு! சக்கரவர்த்தியின் சேவையில் எவ்வளவு கஷ்டங்களை அநுபவித்தாலும் என் தேகம் புஷ்டி யடைகிறது!"

"இல்லை; மெலிந்திருக்கிறாய் என்று சொன்னேன். எட்டு மாதத்துக்கு முன்பு உன்னிடம் ஏதோ முக்கியமான காரியத்தை ஒப்படைத்ததாக ஞாபகம். என்ன காரியம் என்று நினைவிருக் கிறதா?" என்று மகேந்திரர் கேட்டார்.

சத்ருக்னன், "நன்றாக நினைவிருக் கிறது, பிரபு! வேறு நினைவே எனக்குக் கிடையாது!" என்றான்.

"மறந்தது நான்தான்; கொஞ்சம் ஞாபகப்படுத்து, பார்க்கலாம்!" என்றார் சக்கரவர்த்தி.

"பிக்ஷுவைப் பின் தொடரச் சொன் னீர்கள்!"

"ஓஹோ! அப்புறம்?"

"ஆயனரைக் கவனிப்பதற்கு ஆள் போடச் சொன்னீர்கள்!"

"அவ்வளவுதானா?"

"இன்னும் ஒரு கடினமான வேலை யும் கொடுத்தீர்கள், பிரபு! குமார சக்கரவர்த்தியின் போக்குவரவுகளைக் கவனித்து வரும்படி கட்டளையிட் டீர்கள்!"

"ஆம்! ஆம்! ஞாபகம் வருகிறது!"

"ஏதேனும் முக்கியமான தகவல் கிடைத்தால், நம்பிக்கையான ஆள் மூலம் செய்தி அனுப்பச் சொன்னீர்கள். மிக முக்கியமான செய்தியாயிருந்தால் என்னையே நேரில் வரச் சொன் னீர்கள்!"

"அப்படியானால், மிக முக்கியமான செய்தி இப்போது கொண்டு வந்திருக் கிறாய் போலிருக்கிறது!"

"ஆம், பல்லவேந்திரா! வேறு யாரிடமும் அனுப்ப முடியாத செய்தி;

அதனால்தான் நானே வந்தேன்!''

''ஒவ்வொன்றாகச் சொல், பார்க்கலாம்!''

சத்ருக்னன் நாகநந்தியைத் தான் பின் தொடர்ந்தது பற்றி முதலில் சொன்னான். அந்த வரலாறு பின் வருமாறு:

நாகநந்தி பரஞ்சோதியிடம் ஓலை கொடுத்து அவனை நாகார்ஜுன மலைக்குப் போகும்படி அனுப்பிய பிற்பாடு, தெற்கே கிளம்பிப் போனார். சத்ருக்னனும் அவரைப்



பின்தொடர்ந்து போனான். கெடில நதிக்கரையில் அடர்ந்த காடும் சிறிய குன்றுகளும் சூழ்ந்த ஓர் இடத்தில் கட்டியிருந்த புத்த விஹாரத்தை அடைந்து சில தினங்கள் தங்கினார். அங்கே இருந்த புத்த பிக்ஷுக்கள் சிலருக்கு ஏதேதோ செய்தி சொல்லி நாலாபுறமும் அனுப்பினார். அவர்களில் ஒருவர் உறையூருக்கும் இன்னொருவர் கங்கராஜ்யத்தின் தலைநகரான தலைக் காட்டுக்கும் சென்றதாகத் தெரிந்தது.

பிறகு, நாகநந்தி மறுபடியும்





தெற்கு நோக்கிப் பிரயாணமானார். கொள்ளிடத்தையும் காவேரியையும் கடந்து நாகப்பட்டினம் சென்றார். அங்கேயிருந்து மதுரைக்குப் பிரயாணமானார். மதுரைக்கு நாகநந்தியும் சத்ருக்னனும் போன சமயம் மாறவர்ம பாண்டியன் கடும் நோய்வாய்ப்பட்டு 'இன்றைக்கோ, நாளைக்கோ' என்றிருந்தான். அடுத்தபடி பட்டத்துக்கு வர வேண்டிய இளம் பாண்டியனுடைய கட்டளையினால் அயலூர்க்காரர் எல்லாரும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். நாகநந்தியும் சத்

ருக்னனும் ஒரே சிறையில் இருக்கும்படி நேர்ந்தது. அங்கே பிக்ஷுவுடன் சிநேகம் செய்துகொண்டான். இவர்கள் சிறையில் இருக்கும்போதே மாறவர்மன் காலமாகி சடையவர்மன் சிம்மாசனம் ஏறினான். பின்னர் இவர்களுக்கு விடுதலை கிடைத்தது. நாகநந்தி புதிய பாண்டியனைச் சந்தித்தார். அவர்களுக்குள் பல தினங்கள் பேச்சுவார்த்தை நடந்தது. இதற்கிடையில் மாமல்லருக்குப் பெண் கொடுக்கும் விஷயமாகக் காஞ்சிக்குப் போன தூதர்கள் திரும்பி வந்தார்கள். மறுபடியும் சிலநாள் நாகநந்திக்கும் சடையவர்மனுக்கும் சம்பாஷணை நடந்த பிறகு, பாண்டியன் நாடெங்கும் படை திரட்டும்படி கட்டளை பிறப்பித்தான்.

நாகநந்தி பிறகு மதுரையிலிருந்து கிளம்பி வடக்கு நோக்கிப் பிரயாணமானார். சத்ருக்னனும் அவரோடு புறப்பட்டான். வழியெல்லாம் புத்த பிக்ஷு பெரும் சிந்தனையில் ஆழ்ந்தவராய்க் காணப்பட்டார். காவேரியையும் கொள்ளிடத்தையும் தாண்டி அவர்கள் கெடில நதிக்கரையில் இருந்த புத்த விஹாரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இதற்குள்ளாகச் சத்ருக்னனுக்குப் புத்த பிக்ஷு தன்னை ஒற்றன் என்று தெரிந்துகொண்டிருக்கிறார் என்ற சந்தேகம் உண்டாகியிருந்தது. அச்சமயம் அந்தப் புத்தவிஹாரத்தில் ஏற்கெனவே காஞ்சி இராஜ விஹாரத்தில் இருந்த இளம் பிக்ஷு இருந்தான். அந்த இளம் பிக்ஷு சத்ருக்னனை வெறித்து வெறித்துப் பார்த்ததிலிருந்து சத்ருக்னனுடைய சந்தேகம் உறுதிப்பட்டது. எனவே, அன்று இளம் பிக்ஷு சத்ருக்னனுக்கு அளித்த உணவை அவன் உடனே சாப்பிடாமல் நதியின் வெள்ளத்தில் கொஞ்சம் போட்டுப் பார்த்தான். அதைச் சாப்பிட்ட மீன்கள் உடனே நீலநிறமாக மாறிச் செத்துத் தண்ணீரில் மிதந்ததைக் கண்டான். அன்று இரவு நாகநந்திக்கும் இளம் பிக்ஷுவுக்கும் தெரியாதபடி அந்தப் புத்த விஹாரத்தையும் அதை அடுத்திருந்த குன்றுகளையும் சுற்றிப் பார்த்தான். குன்றுகளில் குடைந்திருந்த இரகசியக் குகைகளுக்குள் பலவகைப் போர்க் கருவிகள் சேகரித்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். குன்றுகளைச் சுற்றி வந்தபோது ஓர் இடத்தில் கேட்டவுடனே இருதயம் நின்று போகும்படியான அவ்வளவு பயங்கரமான சீறல் சத்தத்தைக் கேட்டான். ஆயிரம் நாக சர்ப்பங்கள் சீறுவது போன்ற அந்தச் சத்தம் எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டுபிடிக்க அவன் ஆன மட்டும் முயன்றும் முடியவில்லை.

மறுநாள் உதயத்தில் புத்தபிக்ஷு இந்த இரகசிய புத்த விஹாரத்திலிருந்து புறப்பட்டு, சமுத்திரம் போல் அலை மோதிக் கொண்டிருந்த திருப்பாற்கடல் என்னும் ஏரிக்கரை வழியாக வடக்கு நோக்கிச் சென்றார். அவர் அறியாதபடி அவரைப் பின்தொடர்ந்து சத்ருக்னனும் சென்றான். கடைசியில் ஆயனரின் அரண்ய வீட்டை நாகநந்தி அடிகள் அடைந்தார்.

தான் இல்லாதபோது ஆயனரைக் கவனித்துக் கொள்ளுவதற்காகக் குண்டோதரன் என்பவனைச் சத்ருக்னன் விட்டு விட்டுப் போயிருந்தான். அவன் ஆயனரிடம் சிற்பக்கலையும் சித்திரக் கலையும் கற்கும் சீடனாக அமர்ந்து ஆயனர் வீட்டிலே இருந்து வந்தான். குண்டோதரன் விசேஷமாகச் செய்தி ஒன்றும் சொல்லவில்லை. சாரதி கண்ணபிரானும் அவன் மனைவி கமலியும் சிலமுறை அங்கு வந்துவிட்டுப் போனதாக மட்டும் தெரிவித்தான்.

காஞ்சியில், நரசிம்மவர்மரின் போக்குவரவுகளைக் கவனித்து வரும்

படி, கண்ணபிரானுடைய தந்தையைச் சத்ருக்னன் ஏற்படுத்தியிருந்தான். நரசிம்மவர்மர், சக்கரவர்த்தியின் கட்டளையைப் பரிபூரணமாக நிறைவேற்றி வைத்ததாகத் தெரிய வந்தது. சென்ற எட்டு மாதத்தில் காஞ்சியை விட்டு மாமல்லர் வெளியே போகவேயில்லை. காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தம் செய்வதிலேயே பெரும்பாலும் காலத்தைக் கழித்து வந்தாரென்று தெரிந்தது.

மேற்கூறிய விதம் சத்ருக்னன் தான் அறிந்து வந்த வரலாற்றையெல்லாம் கூறி முடித்த பிறகு, சக்கரவர்த்தி, "சத்ருக்னா! என்னுடைய கட்டளையை மிக நன்றாக நிறைவேற்றியிருக்கிறாய். செய்தி இவ்வளவுதானா? உன் முகத்தைப் பார்த்தால் இன்னும் ஏதோ முக்கிய சமாசாரம் இருப்பதுபோல் தோன்றுகிறதே!" என்று கூறினார்.

"ஆம் பிரபு! சில ஓலைகள் கிடைத்தன. அவற்றைத் தங்களைத் தவிர யாரும் பார்க்கக் கூடாதென்று நேரில் கொண்டு வந்தேன்!"

"ஓலையா? என்ன ஓலை?" என்று சக்கரவர்த்தி வியப்புடன் கேட்டுக் கொண்டே கரத்தை நீட்டினார்.

"பல்லவேந்திரா! ஒருவேளை நான் செய்தது குற்றமாயிருந்தால் மன்னிக்க வேண்டும்..!"

சக்கரவர்த்தி துள்ளி எழுந்து, "முட்டாளே! துர்விநீதனுக்குப் புலிகேசி அனுப்பிய ஓலையைத் தடுத்து நிறுத்தி விட்டாயா?" என்று கோப கர்ஜனை செய்தார்.

"இல்லை. பல்லவேந்திரா! மன்னிக்க வேண்டும். நான் சொல்லும் ஓலை யுத்தத்தைப் பற்றியதே அல்ல!"

"நல்லவேளை! எங்கே அப்படி ஏதாவது அசட்டுத்தனமாய்க் குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டாயோ என்று பயந்து போனேன். பின்னே எந்த ஓலையைச் சொல்லுகிறாய்?"

"பல்லவேந்திரா! நான் கொண்டு வந்திருப்பது காதல் ஓலை!"

'ஆ!' என்ற வியப்பொலியுடன் சக்கரவர்த்தி தமது பீடத்தில் அமர்ந்தார். அவருடைய புருவங்கள் நெறிந்தன; நெற்றியில் சுருக்கங்கள் காணப்பட்டன.

"எங்கே? எடு, ஓலையைப் பார்க்கலாம்" என்றார்.

சத்ருக்னன் தலையிலிருந்து முண்டாசை எடுத்தான். அதற்குள்ளேயிருந்த ஓலைச்சுருள்கள் எட்டையும் எடுத்துத் தயக்கத்துடன் சக்கரவர்த்தியிடம் கொடுத்தான்...

மகேந்திரர் ஓலைகளை வாங்கிக் கொண்டார். சற்று நேரம் ஓலைகளைக் கையிலே வைத்துக்கொண்டு சிந்தனை செய்தார்.

பிறகு "சத்ருக்னா! இராஜ்யம் ஆளுவதைப் போல் கொடுமையான காரியம் வேறொன்றும் இல்லை. இராஜ்யத்தின் நன்மைக்காக நான் இந்த நீசத்தனமான காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது. மாமல்லனுடைய குழந்தை உள்ளத்தைக் கிழிப் பார்க்கும் பயங்கரமான பாவத்தைச் செய்யப் போகிறேன்" என்றார்.

பதினான்காம் அத்தியாயம்

மகேந்திரர் தவறு

சத்ருக்னன் கொடுத்த ஓலைகளைப் படித்து வந்தபோது மகேந்திரருக்கு அடிக்கடி கைகள் நடுங்கின. முதலிலே இரண்டு மூன்று ஓலைகளைச் சற்று சாவகாசமாகப் படித்தார். மற்றவையெல்லாம் விரைவாகப் பார்த்து முடித்தார்.

கடைசியில் சத்ருக்னனைப் பார்த்து, ''சத்ருக்னா! இந்த ஓலைகளை நீ கொண்டு வந்திருக்கக் கூடாது; என்னிடம் கொடுத்திருக்கவே கூடாது!'' என்று சோகக் குரலில் கூறினார்.

"பல்லவேந்திரா! மன்னிக்க வேண்டும்!'' என்றான் சத்ருக்னன்.

''உன் பேரில் குற்றம் ஒன்றுமில்லை, சத்ருக்னா! மன்னிப்புக் கேட்பதற்குரிய காரியம் எதுவும் நீ செய்யவில்லை. உன்னுடைய கடமையையே நீ செய்தாய், என் மனத்துக்கு அது எவ்வளவு வேதனை தரும் காரியம் என்பது உனக்கு எப்படித் தெரியும்? அரண்மனைத் தோட்டத்திலே ஓர் அழகான பூஞ்செடி முளைத்தது. அரண்யத்தின் நடுவிலே ஒரு மனோகரமான மலர்க் கொடி தழைத்தது. இரண்டும் இளந் தளிர்கள் விட்டு வளர்ந்தன. பருவ காலத்தில் அரும்பு விட்டுப் பூத்துக் குலுங்கின. அந்தப் பூஞ்செடியையும் மலர்க்கொடியையும் வேரோடு பிடுங்கி நெருப்பிலே போட்டுப் பொசுக்கும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. சத்ருக்னா! அது எவ்வளவு குரூரமான பொறுப்பு என்பதை நீ கொண்டு வந்த இந்த ஓலைகளிலிருந்து நன்றாக அறிகிறேன்...''

மகேந்திர பல்லவர் பெருமூச்சு விட்டு விட்டு, "சத்ருக்னா! மாமல்லரின் கோமள இருதயத்தை நான் எவ்வளவு தூரம் புண்படுத்தியிருக்கிறேன், தெரியுமா? எவ்வளவு தூரம் அவன் மன உறுதியைச் சோதித்திருக்கிறேன், தெரியுமா? இதைக் கேள்'' என்று கூறி ஓலையிலிருந்து பின்வரும் பகுதியை வாசித்தார்:-

'என் ஆருயிரே! உன்னை வந்து பார்ப்பதற்கு என் உயிர், உடல், ஆவி அனைத்தும் துடிதுடித்துக்கொண்டிருக்கின்றன. இந்தக் காஞ்சிக் கோட்டையைப் போல் நூறு மடங்கு கட்டும் காவலுமுள்ள கோட்டைக்குள்ளே என்னை வைத்திருந்தாலும் எல்லாக் கட்டுக் காவலையும் மீறிக்கொண்டு உன்னிடம் நான் பறந்து வந்து விடுவேன். கடல்களுக்கு நடுவிலுள்ள தீவில் இராவணன் சீதையைச் சிறை வைத்தது போல் உன்னை, யாராவது வைத்திருந்தால் அங்கேயும் உன்னைத் தேடி வந்தடைவேன். சொர்க்க லோகத்திலே இந்திரனும், பாதாள லோகத்திலே விருத்திராசுரனும் உன்னைச் சிறைப் படுத்தியிருந்தாலும், நான் உன்னை வந்து அடைவதைத் தடைப்படுத்த முடியாது. ஆனால் இதையெல்லாம் காட்டிலும் பெரிதான தடை வந்து குறுக்கிட்டிருக்கிறது. அது என் தந்தையின் கட்டளைதான். தாம் அனுமதி அளிக்கும்வரையில் காஞ்சிக் கோட்டையை விட்டு வெளியே போகக் கூடாதென்று மகேந்திர பல்லவர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். சிவகாமி! இந்த உலகத்தில் என்னால் செய்ய முடியாத காரியம் ஒன்று உண்டு என்றால், அது என் தந்தையின் கட்டளையை மீறுவதுதான். நெற்றிக் கண்படைத்த சிவபெருமான் என் முன்னால் பிரத்தியட்சமாகி, மகேந்திர பல்லவரின் கட்டளைக்கு விரோதமாக ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னால், ஒருநாளும் அதை நான் செய்ய மாட்டேன். அவ்வளவு தூரம் என் பக்திக்கு உரியவரான என் தந்தை இப்போது என்னை எப்பேர்ப்பட்ட கொடுமைக்கு ஆளாக்கி விட்டார் தெரியுமா? என்னுடைய உயிரைக் காட்டிலும் எனக்குப் பிரியமான காதலிகள் இருவரையும் நான் சந்திக்க முடியாதபடி செய்துவிட்டார். அந்த இரண்டு காதலிகளில் ஒருத்தி ஆயனச் சிற்பியின் மகள் சிவகாமி. அவளை அரண்ய மத்தியிலுள்ள தாமரைக் குளக் கரையில் நான் ஏகாந்தமாகச் சந்திக்க விரும்புகிறேன். இன்னொரு காதலி யார் தெரியுமா? அவள் பெயரை உனக்குச் சொல்லட்டுமா? சொன்னால் நீ அசூயை அடையாமல் இருப்பாயா? அவள் பெயர் ஜயலக்ஷ்மி. அந்தக் காதலியை நான் இரத்த வெள்ளம் ஓடும் யுத்த களத்தில் மத்தியில் சந்திக்க ஆசைப்படுகிறேன். சந்தித்து அவள்



என் கழுத்தில் சூடும் வெற்றி மாலையுடனே திரும்பி வந்து உன்னைப் பார்க்க விரும்புகிறேன்!''

மகேந்திரர் இவ்விதம் வாசித்து வந்தபோது, சத்ருக்னன் தலைகுனிந்து பூமியைப் பார்த்தவண்ணம் நின்றான்.

"கேட்டாயா, சத்ருக்னா! இப்பேர்ப்பட்ட புதல்வனைப் பெறுவதற்கு நான் எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டும்? இராமனைப் பெற்ற தசரதரைவிட நான் பாக்கியசாலி அல்லவா? இராமன் அப்படி என்ன தியாகம் செய்துவிட்டான்? இராஜ்யத்தைத் துறந்து சீதையோடும் லக்ஷ்மணனோடும் வனத்துக்குச் சென்றான். இராஜ்யம் ஆளுவதைக் காட்டிலும் வனத்தில் உல்லாச வாழ்க்கையை இராமன் விரும்பியதில் வியப்பு என்ன? ஆனால், தந்தையின் வாக்கைப் பரிபாலனம் செய்யும் பொருட்டு வனத்துக்குப் போவதைக் காட்டிலும் போர்க்களத்துக்குப் போகாமலிருக்க நூறு மடங்கு மன உறுதி வேண்டும். பரிசுத்தமான இளம் உள்ளத்திலே முதன்முதலாகக் காதலித்த பெண்ணைப் பார்க்கப் போகாமல் இருப்பதற்கு அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு திடசித்தம் வேண்டும். இத்தகைய கடும் சோதனையில் நரசிம்மன் தேறியிருக்கிறான் என்பதை நினைக்கும்போது, என் உள்ளம் பூரிக்கிறது. ஆனால் சோதனையை ஏற்படுத்திய நானோ படுதோல்வியடைந்தேன். நரசிம்மனையும் சிவகாமியையும் பிரித்து வைத்திருந்தால், அவர்கள் ஒருவரையொருவர் பார்க்காமலிருந்தால், சிவகாமியின் காதல் வலையிலிருந்து நரசிம்மன் மீண்டு விடுவான் என்று நினைத்தேன். காதலை நெருப்பு என்று கூறுவது முற்றும் பொருத்தமானது. சத்ருக்னா! நெருப்பு சொற்பமாயிருந்தால், காற்று அடித்ததும் அணைந்து விடுகிறது. பெரு நெருப்பாயிருந்தால், காற்று அடிக்க அடிக்க நெருப்பின் ஜ்வாலை அதிகமாகிக் கொழுந்துவிட்டு எரிகிறது. நெருப்புக் காற்று எப்படியோ, அப்படிக் காதலுக்குப் பிரிவு என்று தோன்றுகிறது. பொய்க் காதலாயிருந்தால், பிரிவினால் அது அழிந்து விடுகிறது. உண்மைக் காதலாயிருந்தாலோ, பிரிவினால் அது நாளுக்கு நாள் வளர்ந்து பெரு நெருப்பாய் மூளுகிறது! நரசிம்மன் விஷயத்தில் அப்படித்தான் நடந்து விட்டது. நான் எவ்வளவோ யோசனை செய்து போட்ட திட்டங்களையெல்லாம் காமதேவன் தன்னுடைய மெல்லிய பூங்கணை ஒன்றினால் காற்றில் பறக்கச் செய்துவிடுவான் போலிருக்கிறது. சத்ருக்னா! வாதாபி சக்கரவர்த்தியிடம் தோற்றாலும் தோற்கலாம். கேவலம் மன்மதனுடைய மலர்க்கணைக்கா மகேந்திர பல்லவன் தோற்றுவிடுவது? ஒரு நாளும் இல்லை!'' என்று கூறி மகேந்திர சக்கரவர்த்தி மீண்டும் சிரித்தபோது அவருடைய சிரிப்பில் எக்களிப்பு தொனித்தது.

''மாமல்லனுக்கு நான் இட்ட கட்டளையை இந்தக் கணமே மாற்றிவிடுகிறேன். சத்ருக்னா! நான் தரும் ஓலையை எடுத்துக்கொண்டு வாயுவேக மனோவேகமாய்க் காஞ்சிக்குப் போக வேண்டும். தலைக்காட்டிலிருந்து துர்விநீதனுடைய சைனியம் காஞ்சியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதை எதிர்த்து நிர்மூலமாக்குவதற்கு நரசிம்மன் போர்க்களத்துக்குச் செல்லட்டும். போவதற்கு முன்னால் ஆயனர் வீட்டுக்குப் போய்ச் சிவகாமியைப் பார்த்து விட்டுப் போவதாயிருந்தாலும் போகட்டும். அதற்கு நான் குறுக்கே நிற்கப்போவதில்லை!''

இதைக் கேட்டதும், சத்ருக்னனுடைய முகத்தில் தோன்றிய விசித்திரமான புன்னகை, ''என்னிடம் கூடவா உங்களுடைய கபட நாடகம்?'' என்று கேட்பது போலிருந்தது.

(தொடரும்)



அன்னமே பிரம்மா!　அன்னமே விஷ்ணு!　அன்னமே சிவன்!

புண்ணியக்ஷேத்ரம் ராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் ராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ராமஸேது, ஸேது ஸ்தலம் என்று போற்றப்படும் ராமேஸ்வரம், வடக்கே எப்படி காசி நகரம் புகழ்மிக்கதோ அதேபோன்று தெற்கில் ராமேஸ்வரம் புகழ்மிக்க புண்ணிய க்ஷேத்ரமாகும். ராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் அழியாத புண்ணியப் பலனைக் கொடுக்கும்.

ராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். பிரம்மஹத்தி தோஷம் நிவர்த்தியாகும். ராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். வறுமை நீங்கி, பெரும் பணக்காரனாவான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கண் திருஷ்டி, பொறாமை, வீண் விரோதம், கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக பூஜை செய்து, அன்னமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறிய தொகை, மற்றும் அரிசி போன்ற உணவு பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ. 500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ. 1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ. 5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஐந்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ரூ. 1000 மற்றும் ரூ. 5000 அளிக்கும் நன்கொடையாளர்களுக்கு திருவெண்காடு கவி-ந்யாய-மீமாம்ஸ சிரோமணி ஸ்ரீமான் டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகளால் தயாரிக்கப்பட்டு பூஜையில்வைத்த அபூர்வ யந்திரம், அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப எந்த யந்திரம் தேவையோ அந்த யந்திரம் இலவசமாக வழங்கப்படும். அல்லது பகவத்கீதை புத்தகம் அல்லது கந்தபுராணம் புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு அணில் செய்த ஸேவை போல் இந்த லோகக்ஷேமத்திற்கு நம்மால் இயன்றளவில் உபகாரம் செய்திடுவோம். நேரில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI - 41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F4 TNHB FLATS, I AVENUE, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA
Ph : 4900303, 49[illegible]603 Fax : (044) 4916316

பரோபகாரார்த்தம் இதம் சரீரம் ★ அன்னதானம் அமிர்ததானம் ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

"வாழ்க்கை என்றால் விபத்துகள் இருக்கத்தான் செய்யும். கட்டாயம் காயம் ஏற்படக்கூடும். அந்த காயத்தை ஆற வைக்கும் அருமருந்து உங்களிடம்தான் இருக்கிறது" என்கிறார் அர்ச்சனா!

அர்ச்சனா?

ஆயிரக்கணக்கான அர்ச்சனாக்களுக்கு மத்தியில் இந்த பங்காருபெட் அர்ச்சனாவின் முகம் சற்று வித்தியாசமானது. படபடக்கும் கண்களுக்குப் பின்னால் ஒரு சோக அத்தியாத்தைக் கொண்டது. வாழ்க்கையில் புயல் வீசும்; சிலர் மூலையில் முடங்கிப் போய் உட்கார்ந்து விடுவார்கள். ஆனால் அர்ச்சனாவின் வாழ்வில் சூறாவளி அடித்து ஓய்ந்திருக்கிறது. இருந்தாலும் இந்த நாணல் தலை நிமிர்ந்து நிற்கிறது. ஆலமரமாய் அடுத்தவருக்கு நிழல் கொடுக்க விரும்புகிறது. தனது வாழ்வில் இருள் கவிந்தாலும் மற்றவர் வாழ்வில் விளக்கேற்ற விரும்புகிறது.

19 வயதிலேயே டாக்டர் பட்டம் பெற்ற ஜெயகிருஷ்ணா



சூறாவளிக்குப் பின்...


அம்பட்டிக்கு அர்ச்சனா மனைவியானபோது பங்காருபெட் ஊரே வாழ்த்தி அவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தது. மாப்பிள்ளை வீட்டாருக்கு அர்ச்சனாவின் அப்பா நந்தா எந்த குறையும் வைக்கவில்லை. அவர்களின் முறையற்ற பேராசையான கோரிக்கைகளைக் கூட துளியும் முகம் கோணாது நிறைவேற்றித் தந்தார். அவரது ஒரே ஆசை, மகள் நன்றாக வாழ வேண்டும் என்பதே!

அமெரிக்காவுக்குச் சென்ற நாற்பதாவது நாளே இடீரென்று சென்னையிலிருந்து போன். "அப்பா...மதராசிலிருந்து அர்ச்சனா பேசுறேன்". பதறிப் போனார் அப்பா. சென்னைக்கு விரைந்து போய் அழைத்துக் கொண்டு வந்தார். "என்னம்மா ஆச்சு?" நாற்பது நாட்களில் நடந்த கொடுமைகளில் எதைச் சொல்வார் அர்ச்சனா! அவரது மௌனமே பல கேள்விகளுக்கு விடையாகிப் போனது. சென்னைக்கு விமான டிக்கெட் எடுத்துக் கொடுத்து தனியாக

அனுப்பிவிட்டு அர்ச்சனாவைக் கை கழுவியது அந்தக் குடும்பம். நந்தா குடும்பம் கண்ணீரில் மூழ்கியது. என்ன செய்வதென்று தெரியாமல் கையைப் பிசைந்தது. அர்ச்சனாவுக்கு அடுத்து கல்யாணத்துக்கு காத்திருக்கும் மற்றொரு பெண்ணின் வாழ்க்கை இதனால் பாதிக்குமோ என்ற பதற்றம் வேறு.

"கல்யாணத்துக்கு முன்பு நான் எலெக்ட்ரானிக்ஸ்தான் படித்திருந்தேன். வீட்டில் உட்கார்ந்திருந்தால் என் சோகக் கதைதான் அடிக்கடி அரங்கேறியது. ஒரு நாள் நகருவதே பெரிய போராட்டமாக இருந்தது. என்னைக் கொடுமைப்படுத்தியதற்காக போட்ட வழக்கு காரணமாக அடிக்கடி நீதி மன்றங்களுக்குப் போக வேண்டியதாக இருந்தது. அங்கு நான் தெரிந்து கொண்டது என்னவென்றால் என்னைப் போலவே பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையும் தினசரி ஏறிக் கொண்டே போகிறது என்பதுதான். ஆண்களால் பாதிக்கப்பட்ட, பழிவாங்கப்பட்ட, காயப்படுத்தப்பட்ட பெண்களின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களுக்குத் தான் பஞ்சம் என்பதையும் உணர முடிந்தது. எந்தவிதமான படிப்புப் பின்னணியும் இல்லாமல், உட்புற கிராமங்களிலிருந்து வரும் அவர்களின் பிரச்னைகளைப் பற்றி யாருக்கும் கவலையில்லை. நீதிமன்றங்களில் அவர்கள் அலைக்கழிக்கப்படும் போக்கு என்னை வாட்டியது. அவர்களுக்கு எதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத் துடிப்பே, என்னைச் சட்டம் படிக்க வைத்தது!" என்று பழைய நினைவுகளில் மூழ்கிப் போனார் அர்ச்சனா.

ஐந்து வருடம் எல்.எல்.பி. சட்டப்படிப்பு முடித்து இப்போது பெங்களூரில் சீனியர் வழக்கறிஞர் பத்மாவதியின் கீழ் ஜூனியராக இருக்கிறார் அர்ச்சனா. இந்த காலகட்டத்துக்குள் வரதட்சணை கொடுமை வழக்கும், நீதிமன்றம் மூலம் ஒரு முடிவுக்கு வந்து விவாகரத்தும் பெற்றாயிற்று.



"என் காயங்கள் ஆறுவதற்கு என் மன உறுதி ஒரு காரணம் என்றால் எனது தந்தை, தாய், சமூகம் என்று எனக்குத் தைரியமூட்டியவர்களுக்கு நான் எப்படி நன்றி சொல்வது" என்று கேட்கிறார். "பல வேலைகளில் நான் பிஸியாக இருக்கும்போது, இலேசாக இருக்கும் மனம், தனிமையில் இருக்கும்போது மட்டும் பழைய நினைவுகளில் கனத்துப் போவதைத் தவிர்க்க முடியாது போலிருக்கிறது. வடுக்களில் ரத்தம் கசிவது நிற்கப் போவது எப்போதோ?"

> "அயோக்கியர்களையும், தில்லுமுல்லுக்காரர்களையும் பார்க்கும்போது இவர்களுக்குத் தண்டனை கிடைக்க வேண்டுமே என்று மனது ஏங்கித் தவிக்கிறது."

"உங்களுடைய கொடுமையான அனுபவங்கள் உலகைப் பற்றிய உங்கள் பார்வையை மாற்றியிருக்கிறதா அர்ச்சனா?

"யெஸ்... ஓரளவுக்கு என்று சொல்லலாம். நம்மைச் சுற்றி மிக மோசமான கும்பல் ஒன்று அலைந்து திரிகிறது. நல்லவர்களை அடையாளம் காணுவது சற்று சிரமமாக இருக்கிறது. அதிலும் தினசரி நீதிமன்றங்களில் அயோக்கியர்களையும், தில்லுமுல்லுக்காரர்களையும் பார்க்கும்போது இவர்களுக்குத் தண்டனை

கல்கி

VBC Jewellery

House of Vummidi

• 78, G.N.Chetty Road, Vani Mahal Circle, (Opp. Hotel Residency), T.Nagar, Chennai - 600 017. ✆ : 8229556, 8229560

• 11-B, Nageswara Rao Road, Panagal Park, T.Nagar, Chennai - 600 017. ✆ : 4342407, 4346297

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி; பொன்நகைப் பரிசு!

ரஜினியின் ஒவ்வொரு படத்திலும் ஏதாவது ஒரு சூப்பர் டயலாக் திரும்பத் திரும்ப இடம் பெறும். "மலை... அண்ணா மலை", "ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்னமாதிரி" உலகப் பிரசித்தி பெற்றவை! சூப்பர் ஸ்டாரின் அடுத்த படமான 'பாபா'வில் அடிக்கடி ரஜினி என்ன சொன்னால் ஸ்டைலாகவும் அதே சமயம் தமாஷாகவும் இருக்கும்? எழுதுங்கள். இரண்டு ஜாலி டயலாக் தேர்ந்தெடுக்கப்பட்டு தலா நான்கு கிராம் தங்கம் பரிசு வழங்கப் படும். ஓகே....ரெடி...ஸ்டார்ட்!

புன்னகைப் போட்டி - 4

தமாஷ் டயலாக்

கூப்பன் அனுப்பும் உறையில் புன்னகைப் போட்டி - 4 என்று குறிப்பிட்டு கல்கி அலுவலகத்திற்கு அனுப்பவும். கடைசி தேதி: 18.3.2002. ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

கிடைக்க வேண்டுமே என்று மனது ஏங்கித் தவிக்கிறது."

அர்ச்சனாவின் ஆசை, அரசாங்க வழக்கறிஞராக வந்து, தவறு செய்தவர்கள் சட்டத்தின் ஓட்டைகளில் தப்பித்து விடாமல் கண்காணித்து, தண்டனை பெற்றுத் தர வேண்டும் என்பதுதான். ஆனால் அது கொஞ்சம் தாமதமாகும் போலிருக்கிறது. ஏனென்றால் கர்நாடகாவில் அரசாங்க வழக்கறிஞராக வர வேண்டுமென்றால் கன்னடத்தில் பரீட்சை எழுதி பாஸ் செய்ய வேண்டும். "அதில் தான் எனக்குத் தகராறு, கன்னடத்தில் கொஞ்சம் வீக்தான்" என்கிறார் அர்ச்சனா.

பெங்களூரில் குடும்ப நீதி மன்றங்களில் வழக்கு எதாவது தம்மிடம் வந்தால், அர்ச்சனாவிடமே விட்டு விடுகிறார் அவரது சீனியர். பாதிக்கப்பட்ட பெண்கள் தினசரி நிறையவே அர்ச்சனாவைப் பார்க்க வருகிறார்கள். எல்லோருக்கும் தன்னால் முடிந்த இலவச சட்ட உதவியைச் செய்கிறார். "சட்டத்தைச் சாதகமாக்கிக் கொண்டு சில பெண்கள் தப்பாட்டம் ஆடுவதும் நடக்கத்தான் செய்கிறது" என்கிறார் அர்ச்சனா. இப்போது என்னால் முடிந்த உதவி இதுதான். ஆனால் எனக்கென்று ஒரு தளத்தை சமூகத்தில் நான் உருவாக்கிக் கொள்ளும்போது பார்வைகள் இன்னமும் விசாலமாகும்."

இப்படி அர்ச்சனாவின் கண்ணோட்டம் பரந்த அளவில் மாறியிருக்க, அவரது பெற்றோருக்கு, 'ஒரு நல்ல வாழ்வை மகளுக்கு அமைத்துத் தர வேண்டுமே' என்ற துடிப்பு அதிகமாகி வருகிறது.

"அவர்கள் இந்த விஷயத்தில் முனைப்பு காட்டுவதில் தவறில்லை. ஆனால் என் கவலை அப்படி வருபவர் என்னைப் புரிந்து கொண்டு, எனது நோக்கங்களில் உதவுபவராக இருக்க வேண்டும். ஏனென்றால் மற்றொரு அடியைத் தாங்க மன உறுதி இருந்தாலும் காலத்தை வீணாக்க விரும்பவில்லை. நிறைய பணிகள் காத்திருக்கின்றன."

சந்திப்பு: **ப்ரியன்**

படங்கள்: **ராஜன்**



மூட்டுவலியா! இனி கவலை வேண்டாம்!



மூட்டு வலி என்பது மூட்டுக்களில் ஏற்படும் பாதிப்பை குறிக்கின்றது. இதனை கீழ்வாயு என்றும் அழைப்பார்கள். வாதம், பித்தம், கபம் போன்றவைகள் கூடுவதாலும், குறைவதாலும் இந்நோய் உண்டாகிறது.

மூட்டு வலி பல வகைப்படும் அவைகள் :

வாதமூட்டு வலி : வாயுப் பொருட்களை அதிகம் உண்பதால் உண்டாகிறது. வாயுப் பொருட்கள், பயிறு வகைகள், பருப்பு வகைகள், கிழங்கு வகைகள் முதலியன. **பித்தமூட்டு வலி** : பித்தத்தை அதிகப்படுத்தும் உணவுப் பொருட்களை அதிகம் உண்பதால் உண்டாகிறது. டீ, காபி, மது, காரமான உணவு வகைகள் முதலியன. **கப மூட்டு வலி** : கபகுற்றம் மிகுதியான உணவுப் பொருட்கள் அதிகம் உண்பதால் கப மூட்டுவலி உண்டாகிறது. இனிப்பு பண்டங்கள், தயிர், இறைச்சி, நெய், எண்ணெய் பண்டங்கள் முதலியன. **இதய கீழ் வாயு** : இதயத்தை நோய் கிருமிகள் தாக்குவதால் இதய மூட்டு வலி உண்டாகிறது. இதனால் ஜுரம், முழங்கால் மூட்டுகளில் வீக்கம், வலி, சூடு போன்றன தோன்றும். சோதனை செய்து பார்க்கும்போது இதயத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும். **மேக கீழ் வாயு** : விலை மாதர் உறவால் நோய் கிருமிகள் உடலில் பரவி மூட்டுக்களில் பாதிக்கின்றது. இதனால் மூட்டுக்களில் சீழ் பிடித்தல், வீக்கம், வலி, குத்தல், குடைச்சல் போன்றன இருக்கும். **மூட்டு வலியின் அறிகுறிகள்** : மூட்டுக்களில் வலி, குத்தல், குடைச்சல், வீக்கம், நடக்க இயலாமை, சுரம் போன்றவை காணப்படும். மேலும் எலும்பு தேய்மானம், சீழ் பிடித்தல் போன்றவையும் உண்டாகும்.

மூட்டு வலிக்கான மூலிகைகள் : வேப்பிலை, வில்வம், அத்தி, நாவல், அருகம்புல், அரசன், வாத நாராயணன், முடக்கற்றான், கீழா நெல்லி, முருங்கை போன்ற மூலிகைகளை பறித்து வந்து வெய்யிலில் உலர்த்தி பின் உரலில் போட்டு நன்கு இடித்துத் தூள் செய்து, பின் சம அளவில் எல்லாவற்றையும் ஒன்றாக கலந்து ஒரு பாட்டிலில் வைத்துக் கொள்ள வேண்டும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினமும் காலை, இரவு ஆகிய இரண்டு வேளையும் உட்கொள்ள வேண்டும். இவ்வாறு சுமார் மூன்று மாதம் செய்து வந்தால் எல்லா ரக மூட்டு வலிகளும் பூரண குணம் கிட்டும். சுமார் பதினைந்து நாட்களில் குணம் தெரிய ஆரம்பிக்கும்.

எண்ணெய் கலவை : தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய், வேப்ப எண்ணெய் ஆகிய மூன்றையும் சம அளவு ஒன்றாக கலந்து (சுமார் வகைக்கு 50 மில்லி) ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து ஒரு டீஸ்பூன் அளவு உள்ளங்கையில் விட்டு உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக நாவினால் நக்கி சாப்பிட வேண்டும்.

உணவு முறைகள் : தினம் காலை, அல்லது ஏதேனும் ஒரு வேளை பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்கள், பழ ஜூஸ்கள், வெஜிடபிள் சாலட், ப்ரூட் சாலட் போன்றவற்றில் ஏதேனும் இரண்டு அல்லது மூன்று வகைகளை தேவையான அளவு உட்கொள்ளவும். உதாரணம் பப்பாளி, மா, அன்னாசி, வாழை, பேரிட்சை நாவல், கொய்யா, மாதுளை, சப்போட்டா, திராட்சை, நொங்கு, இளநீர், பதனீர், தேங்காய், கேரட், வெள்ளை வெள்ளரிக்காய், கோவக்காய், பீர்க்காய் போன்றன உட்கொள்ளலாம். மற்ற இரண்டு நேரம் சாதாரண சமைத்த சைவ உணவுகளை உண்பது நல்லது. இதிலும் ராகி கோதுமை, பார்லி, உளுவல் போன்ற தானியங்கள் அடிக்கடி சேர்த்துக் கொள்வது நல்லது. முள்ளங்கி, அவரை, கேரட், பீட்ரூட், வாழைத்தண்டு, கத்தரி, முருங்கை போன்றவைகளை பொரியல் அல்லது சூப் செய்து சாப்பிடுவது நல்ல பலன் அளிக்கும்.

மூட்டுக்களை பாதுகாக்கும் முறைகள் : எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் மூட்டுக்களில் எண்ணெய் சென்று நன்றாக செயல்படவும், மிருது படவும் செய்கின்றது.

சத்தான உணவுகள் உண்பது : மூட்டுக்களை பாதுகாக்கின்றது. மூட்டுக்களில் வீக்கம் ஏற்பட்டால் மூட்டுக்களில் விளக்கெண்ணெய் சிறிது தடவி ஐந்து நிமிடம் கழித்து உப்பை அல்லது அரிசி தவிடு அல்லது கோதுமை தவிட்டை சூடு செய்து, பின் இதனை துணியில் முடிந்து ஒற்றடம் கொடுக்கலாம். பின்னர் சுக்கை தூள் செய்து வெந்நீரில் கரைத்து பற்று போட வீக்கம், வலி, குறையும். தினமும் காலை எழுந்தவுடன் இயன்ற அளவு தண்ணீர் குடிக்கவும். வாரம் ஒரு நாள் பகல் ஒரு வேளை உணவை தவிர்த்தல் வேண்டும். ஒவ்வொரு வேளையும் முக்கால் வயிறு ஆகாரமாக உட்கொள்ள வேண்டும். புகைத்தல், மதுவகைகள், குளிர்பானங்கள், காரமான உணவு, டீ, காபி போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

உடற்பயிற்சி : நடத்தல், உட்கார்ந்து எழுதல், குனிந்து நிமிர்தல், கை, கால் விரல்களை, நீட்டி மடக்குதல், நின்ற இடத்தில் குதித்தல், ஓடுதல், நீந்துதல், மூச்சுப் பயிற்சி போன்றவைகள் சைக்கிள் ஓட்டுதல் முதலியன மூட்டுக்களை பலம் பெற செய்கின்றன. ஆகவே இதனை தினம் காலை, மாலை, சுமார் 20 நிமிடம் மெதுவாக செய்தல் நல்லது. சூரிய ஒளி தினமும் உடலில் படும்படி 10 நிமிடம் நிற்கவும். மேற்கூறிய முறைகளை பின்பற்றினால் எல்லாரக மூட்டு வலிகளில் இருந்தும் குணம் பெறலாம்.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) - 635 601 ✆ 04179-20469, 22769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 6 to 8 ✆ 6424285, 6427638

குறிப்பு : சென்னை, வேலூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர், ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 28 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.70/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011599

18 & 19ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, : 5717126, 5723651

9ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை, ஹோட்டல் பிரடேவ், செப்பேகுடா ரோடு. : ✆ 080-2256374, 2873013

எஸ்.மாலதி

சேமிப்பு!

மாதக் கடைசி. பணமில்லாமல் குடும்பம் வாடி வதங்கியிருந்தது. கியாஸுக்கு வைத்திருந்த பணத்தைக் கூட செலவழித்தாயிற்று. பீரோ துணியடி, உண்டியல் துழாவியும் எதுவும் தட்டுப்படுவதாயில்லை.

''பேங்க்ல எனக்கு ஒரு அக்கவுண்ட் ஓபன் பண்ணினோமே. அதுலே எவ்வளவு இருக்கு?'' - ரகுவிடம் கேட்டேன்.

பாஸ் புக் பார்த்துச் சொன்னார்.

"321 ரூபாய்!"

வங்கியில் பணம் தர மறுத்தார்கள்.

"ஏங்க, மினிமம் ஐந்நூறு ரூபாயாச்சும் பேலன்ஸ் இருக்கணுமாம். பேங்கல சொல்லிட்டாங்க. அதனாலே எடுக்க முடியாது. என்ன பண்றது?'' நான் கவலையுடன் சொன்னதும் ரகு சோர்ந்து போனார்.

பணம் அவரது அம்மாவின் மருத்துவ செலவுக்கு உடனடி தேவையாயிற்றே!

"வேணும்னா என் வளையலை அடகு வைச்சு..."

நான் முடிக்கும் முன்பே தடுத்தார். "வேணாம். நீ ஒண்ணு செய். பேங்குக்குப் போய் உன் அக்கவுண்டை குளோஸ் பண்ணி, பணத்தை வாங்கிட்டு வந்துடு..."

எளிதாகச் சொல்லிவிட்டு நகர 'மளுக்' கென்று என்னுள் ஏதோ உடைவதுபோல உணர்ந்தேன். மணமானதிலிருந்து அமுத சுரபியாயிருந்து வரும் விஷயம். வெட்டிக் கொண்டு வா என்று சுலபமாய்ச் சொல்லி விட்டாரே!

உறவு மாதிரி தொட்டுத் தொடர்ந்த உதவிக்கரம் இப்போதும் செத்தும் கொடுத்த சீதக்காதி மாதிரி உதவப் போகிறது. பாஸ்புக்குடன் புறப்பட்டபோது நன்றியுணர்ச்சி மேலிட்டது.

வங்கி வாசல். உள்ளே நுழைந்தபோது எதிர்ப்பட்டார் சிவராமன். அவரது கைப் பிடியில் மூன்று வயசுப் பேரன். முன்பு இருந்த வாடகை வீட்டு ஓனர். "பணம் எடுக்க வந்தியாம்மா?" என்றார் ஸ்நேகமாய்.

வலிய தலையாட்டி, புன்னகைப் பொய் ஒன்றை உதிர்த்துவிட்டு நில்லாமல் நடந்தேன்.

கணக்கு துவக்கத்தான் அறிமுகம், அத்தாட்சி போன்றவை. இதற்கு ஒரு வெள்ளைத்தாளே எதேஷ்டம். வெளியூருக்குப் புலம் பெயர்வதாகப் பொய்க் காரணம் குறிப்பிட்டபோது கை கூசியது.

இயந்திரத்தனம் மீறி "ஏன் நீங்க போகப் போற ஊர் பிராஞ்ச்சுக்குக் கணக்கை டிரான்ஸ்பர் பண்ணி..." நான் சுவாரஸ்ய மற்றிருப்பதை என் முகம் காட்டிக் கொடுத்திருக்க வேண்டும். வங்கி ஊழியர் "ஓகே" என்றுவிட்டு ஆக வேண்டிய வேலைகளைக் கவனிக்கலானார்.



கதையை விமர்சிக்கிறார்
பார்வதி ரவி கண்டசாலா

ஜீவிதம் தற்காலிகமாக வறண்டு போனாலும் வசந்தகாலமும் வரும் என்ற நம்பிக்கையில் மெல்லிய ஜரிகைக் கோடாய் ஒளிர்வதுதானே வாழ்க்கை. வலியை மறைக்கும் புன்னகை மத்திய வர்க்கத்துக்கே உரியது. சின்ன கதை ஆனாலும் சிறப்பு!



"பொங்கலுக்குச் சீர் பணம் அனுப்பணும். இங்கே உனக்கு எந்த பேங்க அக்கவுண்ட் இருக்கும்மா?" என்று அப்பா கேட்டபோது நெஞ்சு நிமிர்த்தி பதில் சொன்ன இறுமாப்பு இன்னும் சற்று நேரத்தில் கரையப் போகிறது.

டோக்கன் பணமாக மாறியபோது பெற்றுக் கொண்ட பாஸ்புக்கில் விழுந்த சிவப்பு மை குறுக்குக் கோடுகள் என் நெஞ்சைக் கிறின.

வீடு திரும்பியபோது மகள் கவி, மதியச் சாப்பாட்டுக்குப் பள்ளியிலிருந்து வந்திருந்தாள்.

"அம்மா... இன்னிக்கு நீங்க எனக்கு ஒண்ணு எழுதித்தரணும்" கோரிக்கை வைத்தாள்.

"என்னம்மா?"

'வங்கி சேமிப்பும் அதன் பயன்களும்' என்ற தலைப்பை அறிவிப்பு போலச் சொன்னாள்.

முதலில் 'நறுக்' என்று நெஞ்சில் தைத்தது போல் வலித்தது. வலியை ஒதுக்கிவிட்டுச் சொன்னேன்.

"சூப்பரா எழுதித் தரேன் செல்லம். நான் ரெடி..."

அந்தச் சேமிப்புப் பழக்கம்தானே இன்றைக்குக் கை கொடுத்து உதவியிருக்கிறது.

ரிமோட்

விஜோக்

அந்த மேஜிக் தேதியன்று...

மேஜிக் தேதியான 20-2-2002 அன்று சில இரட்டையர்களை அழைத்து வந்து பேட்டி கண்டார்கள், சென்னை டைம்ஸில். (ஸன்). இரண்டு பேரும் ஆணாகவோ இரண்டு பேரும் பெண்ணாகவோ இருந்தால் Homozygous twin என்கிறார்கள்.

முதலில் இரண்டு நடுத்தர வயது சகோதரிகள் பேசினார்கள். இருவரும் டாக்டர்கள். ஒருவர் பீடியாட்ரிஷியன். மற்றவர் கைனகாலஜிஸ்ட். மருத்துவமனையில் இவரை அவரென்றும் அவரை இவரென்றும் நினைத்துப் பலர் பேசுகிறார்களாம். சந்தோஷமான தமாஷ் என்றார்கள்.

ஆண்களில் ஒரு இரட்டையர் ஜோடி, தனக்குத் தரப்பட வேண்டிய சம்பளத்தைத் தன் சகோதரர் வாங்கிப் போய் விட்டதையும், இன்னொரு ஜோடி, தான் நினைப்பதையே மற்றவரும் நினைப்பதால் இருவருக்கும் ஒரே சமயத்தில் போட்டிகள் ஏற்படுவதையும், மற்றொரு ஜோடி, பாஸ்போர்ட்டில் உண்டான குழப்பத்தையும்.

வேடிக்கையான அனுபவங்கள் மட்டுமல்ல, They make you wonder about life and its strange processes. அதிர்ஷ்டவசமாக வழக்கறிஞர்களாக எந்த இரட்டையரையும் காணோம். அப்படி இருவர் இருந்திருந்து, நீதிமன்றத்தில் இருவரும் எதிரெதிர்த் தரப்பில் ஆஜராகி வாதாடினால், ஜட்ஜ் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓட்டம் பிடித்திருப்பார்.

Lower your voice and strengthen your argument என்பதில் நம்பிக்கை இல்லாதவர் அதிமுக எம்.பியான மலைச்சாமி. உணர்ச்சி வசப்படும்போது குரல் ரொம்பவே உயரும்.

ஆண்டிபட்டி இடைத்தேர்தல் நடந்து முடிந்த மாலை, ஒரு பக்கம் சுதாங்கனும் மறுபக்கம் ரபிபெர்னாடும் இருக்க, அம்மா புகழ் பாடினார் மலைச்சாமி. (மூன்று பேருமே ஸேம் லைவ் கோல்தான்.) அப்போது அதிர்ச்சியூட்டும் சவாலொன்றை உச்சக் குரலில் விட்டார் எம்.பி. "பதினோயிரம் கள்ள வோட்டுப் போடப் பட்டிருப்பதாகத் திமுக சொல்கிறது. சரி, ஒரு வாதத்துக்காக அதை ஒப்புக் கொள்வோம். தேர்தல் முடிவு வரட்டும். அம்மாவுக்குக் கிடைக்கிற வாக்குகளில் பதினோயிரத்தைக் கழித்துக் கொள்வோம். அப்புறம் என்ன சொல்வார்கள்?" என்றார்.

24'ம் தேதி முடிவு வெளியாக வெளியாக, திக்திக் என்றே இருந்தது. கழித்துக் கொள்ளும் அளவுக்கு புரட்சித் தலைவி வாக்கு பெற வேண்டுமே என்று. அப்பாடா! ஜெ அதையும் தாண்டி, அதற்கு மேலும் இருபத்து நாலாயிரம் பெற்றார்.

இப்படியொரு ஸஸ்பென்ஸ் ஏற்படுத்த அறிந்துள்ள மலைச்சாமி, ஓய்வு நேரத்தில் மர்ம நாவல்கள் எழுதினால் என்ன? 'மலைக்க வைக்கும் சாமி' என்று புனைபெயரும் வைத்துக் கொள்ளலாம்.

ஊஞ்சலாடும் உத்தரப் பிரதேச முதலமைச்சர் பதவி ஒரு நிலைக்கு வந்திருக்கக்கூடும் இந்நேரம். நிலையிலேயே நிற்குமா என்பது வேறு விஷயம். ஏனெனில், you cannot adopt politics as a profession and remain honest என்பது எல்லோருக்கும் தெரிந்த சங்கதி.

முன்னாள் முதன்மந்திரிகள் பல பேர் லக்னோ நகரத்தின் கேந்திரமான பகுதியில், ஒரு கிலோமீட்டர் வட்டத்துக்குள் பங்களாக்களில் வசிப்பதை ஸ்டார் நியூஸ் காட்டியது. சிலர் பதவி போன பின்னரும் இடத்தைக் காலி செய்யாதிருக்கும் நேர்மையாளர்கள். முலாயம்சிங், ராஜ்நாத் சிங், மாயாவதி, வி.பி. சிங் முதலிய பலர் வசதியாக வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தப் பங்களாக்கள் அனைத்துக்கும் பொதுவான அம்சம்: கூரிய முனைகள்



- முலாயம்சிங் யாதவ்



- சுதாங்கன்



- மலைச்சாமி

கொண்ட உயரமான கேட். வாசலில் துப்பாக்கியுடன் கூர்க்கா. உள்ளே என்னென்ன நாடகங்கள் இதற்கு முன் அரங்கேறியதோ, இனிமேல் அரங்கேறப் போகிறதோ! There is something new everyday.

'என் அப்பா, ஒரு மனைவி இருக்கும்போதே இன்னொருத்தி, இன்னொருத்தி என்று மொத்தம் நாலு கல்யாணம் பண்ணிக் கொண்டு குடும்பத்தை நாசம் செய்தார்' என்று ஆக்ரோஷமும் ஆவேசமுமாகப் பேசினார் பதினாறு வயதுப் பெண் ஒருவர், அரட்டை அரங்கத்தில்.

முழுவதும் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட விசு, அந்தப் பெண்ணிடம், 'உன்னுடைய எதிர்காலம் பாதிக்கப் படாது என்று நீ நம்பினால், விவரங்களைச் சொல்லு' என்றார்.

அந்தப் பெண் அயரவில்லை. பாங்க் அதிகாரியாகப் பணியாற்றும் தன் தந்தை எங்கெங்கே யார் யாரை மணந்துகொண்டார் என்ற தகவல்களைத் தந்து, 'நான் படித்துப் பட்டம் பெற்று ஐ.பி.எஸ் அதிகாரியாக வந்து இவரைப் போன்ற ஆட்களை அடித்து உள்ளே தள்ளுவேன். எம்.எல்.ஏ, மந்திரி யார் குறுக்கிட்டாலும் விட மாட்டேன்' என்றார்.

'நீ ஐ.பி.எஸ் அதிகாரியாக வருவதற்கு நானும் இந்த அரங்கத்தில் உள்ள அத்தனை பேரும் வாழ்த்துகிறோம். நீ பழி உணர்ச்சி இல்லாமல் பணி புரிய வேண்டும்' என்று விசு அன்புடன் அறிவுரை கூறினார்.

அரட்டை அரங்கத்தில் பெரும்பாலும் சிரிப்பு கை தட்டலும் ஆரவாரமும் தான் இருக்கும். ஆனால் இந்தப் பெண் பேசியபோது பல கன்னங்களில் கண்ணீர் வழிவதைக் காண முடிந்தது. கவிஞர் தாமஸ் ஹூம் சொன்னது போல the world! It is a wilderness, where tears are hung on every tree.

அகரப் பாய்ச்சலில் கணினி உலகம் முன்னேறி வருவதை டி.வி சேனல்களில் அறிய முடிகிறது. புரிந்து கொள்ள முடியாத விஞ்ஞானத் துறை என்பது மாறி, a roller - coaster ride on fun என்று கூட ஆகிவிட்டது. ஆகையால், ஸ்டார் நியூஸைப் பின்பற்றி, ஸன்னும் தன் செய்திகளைச் சொல்லும்போது, திரையின் அடிப் புறத்தில் சில தகவல்களை இரண்டு மூன்று வாக்கியங்களில் எழுத்தாகவும் காட்டுவதில் ஆச்சரியமில்லை.

இருந்தாலும்கூட, எங்கேயோ ஒரு சிக்கல். எழுத்துக்களில் 'ஷ' கிடையாது. சர்வம் 'ஸ' தான். காஷ்மீர், காஸ்மீர் ஆகிறது. கிருஷ்ணசாமி, கிருஸ்ணசாமி ஆகிறார். ஷேக் உமர், ஸேக் உமர் ஆகிறார். முஷாரப் முஸாரப்; டாக்டர் பிரகாஷ், டாக்டர் பிரகாஸ், கிருஷ்ணா நதி, கிருஸ்ணா நதி; கோஷம் கோஸம்.

இந்தச் சின்ன விஷயத்தைச் சரி செய்வதில் என்ன கஸ்டம்?

புள்ளூர் குருபரன்!

வைதீஸ்வரன் கோயில் என்று சொன்ன மாத்திரத்தில் அங்கே உறைகின்ற வைத்தியநாதசுவாமியும் அவனது தேவியான தையல்நாயகியும்தான் ஞாபகம் வருவார்கள். இந்த 'வைத்யபதி'யும் அவனது 'ஹ்ருதய விஹாரிணி'யான பாலாம்பிகையும், ஏராளமான தமிழர்களின் குலதெய்வம். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்று திருமூலர் திருமந்திரத்தில் சொன்னதை மறந்து நாம் இரண்டையுமே போட்டு படாத பாடு படுத்திக் கொள்ளும் நேரத்தில், உடல் ரோகத்தையும் பவரோகத்தையும் (வினைப் பயன்) நீக்கி ஆட்கொள்வோர் இந்த தெய்வ தம்பதி!

அதனால்தான் அப்பர் சுவாமிகள்,

மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னை... என்று வைதீஸ்வரனைப் பாடுகிறார்.

உண்மையில் சிவனும் உமையும் இத்திருத்தலத்தில் வைத்தியர்களாக அமர்வதற்குக் காரணமாயிருந்தவன் அவர்களுடைய செல்லப் பிள்ளையான பால முத்துக்குமாரன்தான்!

தாரகாசுரனோடு போர் புரிந்த நேரத்தில் முருகனுடைய பூதப்படை வீரர்கள் பலர் காயமுற்றுச் செயலிழந்தனர். அவர்களைக் குணப்படுத்திக் காப்பாற்றியாகவேண்டும். அந்த ஆற்றல் முருகனுக்கே இருந்தபோதிலும் அதனை அம்மையப்பர்களின் பொறுப்பாக்கி, அவர்களே உலகம் உய்யச் செய்பவர்கள் என்று உணர்த்த விரும்பினான் முருகன். இருவரையும் வேண்டி அழைக்க, அவர்கள் வைத்தியநாதராகவும் தையல்நாயகியாகவும் வந்தமர்ந்த இடம்தான் வைதீஸ்வரன் கோயில்.

ஜடாயு என்கிற புள், ரிக் வேதம், முருகப் பெருமான் (வேள்), சூரியன் (ஊர்) ஆகிய நால்வரும் வழிபட்ட ஸ்தலம் என்பதால் இதற்குப் புள்ளிருக்குவேளூர் என்று பெயர். 'வைதீஸ்வரன் கோயில்' என்று ஆலயத்தின் பெயரால் ஊர் அழைக்கப்படுகிற தனிச் சிறப்பும் இந்த தலத்துக்கு உண்டு.


மிகப்பெரிய கோயில். தருமை ஆதினத்தின் மேற்பார்வையில் நாளொரு விழாவும் பொழுதொரு சிறப்பும் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ராஜகோபுரங்களைத் தரிசித்து, உயர்ந்த மதில்சுவர்களைத் தாண்டி உள்ளே போனால், சிறிய கோபுரங்களுடன் உள் பிராகாரங்கள்.

ஸ்தல விருக்ஷமாக வேம்பு நிற்கிறது. வேம்படிமால் என்றழைக்கப்படுகிறது. ஆதிவைத்யநாத ஸ்வாமி இதனடியில் ஒரு மிகச் சிறு ஆலயத்தில் எழுந்தருளியிருக்கிறார். சுற்றிலும் ஆதிபுராணேஸ்வரர், வீரபத்ரர், அன்னபூரணி தேவி சந்நிதிகள். தெற்குப் பாகத்தில் தையல்நாயகி சன்னிதி எதிரில் சித்தாமிர்த தீர்த்தம் இருக்கிறது. கிருதயுகத்தில் காமதேனு வைத்தியநாத பெருமானுக்குப் பால் சொரிந்து அபிஷேகம் செய்ய, பெருகியோடிய அந்தப் பாலே தீர்த்தமாயிற்று என்பது புராணம். கலியுகத்து சித்தர்கள் தேவாமிர்தத்தால் செய்த அபிஷேகம் இங்கு கலந்ததாகவும் நம்பிக்கை. சித்தாமிர்த தீர்த்தம் என்ற பெயர் அதனால்தான் ஏற்பட்டது!

ஈசன் முதல் பிராகாரத்தில் மேற்கு நோக்கி இருக்க, அவனை இத்தலத்துக்கு வருவித்த முருகன், 'குமர குருபரன்' என்ற

குருஜி ஏ.எஸ். ராகவன்



• முத்துக்குமார சுவாமி

மிக அழகான திருப்பெயருடன் இரண்டாம் பிராகாரத்தில் காட்சி தருகிறான். வள்ளி - தெய்வானை சமேதனாக ஆறுமுகங்களிலும் அழகு துலங்க, பன்னிரு விழிகளிலும் கருணை பெருக காட்சி தருகிறான். இந்த ஆறுமுகப் பெருமானின் உத்ஸவ மூர்த்திக்குத்தான் செல்வ முத்துக்குமாரசாமி என்று பெயர்!

பூமி மெச்சிடும் பெற்றோரின் செல்வத் திருக்குமரன் என்பதால் மட்டுமா அப் பெயர்? உடலாரோக்கியமாகிற செல்வத்தை யும் மன ஆரோக்கியமாகிற செல்வத்தையும் அருளவல்ல தெய்வ தம்பதியை வந்தமரச் செய்த செல்வன்.

தமிழால் அவனைத் துதித்து இந்நாட்டின் இலக்கிய ஆன்மிகச் செல்வத்தைப் பெருக்கிய அருணகிரிநாதரையும் குமர குருபரரையும் ஆட்கொண்ட அருட்செல் வன்.


இசையுலகுக்கு, இணையற்ற மாணிக்க மாக ஒரு வாக்கேயக்காரரை வழங்கி ஞானக் கடவுளாக அவர் நெஞ்சில் நீங்கா இடம் பெற்ற செல்வன். அவன் பெயரையே தாங்கிய அந்த வாக்கேயக்காரர், முத்து ஸ்வாமி தீக்ஷிதர். வடமொழி கீர்த்தனைகளில் திருத்தலச் சிறப்புகளையும் மூர்த்தி சிறப் பையும் தெய்வீக ஆற்றலுடன் பதிவு செய்து, 'குருகுஹ' என்று தமது இஷ்டதெய்வத்தின் நாமத்தையே முத்திரையாக்கிய பக்தர்.

முத்துஸ்வாமி தீக்ஷிதரின் பெற்றோரான ராமஸ்வாமி தீக்ஷிதர் - சுப்புலட்சுமி அம்மாள் தம்பதி, நீண்ட காலம் குழந்தைப்பேறு இல்லாதிருந்தனர். வைதீஸ்வரன்கோயில் பாலமுத்துக்குமார ஸ்வாமி சன்னதியில் மனமுருக வேண்டி, விரதமிருந்து புத்ர பாக்கி யம் அடைந்தனர். அந்த முருகன் நினை வாகவே மூத்த மகனுக்கு முத்துஸ்வாமி என்று பெயரும் வைத்தனர். பிற்காலத்தில் இந்த முத்துஸ்வாமி திருத்தணி முருகன் அருளால் கீர்த்தனைகள் இயற்ற ஆரம்பித்து, முருகனை மட்டுமின்றி அனைத்து தெய் வங்களையும் பாடினார். இதே வைதீஸ்வரன் கோயில் ஈசுவரனான வைத்தியநாதன் பெயரிலும் பாலாம்பிகையின் பெயரிலும் கிருதிகள் அமைத்துள்ளார். அவற்றில் முத்துக்குமாரனையும் மறவாமல் குறிப்பிட்டி ருக்கிறார். 'ரூப முத்துக்குமார ஜனனி' என்று 'பஜரே ரேர்சித பாலாம்பிகா..' கீர்த்தனையில் அந்த முருகனின் ரூப லாவண்யத்தை அழகாக ஞாபகப்படுத்துகிறார்.

குமரகுருபரனும் சரி, முத்துக்குமார சாமியும் சரி, சொல்லொணா அழகுடன் பொலிகிறார்கள்!

குமரகுருபர ஸ்வாமிகள் இந்த பால முத்துக்குமாரனுக்குப் பிள்ளைத்தமிழ் இயற்றி, கொண்டாடியிருக்கிறார். தருமை ஆதீன குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் இயற்றிய ஸ்ரீ முத்துக்குமாரசாமி திருவருட்பாகூட பிள் ளைத் தமிழைப் போலத்தான் அவனைக் கொண்டாடி அழைக்கிறது:

மதிவதன மாடவிரு காதில்நவ
ரத்னமணி
மகரகுண் டலமாடநான்
மலர்ப்புண்ட ரீகவிழி யாட அருளாட
மனமகிழ்மந்த காசமாடக்
கதிருதயம் ஆயிரம் கோடியென
வேயிலகு
காருண்ய மேனியாடக்
கனவஜ்ர புயவலயம் ஆடவண் டாடக்
கடப்பமலர் மாலையாட



விதமணி இழைத்தபரி புரமாட
சரணார
விந்தங்க ளாட நீள்கை
வெற்றிவே லாடமயி லாடவென்
கண்முன்நீ
விளையாட ஓடிவருவாய்
முதுமறைக ளாகம முழங்கு புள்ளூரனே
முக்கட் குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு
வேபால
முத்துக் குமாரகுருவே

என்று குழந்தை முருகனை விளையாட அழைக்கும் ஆடல் பருவச் செய்யுள் போலவே அமைந்திருக்கிறது.

கதிருதயமாயிரம் கோடி ஒத்த அவன் அழகு எங்கிருந்து வருகிறது என்று பார்த்தால், அவன் உள்ளத்தின் காருண்யத்திலிருந்து அல்லவா அது பெருகுகிறது! அதனால்தான் அவன் மேனியையே 'காருண்ய மேனி' என்று வர்ணித்துப் பாடுகிறார் சுவாமிகள்.

கிருத்திகை, சஷ்டி தினங்கள் செல்வ முத்துக்குமார சுவாமிக்கு அபிஷேக நாட்கள். அர்த்தஜாம வழிபாடு முதலில் இந்த முருகனுக்குத்தான். அதன் பிறகுதான் வைத்தியநாதருக்கு வழிபாடு நடைபெறுகிறது! பங்குனி மாத உத்ஸவத்தின் போது ஐந்தாம் நாள், செல்வ முத்துக்குமாரர் அம்மாவையும் அப்பாவையும் சென்று வழிபட்டு, 'செண்டு' பெறும் காட்சி மிக அழகான வைபவம்.

'திருச்சாந்துருண்டை' என்று இத்தலத்தில் வழங்கப்படும் பிரசாதம் 4448 வித நோய்களைக் குணப்படுத்த வல்லது என்பர். இந்தப் பிரசாதம் தயாரிக்கும் பக்குவமே விசேஷமானது. சுக்ல பக்ஷத்தில், நல்ல நாழிகை பார்த்து அங்கசந்தான தீர்த்தம் என்ற இத்தல தீர்த்தத்தில் நீராட வேண்டும். அதிலுள்ள மண்ணை எடுத்து, புதுப் பாத்திரத்தில் வைத்து, இங்கே உள்ள ஜடாயு குண்டத்திலிருந்து விபூதியையும் சித்தாமிர்த தீர்த்தத்திலிருந்து நீரையும் கலந்து பஞ்சாக்ஷர தியானம் செய்து கொண்டே பிசைய வேண்டும். அதை முத்துக்குமாரசுவாமி சந்நிதியிலுள்ள குழியம்மியிலிட்டு அரைத்து, சிறு கடுகளவு உருண்டைகளாக்கி தையல் நாயகி அம்மன் திருவடியில் வைத்து அர்ச்சனை செய்து, பின்னர் இம்மருந்தை சித்தாமிர்த தீர்த்தத்துடன் உண்ண வேண்டும். ஈசனும் அம்மையும் இங்கே மருத்துவர்கள் எனில், மருந்தாளர் முத்துக்குமார சுவாமிதான்! அதனால்தான் அருணகிரிநாதர் அவரை வைத்திய நாதப் பெருமானே! என்றே பாடுகிறார்:

உரத்துறை போதத் தனியான
உனைச் சிறிதோதத் தெரியாது
மரத்துறை போலுற் றடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ
பரத்துறை சீலர் தவர்வாழ்வே
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே
வரத்துறை நீதர்க் கொருசேயே
வயித்திய நாதப் பெருமானே.

(அடுத்த வாரம் : கந்தன்குடி முருகன்)

அருள்வாக்கு

பகவானிடம் புதிதாக ஒன்றும் நாம் கேட்டுப் பெற வேண்டியதில்லை. நம்மிடம் இல்லாமல் அவனிடம் உள்ள ஏதோ ஒன்றைக் கேட்கவேண்டியதில்லை. நம்மிடமே இருக்கும்படியான நம் உண்மை ஸ்வரூபத்தை நாம் அறியவில்லை. நம்முடைய உண்மை ஸ்வரூபம் ஆனந்தமயமானது. பகவானேதான் அது. பரமாத்மாவேதான் அது. அப்படிப்பட்ட நம் நிஜ ஸ்வரூபத்தை மனத்தால் மறைத்துக் கொண்டு ஓயாமல் துக்கப்படுகிறோம். "என் உண்மை நிலையை உணர அருள்வாயாக. என்னை நான் அறிய முடியாதபடி, இந்த மனசு ஆட்டிப் படைக்கிறது. இதை அன்பினாலே கட்டி, கட்டுப்படுத்தி என்னிடம் கொடுத்தால் போதும். என் ஸ்வரூபத்தையே நான் காண முடியாமல் கெடுக்கும் இந்தக் கெட்ட மனப்போக்கை நீ எடுத்துப் போ. என் ஸ்வரூபத்தையே எனக்களித்து அதைக் காக்க வேண்டிய காவலன் நீ" என்று பிரார்த்திப்போம்.




– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

புக் பேங்க்









விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச்சிறுகதைகள் – மா. இராமலிங்கம். (எழில்முதல்வன்)

தமிழ்ச்சிறுகதை இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றிய ஆசிரியரின் முனைவர் பட்ட ஆய்வேடு இப்புத்தகம்.

வீரமாமுனிவரில் ஆரம்பித்து, புதுமைபித்தன் வரை பேசுகிறது.

முத்தமிழ்ப் பாசறை, 3, விவேகானந்தர் நகர், உறையூர், திருச்சி -3, விலை ரூ. 100.

ஜீவாவும் சமதர்மமும் - கழஞ்சூர் செல்வராஜ்

ப. ஜீவானந்தத்தின் சொற்பொழிவுகளும் சுயமரியாதை சமதர்ம இலக்கியக் குறிப்புகளும் கொண்ட முப்பது கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்.

என்சிபிஹெச், 41-பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 98. விலை ரூ. 40/-

உயிர்ப்புகள் – ஆனந்தசிவா.

பதினாறு சிறுகதைகளடங்கிய தொகுப்பு.

தார்மிகக் கோபத்தோடும், ஆவேசத்தோடும் கிராமிய மணத்தோடும் சொல்லப்பட்ட கதைகள்.

பாரதி பதிப்பகம். 126/108, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை - 17. விலை ரூ. 36/-

பெண்ணிய நோக்கில் பாரதி - பேரா. சி.என். குமாரசாமி.

பாரதியின் படைப்புகள் புதையல் மாதிரி. தோண்டத் தோண்ட ஏராளமான விஷயங்களும், ஆய்வுகளும் வந்து கொண்டேதான் இருக்கின்றன. பேராசிரியரின் இந்நூல் பெண்ணிய சிந்தனை வளர்ச்சியிலும், பணிகளிலும் பாரதியின் பங்கை மதிப்பீடு செய்கிறது.

தமிழ்ப் புத்தகாலயம், ஜி.3/8 மாசிலாமணி தெரு. பாண்டி பஜார், சென்னை - 17. விலை ரூ. 13.5.

'இல்லற ஜோதி' - கவிஞர் கண்ணதாசன்

கவிஞர் கண்ணதாசன் முதன்முதலாகக் கதை, வசனம் எழுதி, மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த படம் இல்லற ஜோதி. இந்தப் படத்தில் இடம் பெற்றிருக்கும் 'அனார்கலி' நாடகத்தினால் கவிஞருக்கும் கலைஞருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டதாக முன்னுரையில் இராம. கண்ணப்பன் குறிப்பிட்டிருக்கிறார்.

கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, சென்னை - 17. விலை ரூ. 25/-

தொகுப்பு: ஏக்ஜி



"பொதுவா மியூசியம்னா அது மனிதனோட சாதனைகளைக் கொண்டாடறதா இருக்கும். ஆனா அமெரிக்காவில் உள்ள ஹாலோகாஸ்ட் மெமோரியல் மியூசியம் மனிதனின் இருண்ட பக்கத்தை மட்டுமே காட்டுகிறது!" என்கிறார் விஜயலட்சுமி கணபதி. சமீபத்தில் அங்கு சென்று திரும்பிய அவர் சொல்கிறார்.

"நமது ஜீவனுக்கும், மனித சரித்திரத்தின் இருண்ட அத்தியாயத்துக்கும் தொடர்பு ஏற்படும் வகையில் இந்த ஹாலோகாஸ்ட் மெமோரியல் மியூசியம் விளங்கும்!" 1993ல் மியூசியத்தைத் திறந்து வைத்த, அப்போதைய ஜனாதிபதி பில் கிளிண்டன் சொன்னது இது!



ஆவிகள் அலறும் அருங்காட்சியகம்!

ஹிட்லரின் 12 வருட இனவெறி ஆட்சியில் நடந்த கொடுமைகளை இந்த மியூசியம் உலகுக்குத் தெரிவிக்கிறது.

நுணுக்கமான வளைவுகள், அந்தக் காலத்துக்குரிய கதவுகள், கண்ணாடிக் கூரை, அதைச் சுற்றி இரும்பு வளையங்கள், மேலே செல்லச் செல்ல குறுகிக் கொண்டே போகும் மாடிப் படிகள் என்று கட்டட அமைப்பே அமானுஷ்யமாய் பிரமிக்க வைக்கின்றது.

படியேறிச் சென்றால், ஹிட்லர் ஆட்சியின் கொடூரங்களைத் தெரிந்து கொள்ளலாம். காட்சிகளைப் பார்க்கும்போது 'இப்படியும் நடந்திருக்குமா' என்று ஓலமிட வைக்கிறது.

ஹிட்லர் ஆட்சியின் கொடுமைகள் பெரிய பெரிய புகைப்படங்களாக நம்மைப் பயமுறுத்துகின்றன. புகைப்படங்களைத் தொடர்ந்து பெரிய திரையில் ஒளிப் படங்களாகவும் அநேக சம்பவங்கள் மனத்தை உருக்குகின்றன.

ஓர் இடத்தில் அறையின் இரண்டு பக்கங்களிலும் கொட்டிக் கிடக்கும் பழைய



• விஜயலட்சுமி • கணபதி



''மூலிகை மருத்துவர்கிட்ட ஏன்டா வேலைக்குச் சேர்ந்தோம்ன்னு இருக்கு''

''ஏண்டா?''


''கசக்கிப் பிழியறார்''

- சச்சின் சக்திவேல், மயிலாடுதுறை

''அந்தக் கட்சிக்கும் இந்தக் கட்சிக்கும் போய்க்கிட்டும் வந்துக்கிட்டும் இருந்த உங்களுக்கு ஏதோ பரிசு கிடைக்கப் போகுதுன்னு சொன்னீங்களே..?''

''போக்குவரத்துத் துறை அமைச்சரா ஆக்கிறதா தலைவர் சொல்லியிருக்கார்!''

- சீர்காழி வி. ரேவதி



காலணிகள் - இது எதற்கு? என்று நாம் திகைக்க, விவரம் ஆடியோவில்... 'யூதர்களைப் பிடித்து அடைத்து வைத்து கார்பன் மானாக்ஸைடு, ஹைட்ரஜன் சையனைடு வாயுவைப் பரவவிட்டு, சுமார் முப்பது லட்சம் பேரை ஹிட்லரின் நாஜி படைகள் கொன்றது' என்று ஒலிக்கிறது.

நச்சுக்காற்றுக்குப் பலியாகும் முன்பாக கைதிகள் கழற்றிய காலணிகள்தான் அவை. இதில் சிறுவர்களின் காலணிகளும் உண்டு.

"நாங்கள் காலணிகள். கடைசி சாட்சியான காலணிகள். பாரிஸ், ஆம்ஸ்டர்டாம் நகர தாத்தாக்களின், அவர்களின் பேரக் குழந்தைகளின் காலணிகள் நாங்கள்!"

- இது காலணிகளைப் பற்றி மோசஸ் ஷுல்ட்சின் என்ற கவிஞர் எழுதிய வரிகள். இந்தக் கவிதை வரிகள் அந்த அறையின் வாசலில் தென்படுகின்றன.

அடுத்த அறையில் 24 அடி நீளம் 5 அடி உயரமுள்ள புகைப்படங்கள். அதில் விதவிதமான தலைமுடி! கைதிகள் அனைவரும் மொட்டையடிக்கப்பட்டபோது கிடைத்த தலைமுடிக் குவியல்களை, தலையணை அடைப்பதற்கும், விசைப்படகுகளுக்கு 'பம்ப்பர்' செய்யவும் பயன்படுத்தினார்களாம்.

இஸ்ரேல் நாட்டவரும், உலக அமைதிக்காக உழைத்து நோபல் பரிசு பெற்றவருமான ஈலை வீசல் என்பவர், நாஜி படைகளால் சிறை வைக்கப்பட்டு, பிறகு உயிர் தப்பியவர். அவரது அனுபவங்கள் திரையில்.

"இரவு நேரத்தில் அந்த முகாமில் ஏற்பட்ட அனுபவத்தை என்னால் மறக்கவே முடியாது. குழந்தைகளை ஓர் அறையில் அடைத்து, தீ வைத்து எரித்தார்கள். அங்கே உண்டான புகை, நான் பார்த்த அந்தக் குழந்தைகளின் பீதி நிறைந்த முகம், அலறல் இவற்றை என்னால் தாங்க முடியவில்லை" என்கிறார்.

இந்த மியூசியக் கட்டடம் கட்டடக்கலை நிபுணர் ஜேம்ஸ் இங்கோ ஃப்ரீட் என்பவரால் உருவாக்கப்பட்டது. இவர் நாஜி கொடுமையிலிருந்து தப்பியவர்களுள் ஒருவர்.

ஜிம்மி கார்ட்டரின் பதவிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு கிளின்டன் பதவிக் காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட, 2,65,000 அடி சதுர பரப்பளவில் உருவான இந்த மியூசியத்திற்கு ஆன செலவு 168 மில்லியன் டாலர் - அதாவது சுமார் 17 கோடி!

தற்போது பாதுகாப்பு கருதி மியூசியத்துக்குள் பார்வையாளர்களுக்கு அனுமதி அளிப்பதில் ஏக கெடுபிடி.

இந்த மியூசியம் பெருமைக்காக கட்டப்படவில்லை. மனிதனின் சின்னத்தனமும் கொடூரத்தன்மையும் எப்படிப்பட்ட கொலை வெறியாட்டத்தை அரங்கேற்றியது என்பதைக் காட்டவும், இனி இப்படியொரு மூர்க்கத்தனம், கூடவே கூடாது என்பதைப் போதிக்கவுமே கட்டப்பட்டது.

- மடிப்பாக்கம் வெங்கட்

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் P.R. ஜுவல்லரிக்கு வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
Old No. 102, New No. 138, USMAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.
PH : 434 4442 & 432 7764 - TUESDAY HOLIDAY
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)
PROPRIETOR : P. RAVINDHIRAN

ராசி		ராசிக்கல்
மேஷம், விருச்சிகம்	*	பவழம்
ரிஷபம், துலாம்	*	வைரம்
மிதுனம், கன்னி	*	மரகதபச்சை
கடகம்	*	முத்து
சிம்மம்	*	மாணிக்கம்
தனுசு, மீனம்	*	புஷ்பராகம்
மகரம், கும்பம்	*	நீலம்

திருஷ்டியைப் போக்கி, சகல செல்வங்களையும் தரும் அதிர்ஷ்ட விநாயகர் ரூ. 50/-க்குக் கிடைக்கும்.

நகைக் கடைக்கு நிறைய அனுபவம் தேவை. 1986ல் ஆரம்பிக்கப்பட்ட எங்கள் கடைக்கு நிறைய வாடிக்கையாளர் கள் உள்ளனர். 20 வருடங்களுக்கு மேலாக நகைக் கடைத் துறையில் அனுபவம் உள்ளதால் வாடிக்கையாளர்களுக்கு குறித்த நேரத்தில் சிறந்த முறையில் வைர நகைகள் தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், கவச வேலைகள், ராசிக்கல் மோதிரங்கள் குறைந்த விலையில் உத்திரவாதத்துடன் செய்து தருகிறோம்.

ராஜாக்கள் காலத்தில் இருந்தே வைரங்கள், வைடூரியங்கள், நவரத்தினங்கள் உபயோகத்தில் உள்ளன. தற்போது 7 வருடமாக அனைவரும் ராசிக் கற்களை விரும்பி வாங்குகிறார்கள். எந்த ஜோதிடராக இருந்தாலும் ஒருவருக்கு இராசிக்கல் தேர்ந்தெடுக்க அவரது ராசிப்படியும், நடப்பு திசைப்படியும், எண் படியும்தான் எழுதித் தருகிறார்கள். இதில் ராசிப்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. உதாரணமாக நாம் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்யும் பொழுதும், வீட்டில் நடைபெறும் திருமணம், பெயர் வைப்பது, பூஜைகள், ஹோமங்கள் அனைத்திற்குமே ஜென்ம நட்சத்திரம் ராசி சொல்லித்தான் அர்ச்சனை செய்கிறோம். அதனால் அதன்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. அனைவரும் நவரத்தின மோதிரம் அணியலாம். மிகவும் நல்லது. 9 கிரகங்கள் பலனைத் தரும். **5 CENT** வைரம் வைத்து 8 கிராம் தங்கத்தில் விலை 8,000/-

நவரத்தினங்கள் பயன்கள், விலை விபரங்கள்

1. சூரியன் - மாணிக்கம் **(RUBY)** அறிவு விருத்தியாகும். நல்ல உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும். தைரியத்தையும் துணிச்சலையும் தரும். செல்வம் தரும். சிம்மராசிக்காரர்கள், சூரியதசை நடப்பவர்கள் 1,10,19,28 தேதியில் பிறந்தவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. **20 CENT** கல் வைத்து வெள்ளியில் மோதிரம் விலை ரூ. 400/-

2. சந்திரன் _ முத்து **(PEARL)** ஞாபக சக்தி, செல்வம், வாக்கில் வலிமை, பலவித வசதிகள் ஏற்படும். கடக ராசிக்காரர்கள், சந்திர தசை நடப்பவர்கள் 2,11,20,29 தேதியில் பிறந்தவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. 2 CARAT முத்து வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூ. **400/-**

3. குரு _ புஷ்பராகம் **(PUSHPHARAGAM)** வசதி, சுபகாரியங்கள், நன்மதிப்பு செல்வம் ஆகியவை பெருகும். தனுசு ராசி, மீனராசிக்காரர்கள், குருதசை நடப்பவர்கள் 3,12,21,30 தேதியில் பிறந்தவர்கள் அணியலாம். வெள்ளை, மஞ்சள் ஆகிய கலர்களில் கிடைக்கும். தங்கத்திலும், வெள்ளியிலும் அணியலாம். வெள்ளியில் விலை ரூ. 400/-, 1000/-ம். தங்கத்தில் **1800/-** முதல் **5000/-**ம் வரை உடனடியாகக் கிடைக்கும்.

4. ராகு _ கோமேதகம் **(GOMEDAGAM)** தடைபடும் காரியங்கள் நிறைவேறும். ராகு தோசம் உள்ளவர்கள், ராகு தசை நடப்பவர்கள், **4,13,22,31** தேதியில் பிறந்தவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. **50 CENT** வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூ. **400/-**

5. புதன் _ மரகதபச்சை **(EMARALD)** கல்வி, செல்வம், ஞானம், ஆரோக்கியம், அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். மிதுன ராசி, கன்னி ராசிக்காரர்கள், புதன் தசை நடப்பவர்கள், 5,14,23 தேதியில் பிறந்தவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. **20 CENT** வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூ. **400/-**

6. சுக்கிரன் _ வைரம் **(DIAMOND)** புகழ், செல்வம் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். ரிஷபராசி, துலாம் ராசி, சுக்ரதசை நடப்பவர்கள், 6,15,24 தேதியில் பிறந்தவர்கள் அணியலாம். தங்கத்திலும் வெள்ளியிலும் அணியலாம். **5 CENT** வைரம் வைத்து 4 கிராம் தங்கத்தில் **4500/-** வெள்ளியில் **2250/-**

7. கேது _ வைடூரியம் **(CAT'S EYE)** வியாபாரம் பெருகும், நிறைய வருமானங்களைக் கொடுக்கும். கேது தோஷம் உள்ளவர்கள், கேது தசை நடப்பவர்கள், 7,16,25 தேதியில் பிறந்தவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. **20 CENT** வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூ. **400/-**

8. சனி _ நீலம் **(SAPPHIRE)** அறிவு, மன அமைதி, பெயர், புகழ், செல்வம் ஆகியவை தரும். மகர ராசி, கும்ப ராசிக்காரர்கள், சனி தசை நடப்பவர்கள் 8,17,26 தேதியில் பிறந்தவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. **20 CENT** வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூ. **400/-**

9. செவ்வாய் _ பவழம் **(CORAL)** மனதில் துணிவு, திருஷ்டியைப் போக்கும், செல்வம் மேலும் பல நன்மைகள் கூடும். மேஷராசி, விருச்சிக ராசி, செவ்வாய் தோஷம், செவ்வாய் தசை நடப்பவர்கள் 9,18,27 தேதியில் பிறந்தவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. **2 CARAT** பவழம் வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூ. **400/-**

அனைவரும் அணியக்கூடியது கார்னெட். வெள்ளி மோதிரம் விலை ரூ. **400/-**

இதை அணிவதால் படிப்பு, ஞாபகசக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம் செல்வ வளம் பெருகும். நம்பிக்கை, உழைப்பு, முயற்சி செய்தால் ராசிக்கல் மோதிரம் அணிந்து 100 சதவீத வெற்றிபெறலாம். எங்களிடம் ஜாதகம் கொண்டு வந்தால் என்ன கல் போட வேண்டும் எனச் சொல்கிறோம். கட்டணம் கிடையாது. ஜாதகம் இல்லாதவர்கள் பிறந்த தேதி, ஊர் கொண்டு வந்தால் ஜாதகம் கணித்து தருகிறோம். ரூ. 50/- பதிவுத் தபால் மூலம் ஜாதகம் பெற ரூ. 60/- அனுப்பவும். தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

ஒரு கடிதம் இன்னொரு கடிதம்

மைதிலி கிட்டத்தட்ட ஓட்டமாய் ஓடி, சாலையைக் கடந்து அலுவலகத்துக்குள் நுழைந்து, பாதி மூடிக் கொண்டிருந்த லிஃப்ட் கதவுகளுக்குள் மயிரிழையில் புகுந்து ஏழு என்ற பொத்தானை அமுக்கினாள். லிஃப்டுக்குள் வேறு யாரும் இல்லை. தரைத் தளத்திலிருந்து ஏழாம் மாடி வரை லிஃப்ட் பயணம் செய்யும்போது தனிமையில் அழுதாள். அலுவலக பாத்ரூம், எப்போதாவது லிஃப்டின் தனிமை இவற்றைத்தான் அழுவதற்கான களங்களாய் அவள் தேர்ந்தெடுத்திருந்தாள். மற்றபடி அழுவதற்கு அவளுக்குப் போதிய தனிமையும் நேரமும் கிடைக்காது. ஏழாம் மாடியில் வெளிப்பட்டபோது மொத்த அலுவலகமும் மும்முரமாய் உழைத்துக் கொண்டிருந்தது. இவளது மேலதிகாரி எனப்படும் ஆர்த்தி கன்னா இவளை வெட்டியது போல் பார்த்து, 'வழக்கம் போல் தாமதம்!' என்றாள். 'ஸாரி ஆர்த்தி' என்று சொல்லிவிட்டு மைதிலி இடத்தில் போய் உட்கார்ந்து, பையை வைத்துவிட்டு, உடனே பாத்ரூம் போனாள். இன்னும் கொஞ்ச நேரம் அழுதுவிட்டு, முகத்தைத் துடைத்துக் கொண்டு வர!

காலை எழுந்திருக்கும்போதே ஜனனிக்கு உடம்பு சுட்டது. ஜனனியின் இரண்டு வயதில் அவள் இரண்டே இடங்களைத்தான் பார்த்திருந்தாள். ஒன்று வீடு - இன்னொன்று குழந்தை மருத்துவர் கிருஷ்ணமூர்த்தியின் கிளினிக். கிளினிக்கின் பச்சை பெயின்ட் அடித்த வாசல் அவளுக்குத் தெரியும். அந்த வாசலை நெருங்கியவுடனே அழ ஆரம்பித்தால், மைதிலி டாக்டருக்காகக் காத்திருக்கும் ஒரு மணி நேரமும் மூச்சு விடாமல் அழுது, டாக்டர் பரிசோதனை செய்யும்போது கையில் அடங்காமல் கதறி, வெளியே வந்த பிறகுதான் ஓய்வாள். குழந்தைக்கு இலேசாக பிரைமரி காம்ப்ளெக்ஸ் இருப்பதாக டாக்டர் சொல்லியிருந்தார். ஒரு மாதத்தில் இரு முறையாவது அவளுக்கு இருமலோ ஜுரமோ வந்து டாக்டர் கிருஷ்ணமூர்த்தியின் பச்சைக் கதவு கிளினிக்கிற்கு ஓட வேண்டியிருக்கிறது. இன்னும் டாக்டரிடம் போய்விட்டு, ஆட்டோ பிடித்து வீட்டிற்கு வந்து, மாமியாரிடம் கொடுக்க வேண்டிய மருந்துகளை விவரித்தாள். பின்பு ஒரு புயல் போல பாத்ரூமில் பாய்ந்து, இரண்டு நிமிடத்தில் குளித்து, ஒரு நிமிடத்தில்

பால் கொடுக்கும் கறவை மாடாகவும், பாரம் இழுக்கும் காளை மாடாகவும் இரட்டைப் பணிகளைச் செய்ய வேண்டிய பெண்களின் வாழ்க்கை முறை மிக



அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. யதார்த்தமான நடை, கதையின் பிளஸ் பாயிண்ட்!

கதையை விமர்சிக்கிறார்...

மதுபாலா



மார்ச் 8
மகளிர் தினம்

புடைவை உடுத்தி, பவுடர் ஒத்தி, அரை நிமிடத்தில் சாப்பிட்டுக் கிளம்பும்போது குழந்தையைப் பார்த்தாள். நல்ல ஜுரம் அடிக்கும் முகத்தில் ஒரு புனிதமான சாய லோடு ஜனனியின் முகம் ஜிவு ஜிவுத்திருந்தது. அம்மாவைப் புடைவையில் பார்த்ததும் திரும்ப அழுதாள். அவளுடைய கணக்கில் அம்மா நைட்டி போட்டிருந்தால், வீட்டில் இருப்பாள். புடைவை கட்டினால் வெளியே போய் வருவாள். 'அம்மா போகாதே' என்று ஜுரத்தோடு கால்களைக் கட்டிக்கொண்டு அழும் குழந் தையை விலக்கி, செருப்பு மாட்டிக் கொண்டு வெளியே போய் ஆபீஸ் போக பஸ் பிடிப்பதும், பிறகு லிஃப்டில் அழுவதும் மைதிலிக்கு மாதம் இருமுறை வாடிக்கை.

"என்னப்பா, குழந்தைக்கு உடம்பு சரியில்லையா?" என்றாள் ஸ்டெல்லா, உணவு நேர இடை வெளியில். வீட்டுக்கு ஃபோன் செய்து ஜனனிக்குக் கொஞ்சம் பரவாயில்லை என்கிற துளி நிம் மதியோடு சாப்பிட ஆரம்பித்தாள் மைதிலி.

"ஸ்டெல்லா, உன்னை மாதிரி இல்லாமல், நான் மடத்தனமாய்க் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். ஒவ்வொரு நாளும் ஆபீஸ் போக புடைவை கட்டும்போது 'போகா தம்மா'ன்னு ஜனனி அழுவா பாரு - அந்த அழுகை காதில் மோத மோத வெளியே வந்து, ஆஃபீசுக்கு வர கொடுமை இருக்கே.." மைதி லியின் குரல் கம்மியது.

"மைதிலி, உன் வீட்டுக்காரர் தான் நல்ல வேலையில் இருக்காரே. பேசாமல் வேலையை விட்டுட்டு வீட்டிலே இரு. உனக்கும் நிம்மதி

பாரதி பாஸ்கர்

யில்லை. குழந்தைக்கும் நிம்மதியில்லை. ஏன், உன் வீட்டுக்காரர் ஒத்துக்க மாட்டாரா?" ஸ்டெல்லாவின் குரலில் உண்மையான வாஞ்சையும் கவலையும் இருந்தது.

"மனுஷன் நடிகர் திலகம் ஸ்டெல்லா. வேலையை விடறதுன்னு பேச்சு ஆரம்பிச்சா போதும். 'உன் முடிவுடா. என்ன வேணும்னா பண்ணிக்கோ. நான் தலையிடவே மாட்டேன்'ன்னு ஆரம்பிப்பார். 'நீ சந்தோஷமா இருக்கணும். அதுதான் முக்கியம். ஆனா என்ன, நான் இந்த ஸாஃப்ட்வேர் துறையில் இருக்கேன். சனியன், எப்ப வேலை போகும்னு சொல்ல முடியாது. நல்ல மார்க்கெட் இருக்கும்போது பணம் கொட்டும். மார்க்கெட் டல்லானா, கம்பெனியை இழுத்து மூடுவான். உன் சம்பளம் இருந்தா ஒரு தைரியம்'னு சொல்வார். இப்படியே இரண்டு பிரமோஷன் போயாச்சு."

"இந்த முறை யார்கிட்டேயும் யோசனை கேக்காதே. இன்னும் இரண்டு நாளிலே போனஸ் வரும். 'கப்'புனு பணத்தை வாங்கிக்கிட்டு 'டப்'புனு லெட்டர் கொடு" என்றாள் ஸ்டெல்லா.

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication : Chennai
2. Periodicity of Publication : Weekly
3. Name of Printer : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
4. Name of Publisher : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
5. Name of Editor : Seetha Ravi
   Nationality : Indian
   Address : 'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2002

K. Rajendran
Publisher

தாள்களோடு தன் கம்ப்யூட்டரில் ஒரு புது எக்ஸெல் கோப்பைத் திறந்துகொண்டாள். எல்லாத் தகவல்களும் கட்டங்களாய்ப் பதிந்தது. மேலிருந்து கீழ் வரிசைகளாயும், இடமிருந்து வல வரிசைகளாயும் எண்கள் மாறி மாறி கட்டங்களில் மிதந்தன. நவீன பரமபதம். ரிப்போர்ட் தயார் செய்துவிட்டு, செக்ஷன் சீஃப் ஆர்த்திக்கு ஈமெயில் செய்தாள். மறக்காமல் ஆர்த்தியின் மேலதிகாரிக்கு ஒரு பிரதி அனுப்பினாள். (இல்லாவிட்டால் தானே தயாரித்ததாய் ஆர்த்தி சொல்லக்கூடும்) இந்த முறை அழாமல், ஓடாமல் தெளிவாய் அலுவலகம் விட்டு வெளியே வந்தாள். அவள் முடிவு அழுத்தமாய் அவளுள் பதிந்திருந்தது.

வீட்டுக்குள் வரும்போது ஜனனி தூங்கிக் கொண்டிருந்தாள். காலையில் இருந்த அதே உடை. 'உடம்பு சரியில்லாத குழந்தைக்கு ஒரு மனுஷி உடை மாற்றமாட்டாளோ' என்று மாமியாரை மனத்தில் திட்டிக்கொண்டே "படுத்தாம இருந்தாளா?" என்றாள். "ஏற்கெனவே பிடாரி. உடம்பும் சரியில்லைன்னா..." என்று மாமியார் சொன்னதைக் காதில் போடாமல், ஜனனியின் முதுகைத் தடவினாள். அவள் குழந்தையாய் இருந்தபோது அவளின் அம்மா அவளோடும் தம்பியும் எத்தனை நேரம் செலவிடுவாள்? அம்மாவுக்கு இலக்கிய ஆர்வம் அதிகம். 'அம்மா, இடி இடிக்குது பயம்மா இருக்கு' என்றால் 'அர்ஜுனான்னு சொல்லு' என்று சொல்லாமல் 'பாரதியின் அச்சமில்லை பாடலாம். பயம் ஓடிப் போய்விடும்' என்பாள். அம்மாதான் ஔவைப் பாட்டி. அவள்தான் அதியமான். 'இந்தா நெல்லிக்கனி ஔவையே' என்று அவள் சொல்ல வேண்டும். அல்லது அம்மாதான் முல்லைக்கொடி. அவள் பாரி அல்லது அவள் அலெக்ஸாண்டர். அம்மா போரஸ் என்கிற புருஷோத்தமன். தம்பி எப்போதும் வாயிற்காப்போன். 'நான் வாயிற் காப்போன் கிடையாது' என்று தம்பி ரொம்ப அழுதால் அம்மா சீதையாவாள். இவர்கள் இருவரும் லவன், குசனாவார்கள். 'ராமரோட சண்டை போடலாம்' என்று அப்பாவைத் தலைகாணியால் தாக்குவார்கள். பௌர்ணமி காலங்களில் மொட்டை மாடியில் நிலாச்சோறு. அம்மா பிசைந்து உருட்டி வைக்கும் வற்றல் குழம்பு சாதத்தின் மணம் இன்னமும் மைதிலியின் கைகளில் வீசுவது போல் இருந்தது. வாரம் தவறாது கபாலி கோயில். உற்சவ காலங்களில் ரிக்ஷாவில் பேபி

சீட்டில் தான் உட்காருவேன் என்று சண்டை. அம்மா வெள்ளி தோறும் தலையில் மென்மையாக வைக்கும் காய்ச்சிய நல்லெண்ணெய். இரவுகளில் நிலா வீசும் வெராண்டாவில் குடித்தனக்காரக் குழந்தைகளோடு 'ஐ ஸ்பை' விளையாடும் போது பக்கத்து வீட்டுப் பெண்களோடு அம்மா வைத்துக் கொள்ளும் மருதாணி. 'தூக்கம் வரலை' என்று அழும்போது அவள் மெதுவாய் பாடும் 'ஊரிலேன் காணியில்லை' என்ற பாசுரம்.

'அம்மா என் கூட இருந்தது போல் ஜனனியுடன் நான் கூட இருக்க வேண்டாமா?' மைதிலி திடத்தோடு எழுந்தாள். சாப்பாடு ஊட்ட குழந்தையை எழுப்பினாள். "ஜனனி, அம்மா இனிமே ஆபீஸ் போகமாட்டேன்" என்றாள் ரகசியமாக. "எப்பவுமே நைட்டிதான் போடுவியா?" என்றது ஜனனி மழலையாக.

அடுத்த நாள் அலுவலகம் போனவுடன் ராஜினாமாக் கடிதம் தயார் செய்து ஸ்டெல்லாவிடம் காட்டினாள். "இன்னிக்கு தான் முகத்திலே கல்யாணப் பொண்ணு களை" என்றாள் ஸ்டெல்லா. "இப்போ தராதே. போனஸ் செக் கொடுத்தப்புறம் கொடு. நமக்கெல்லாம் பெர்ஃபார்மன்ஸ் போனஸ்தான். ராஜினாமா கொடுத்தியானா, போனஸ் தரமாட்டா சண்டாளி! வர வேண்டியதெல்லாம் வசூல் பண்ணிட்டு அப்புறமா லெட்டர் குடு கண்ணா" என்றாள்.

மதியம் மூன்று மணிக்கு ஆர்த்தி மைதிலியைத் தனி அறைக்கு அழைத்துச் சென்றாள். இந்த நிர்வாகம் அவளது திறமையை ரொம்ப மதிக்கிறது. இந்த சிக்கலான கால கட்டத்தில் அவளின் பங்களிப்பு மிகப் பிரத்யேகமானது. வேலை செய்பவர்களின் திறமைகளைச் சரியாக எடை போட்டு எதிர் கால பெரிய பதவிகளுக்கு அவர்களைத் தயார் செய்யும் நோக்கத்தோடு இந்த நிர்வாகம் அவளுக்கு ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் போனஸ் கொடுக்கிறது. அது மட்டுமல்ல, அவளுக்குப் பதவி உயர்வும். இதோ கடிதம்!

அந்தக் கடிதத்தை மைதிலி ஒரு முறை படித்தாள். அவளுக்குப் பதவி உயர்வு! இன்னும் இரண்டு பதவி உயர்வு இந்த மாதிரி வந்தால் போதும். அவளும் ஆர்த்தி மாதிரி ஆக முடியும். செக்ஷன் ஹெட். 'ஜனனிக்கு பிரைமரி காம்ப்ளெக்ஸுக்கு ஒன்பது மாதம் மருந்து கொடுத்தால் சரியாகிவிடும்' என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். இரண்டு மாதம் முடிந்து விட்டது. இன்னும் ஏழு மாதம் தானே. அடுத்த வருடம் பள்ளியில் சேர்க்கும் வரை பல்லைக் கடித்துக் கொண்டால் ஓடுகிற ஓட்டம். இப்போது தான் சம்பளம் உயர்ந்திருக்கிறதே. மாமியாரின் உதவிக்கு ஒரு பெண்ணை வேலைக்கு வைத்தால் போகிறது. பரந்தாமன் சொல்வது போல ஸாஃப்ட்வேர் தொழிலில் என்ன உத்தரவாதம்? இப்போது சம்பாதித்துக்கொண்டால்தானே நாளை ஜனனிக்கு நல்ல எதிர்காலம். ஸ்டெல்லாவுக்குச் சமாதானம் சொல்ல உள்ளே வார்த்தைகள் ஓடின.

"தாங்க்ஸ் ஆர்த்தி. நான் இதை எதிர்பார்க்கவேயில்லை."

"மைதிலி டார்லிங், நேற்று நீ செய்தாயே ஒரு அருமையான ரிப்போர்ட். அதை இன்னும் விரிவாக்கம் செய்ய வேண்டும். இன்றே பாஸுக்கு அனுப்ப வேண்டும். முடியுமா?"

"சரி ஆர்த்தி."

'வீட்டிற்கு வர நேரமாகும்' என்று போன் செய்தாள். அப்படியே ராஜினாமா கடிதத்தை மறக்காமல் கிழித்து குப்பைக் கூடையில் போட்டாள். ○



"என் கழுத்துலேர்ந்து செயினை உருவிட்டு ஓடுறான்... சீக்கிரம் போய்ப் பிடிங்க..."

"ஆனானப்பட்ட உன்கிட்டேயே செயினை உருவிட்டான்... நான் போனா என் குடலையே உருவிடுவான்...!"

- தஞ்சை தாமு



பிரதமருடன் நடிக்கிறார் கீர்த்தனா!

‘விழிகளாலேயே பேசி இருக்கும் தங்களது அன்புமகளின் திறமை கண்டு, அசந்து போயிருக்கிறேன். அந்த சின்ன ஊர்வசிக்கு என்து பாராட்டுகளும், ஆசிகளும்!’ இப்படி இரண்டே வரியில் பாராட்டுக் கடிதம் எழுதி அனுப்பியவர் டைரக்டர் கே. பாலசந்தர். அவர் பாராட்டியிருக்கும் சின்ன ஊர்வசி: ‘கன்னத்தில் முத்தமிட்டால்’ படத்தில் நடித்துள்ள பார்த்திபனின் மகன் கீர்த்தனா!

சென்னை சர்ச்பார்க் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு மாணவியான கீர்த்தனா படுசுட்டி. எல்லா பாடங்களிலும் நல்ல மார்க் வாங்கினாலும், ஹிந்தியில் மட்டும் பாஸ் மார்க்தான்.

“எனக்கு ஹிந்தி ரொம்ப கஷ்டமாக இருக்கு. கணக்குதான் என் ஃபேவரிட் சப்ஜெக்ட். தொண்ணூற்று ஐந்துக்கு மேல்தான் வாங்குவேன்! ஒருதடவை என் அப்பாவை ஏமாத்தினேன்! எப்படித் தெரியுமா? ஸ்கூலிலிருந்து வந்தவுடன், “டாடி! இன்னிக்கு கணக்கு டெஸ்ட்லே, என் மார்க் என்ன தெரியுமா? சொன்னா திட்டமாட்டீங்களே! ஜஸ்ட் நாற்பத்தெட்டு!”னு சொன்னதும், ‘ஏன்! என்ன ஆச்சு உனக்கு? மார்க் எப்படி குறைஞ்சுது?’னு ஷாக் ஆயிட்டார்.

அப்புறம் சிரிச்சுக்கிட்டே நான் சொன்னேன்.

“டாடி! நூற்றுக்கு நாற்பத்து எட்டு இல்லை; ஐம்பதுக்கு!”

எதிலும் ஒரு புதுமை செய்ய வேண்டும்; மற்றவர்களிலிருந்து வித்தியாசப்பட வேண்டும் என்கிற பார்த்திபனின் பாலிஸிதான் அவரது பெண்ணுக்கும். நான்காம் வகுப்பு படித்தபோது, ‘கனவு’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதிக்கொண்டு வரச் சொன்னார் டீச்சர். அந்த வகுப்பிலேயே, மிக வித்தியாசமாக கற்பனை வளத்துடன் எழுதப்பட்டது என்று டீச்சர் பாராட்டியது கீர்த்தனாவின் கட்டுரையைத்தான்!

“நான் ஒரு பெரிய தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது, வாழை மரத்துக்குப் பக்கத்தில் வாழை இலை ஒன்று கிடக்கிறது. நான் விளையாட்டாக அதன் மேல் ஏறி உட்கார்ந்தவுடன், அது ‘விர்’ என்று பறக்க ஆரம்பிக்கிறது. கொஞ்ச நேரத்தில், கீழே பார்த்தால் கடல். அங்கே ஒரு கடல் கன்னி. “வா! ஜாலியாக ஊர் சுற்றலாம்!” என்று அழைக்கிறேன். நானும், கடல் கன்னியும் உயரே மேகத்துக்கு மேலே பறந்துகொண்டிருக்கிறோம். ஒரு மேகத்திலே, விளக்கு, அலங்காரம். இறங்கிப் பார்த்தால், ‘சின்ட்ரெல்லா’வுக்குப் பிறந்தநாள். ஒரே

ஜாலி! குள்ள மனிதர்கள் எங்களோடு விளையாடினார்கள்; புடிச்ச ஐட்டம் எல்லாம் சாப்பிடக் கொடுத்தார்கள். நேரம் போனதே தெரியலை. திடீர்னு, கடிகாரத்தைப்



பார்த்தா, ரொம்ப லேட் ஆயிடுச்சு. 'ஐயோ! அம்மா திட்டுவாங்க! நான் போகணும்'னு சின்ட்ரெல்லாகிட்டே சொன்னேன். நிறைய பரிசுப் பொருள் எல்லாம் கொடுத்து, இன்னொரு நாள் கண்டிப்பா வரணும்னு சொல்லி அனுப்பினாங்க! வாழை இலையிலேயே நான் வீட்டுக்கு வந்து இறங்கினேன்!" அபிநயத்துடன் தான் எழுதிய கனவைச் சொல்லி முடிக்கிறார் கீர்த்தனா!

கீர்த்தனாவுக்குப் பிடித்தவற்றின் லிஸ்ட்:

"ஸ்கூல் பிடிக்கும்; மழை பெய்து ஸ்கூல் லீவு என்றாலும் கூட, அடம் பிடித்து, ஸ்கூல் வரை போய்விட்டுத் திரும்பி வருவேன். மழை ரொம்ப பிடிக்கும். அம்மா கொஞ்சம் அசந்தால், மழையில் நனைந்தபடி, ஆட்டம் போடுவோம். அப்புறம், நாங்க மூணு பேரும் சேர்ந்து 'டிடெக்டிவ்ஸ்' விளையாட்டு விளையாடுவோம் ரொம்ப ஜாலியா இருக்கும்.

"என்னால கண்டுபிடிக்க முடியலைன்னா, என்னை டீஸ் பண்ணுவாங்க. நான் அழுவேன். ஷூட்டிங்கின்போதுகூட, மணிரத்னம் அங்கிள், அழச் சொன்னபோது, என்னை டீஸ் பண்ணறமாதிரி நினைச்சுப்பேன். உடனே அழுகை வந்துடும்"



'படபட'வென்று பேசுகிறார் கீர்த்தனா. சினிமா பார்க்க மாட்டார். டி.வியில்கூட சினிமா பார்ப்பது அபூர்வம்தான். மிருகங்கள் பற்றிய புத்தகங்கள், கதைகள் பிடிக்கும். ஓய்வு நேரம் என்றால் கீர்த்தனா கையில் புத்தகம்தான்!

"ஒரு தடவை சிங்கப்பூர் சென்றிருந்தபோது, அங்கே இருந்த சயன்ஸ் சென்டருக்குப் போனேன். மிகவும் பிடிச்சது அமெரிக்காவின் நாஸா மையம் மற்றும் விண்வெளி வீரர்கள் பற்றின செக்ஷன்தான்! விண்வெளி வீரர்களோட டிரஸ்ஸைப் பார்த்தபோது,

எனக்கும் அது மாதிரி டிரஸ் போட்டுக்கணும்போல இருந்தது எனக்குப் பாவாடை _ சட்டை போட்டுக்கப் பிடிக்காது; புது புது டிசைனில் டிரஸ் போட்டுக்க ஆசைப்படுவேன்!"

"**கீ**ர்த்தனாவுக்கு நகைச்சுவை உணர்ச்சி அதிகம்" என்கிறார் பார்த்திபன்.

"ஒரு தடவை, டெல்லியிலிருந்து ஆக்ராவுக்குப் போய்க்கொண்டிருந்தபோது, வழியில், "அதோ பார் கிளை இல்லாத மரம், மாடு இல்லாத வண்டி" என்கிற ரீதியில் நாலைந்து சொல்லிக்கொண்டே வந்தேன். சட்டென்று கீர்த்தனா, "அதோ பாருங்கள், காக்காய் எச்சமில்லாத சிலை!" என்றாளே பார்க்கலாம்! உடன் வந்த எல்லாரும் சிரித்து விட்டனர்.

"வளர்ந்து பெரியவளானதும், என்னவாக வர ஆசை? என்று கேட்டால், பட்டென்று பதில் வருகிறது. "நான் நடிக்கிறபோதே மணிரத்னம் அங்கிளிடம் சொல்லிட்டேன்! நான் பெரியவளானதும், டைரக்டராகப் போகிறேன். அதனால, உங்ககிட்ட அசிஸ்டென்டா சேரப் போறேன்னு!"

"தொடர்ந்து நடிப்பீங்களா கீர்த்தனா?"

"கண்டிப்பாக நடிக்கணும்னும் இல்லை; நடிக்கவே கூடாதுன்னும் இல்லை" என்று சொல்லும் கீர்த்தனா, விரைவில், பிரதமர் வாஜ்பாயுடன் நடிக்கப் போகிறார். வாஜ்பாயின் கவிதைகளை, ஒரு வீடியோ ஆல்பமாகத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். அதில்தான் பிரதமருடன் நடிக்கிறார் கீர்த்தனா!

சந்திப்பு: எஸ். சந்திரமௌலி

படங்கள்: யோகா

காதல் காவல் நிலையம்!



லாலாப்பேட்டையைச் சுற்றியுள்ள இளைஞர்களும், இளைஞிகளும் வேலை வாய்ப்புக்காக கரூர் சென்று வரும்போது, காதலில் சிக்கிக்கொண்டால், அவர்களது கல்யாணத்துக்குப் பெருந் துணையாய் இருப்பது லாலாபேட்டை காவல் நிலையம்தான். சுமார் இருநூறு திருமணங்களை இங்கே நடத்தியிருக்கிறார்கள். சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டதும், காவல் நிலையத்துக்கு அருகிலிருக்கும் பச்சநாச்சியம்மன் படுதலம் முன்பு, தாலி கட்டி மாலை மாற்றிக் கொள்ளும் வைபவமும் அரங்கேறுகிறது.

இளங்காதலர்களின் சரணாலயமாகத் திகழும் இந்த லாலாபேட்டை காவல் நிலையத்தை நோக்கி விநோதமான வெளிநாட்டுப் பறவைகளும் ஜோடி ஜோடியாக வந்து அடைக்கலம் தேடுகின்றன. காரணம் லாலாபேட்டை காவல் நிலையத்தின் பின்புறமுள்ள அடர்ந்த புளியமரம். கோடைக்காலத்தில் இங்கு வந்து தங்கும் பறவைகள், குளிர்காலம் தொடங்கியதும் மீண்டும் ஆஸ்திரேலியாவுக்கே பறந்து விடுகின்றன. வெளிநாட்டுப் பறவைகளுக்கும் லாலாபேட்டை காவல் நிலையத்தின் மீது காதல் போலும்!

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



இறைஜோதிடம்

மார்ச் மாத இதழ்

ஜோதிட பிதாமகர்
வித்வான்
வே.லட்சுமணன்

ஜோதிட மேதை
காழியூர் நாராயணன்

விருட்ச சாஸ்திர வித்வான்
ஸ்வாமி
கண்ணன் பட்டாச்சாரியா

ஜோதிட சக்ரவர்த்தி
முருகு இராசேந்திரன்

ஹோராமார்த்தாண்ட்
ஓம் உலகநாதன்

கைரேகை சாம்ராட்
லயன் கே.துரைசாமி

வாஸ்து நிபுணர்
ஆர்.கே.பகவதிராஜ்

ஜோதிடச் செம்மல்
லயன் ஸ்ரீனிவாஸ்

மற்றும்

பல ஜோதிட
வல்லுநர்களின்
ஜோதிடக் கட்டுரைகள்

இது ஒரு முழுமையான ஜோதிட மாதஇதழ்

விபரங்களுக்கு :
சாருபிரபா பப்ளிகேஷன்ஸ்,
105, ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி : 8420658, 8554242

நவக்கிரக ஆன்மீக பயணம்

நாள் : சென்னையிலிருந்து 29.3.2002
இரவு கிளம்பி 1.4.2002 காலை திரும்புதல்

2 தினங்கள் ரூபாய் 800/-

வசதி : இரயிலில் படுக்கை வசதியுடன் சென்று வருதல்.
இரவு தங்க வசதியான அறைகள், திருத்தலங்களை சுற்றி பார்க்க வேன் வசதி உட்பட. மற்றைய தேதிகளில் சிறு சிறு குழுக்களாகவும் அழைத்துச் செல்லப்படும். (சாப்பாடு நீங்கலாக)

சென்னையில் தொடர்பு போன் : 4892205

VISVAM TOURS & TRAVELS
VISVAM GUEST HOUSE
33, திருமஞ்சன வீதி, திருவிழந்தூர்,
மயிலாடுதுறை-609 001. போன் : 04364-227228
e-mail : viswamnet@vsnl.net

25 ஆண்டுகள் அனுபவமிக்க



SRINIVASA SEWING MACHINE SERVICE CENTRE

159, கொன்னூர் ஹை ரோடு,
அயன்புரம், சென்னை - 23
போன்: 6450073

எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நன்றி

போன் செய்தால் போதும்! தங்கள் **இல்லத்திற்கே வந்து** திருப்திகரமாக நம்பிக்கையாக உங்கள் வீட்டு தையல் மிஷினை நல்ல முறையில் ஓவராயிலிங் செய்து தருகிறோம். (சென்னைவாசிகளுக்கு மட்டும்)

நல்ல தரமான, உத்திரவாதத்துடன் கூடிய மிஷின்கள் விற்பனைக்கும் உள்ளன.

தொடர்பு கொள்ளவும்:
Prop. K. SRINIVASAN

அலையில்லாது நுரைத்த அரபிக் கடல் சரிவான கரையில் ஏறியும் இறங்கியும் விளையாடிக்கொண்டிருந்தது. மௌனமாய். இந்த உயரத்திலிருந்து கடல் ஒலி கேட்கவில்லை.

கடலுக்குள் துருத்திக் கொண்டு நிற்கும் பாறைக்குன்றின் மேல் கட்டப்பட்ட எண் கோண வடிவத்து வீடு அது. பாறைகளினூடே ஒற்றையடிப் பாதையில் சறுக்கிக் கொண்டே போனால், கீழே கடற்கரை. வளைந்த கரையோரமாய் அடரும் தென்னந்தோப்புகளின் பச்சை.

திருவனந்தபுர நகருக்கு இவ்வளவு பக்கத்தில் இப்படி ஓர் அமை[illegible]?' விது [illegible]ம் ஆச்

சரியப்பட்டாள். ராஜியின் அலைச்சல்களுக்குப் பின் இப்படி ஒரு விடுமுறை அவளுக்கு நிச்சயம் தேவைதான். ராஜியின் அப்பாவுக்கு நன்றி எவ்வளவு சொன்னாலும் போதாது. இந்த விடுமுறையை ஏற்பாடு செய்து, விதுவையும் ரஞ்சியையும் சேர்த்துக்கொண்டதற்கு.

மின்னியின் அரங்கேற்றத்துக்குத் தேவையான எல்லாவற்றையும் ராஜி வாங்கி முடித்தாகிவிட்டது. சென்னை இசைக் கலைஞர்கள் யு.எஸ். வருவதற்கான ஏற்பாடுகளும் செய்தாயிற்று. நாட்டிய அரங்கம், மேடை அலங்காரம், சிறப்பு விருந்தாளிகள், அரங்கேற்றம் முடிந்ததும் விருந்துச் சாப்பாடு, அழைப்பிதழ்கள். முழுக் கல்யாண ஏற்பாடு போல் குமாரும் தன் பங்கு வேலைகளை அங்கே செய்து முடித்துவிட்டார்.

ராஜியின் அப்பாவும் அரங்கேற்றத்துக்காகவே யு.எஸ். வருகிறார்.



23 இக்கரையில்

மின்னியும் இசைக் கலைஞர்களும் சேர்ந்து ஒரு வாரமாவது பயிற்சி செய்ய வேண்டும். எல்லாம் நல்லவிதமாக நடக்க வேண்டும். ராஜியின் உற்சாகம் விதுவுக்குப்புரிந்தது. அவளையும் தொற்றிக் கொண்டது.

சென்னையில் இன்று வேலை முடிந்த பிறகு, ரஞ்சி அவள் தங்கையுடன் நாளை இங்கே வந்து சேர்வாள். இன்னும் கொஞ்சம் கலகலப்புக் கூடும். நிறைய உற்சாக எதிர்பார்ப்புகள்.

இந்த வீட்டு ஹாலிலிருந்து அல்லது முன் முற்றத்துப் பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்து இளநீர் குடித்தவாறு, இந்தக் கடலையும் கரையையும் வானத்தையும் தென்னைகளையும் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். வாழ்க்கை எவ்வளவு எளியதாக இருக்கக்கூடியது!

குடித்து முடித்த இளநீரைப் பாறையால் செய்த மேசை மேல் வைத்தாள் விது. மீண்டும் கடலைப் பார்த்தாள். கடலோரமாய் நடக்கும் ராஜியின் அப்பாவைச் சுற்றிச் சுற்றித் துள்ளி ஓடும் அம்பிகா. அங்கங்கே நின்று சிப்பி பொறுக்கிக் கொண்டே அவர் பக்கத்தில் நடக்கும் அருணா. இவ்வளவு நேரம் இங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த அம்மா இப்போதுதான் மதியத் தூக்கம் என்று உள்ளே போனாள்.



"அருணாவும் அம்பிகாக் குட்டியும் இரண்டே நாளிலே அப்பாகிட்டே ஒட்டினதைப் பார்த்தியா?" என்றாள் ராஜி.

"கதையும் கிண்டலுமா பேசறவர்கிட்டே யார்தான் ஒட்ட மாட்டாங்க? நீயும் மாமாவும் பேசறதையும், அடிபிடி போட்டுக்கறதையும் பார்த்தா ஏதோ அண்ணா தங்கை மாதிரி இருக்கு." விது சிரித்தாள்.

ராஜி அவளையே கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். "நீ இப்படிச் சிரிச்சு நான் பார்த்ததே இல்லை, விது."

"ராஜி, யு.எஸ்.ஸில் நீயும் ரஞ்சியும் என்னைத் தாங்கிப் பிடிச்சிருக்கலைன்னா, முழு

காஞ்சனா தாமோதரன்

சாவே உடைஞ்சு போயிருப்பேன். ரமேஷ்ும் கூட...'' குரல் நெகிழ்ந்தது.

ராஜியின் நெகிழ்வு அவன் முகத்தில் தெரிந்தது. ''சொந்த பந்தம்னு சொல்லிக்க வேற யாரும் இல்லாத இடம், நம்ம எல்லாருந்தான் சொந்தம், விது. நர்மதா விஷயம் ஞாபகம் இருக்கா? ஸ்ரீனிஜா, குல்ஷன், சாவித்திரி, சேத்னா, ரீனா... அடுக்கிட்டே போகலாமே...''

எந்தக் குடும்பத்தில் நல்லது கெட்டது நடந்தாலும் ஒருவருக்கு ஒருவர் உதவியாய். வித்தியாசங்கள் அதிகம் இல்லாமல். ஒரு நிலப்பகுதியில் இருந்து இன்னொரு அந்நிய நிலத்துக்கு வந்தவர்கள் என்ற ஒரே அடிப்படை உறவினால். எண்ணிக்கை அதிகமான பெரிய நகரங்களில் இந்த உறவு கொஞ்சம் தொய்ந்து போகிறது; வேறு ஏதாவது அடிப்படையில், பிரிவுகள் ஆரம்பிக்கின்றன. இந்தப் பிரிவினைகளும்கூட மனிதச் சமூக இயக்கத்தின் ஓர் இயல்புதானோ என்னமோ, விது நினைத்துப் பார்த்தாள்.

''ஸ்ரீனிஜாவெல்லாம் அங்கே வந்து முப்பது நாப்பது வருஷம் இருக்குமா, ராஜி?''

''முப்பத்தெட்டு வருஷம். குல்ஷன் நாப்பத்திரண்டு வருஷம். இவங்க பக்கத்தில், ரஞ்சியோட இருபத்திரண்டு வருஷம், என்னோட பதினெட்டு வருஷம், உன்னோட பதினஞ்சு வருஷம் எல்லாம் கண்டைக்காய்.''

''உனக்கும் குமாருக்கும் இங்கே திரும்பி வரணும்னு ஆசை இருக்கா, ராஜி?''

''சேத்னா குடும்பம் இங்கே இரண்டு வருஷம் இருந்து பார்த்துட்டு, முடியலைன்னு திரும்பி வந்தது உனக்குத் தெரியும். நீ கல்யாணமாகி அங்கே வந்தியே... அதே வருஷத்திலே இங்கே திரும்பி வந்த இன்னொரு குடும்பம் சந்தோஷமா இங்கேயே இருக்கு. ஓய்வுக் காலத்துக்குன்னு நிறைய பேர் இங்கேயும் வீடு வாங்கிப் போட ஆரம்பிச்சாச்சு. சிலர் திரும்பி வரவே போறதில்லை. இப்படிப் பல ரகங்கள்...''

''உனக்கு அங்கே பிடிச்சிருக்கா, ராஜி?''

''பிடிச்சதும் இருக்கு. பிடிக்காததும் இருக்கு.''

''இங்கே பிடிச்சிருக்கா...?''

''பிடிச்சதும் இருக்கு. பிடிக்காததும் இருக்கு. அங்கே எனக்கு எதெல்லாம் பிடிக்கலியோ அதிலே சிலது இங்கேயும் வந்து சேர்ந்து போச்சு!''

விது பதில் சொல்லவில்லை. ராஜியும் நீண்ட நேரம் மௌனமாயிருந்தான். திரும்பிப் பேசுகையில் அவன் குரலில் புரியாத ஓர் உணர்ச்சி. ''விது, நாம ... நான்... பதினெட்டு வருஷத்துக்கு முன்னாலே விட்டுட்டுப் போன இடம் இல்லை இது. காலத்தோட எல்லாம் மாறித்தான் போகுங்கறது புரியும். ஆனாலும், இங்கே வந்தா, என் மனசு எனக்குத் தெரிஞ்ச பழசைத்தான் தேடுது. யு.எஸ். சூழலையும் என்னாலே முழுசா ஒத்துக்க முடியலை... முடியாது... திரிசங்கு சொர்க்கம்.''

புகுந்த நாட்டின் அந்நியத்துள் இருந்து கொண்டு, பிறந்த நாட்டின் தற்போதைய அந்நியத்தை ஒதுக்கி, தனக்கு அந்நியமல்லாத கடந்த காலத்தைத் தன்னுள் உயிரோடு வைத்திருக்கும் ராஜி! மனத்தில் கேள்விகளே இல்லாதவன் என்று ராஜியை எளிமையாக்கிப் பார்த்தது எவ்வளவு தப்பு! மனிதர்கள் எளிமையானவர்களே இல்லையோ?

''இரண்டுமே அந்நியமானதுன்னு சொல்றியே... ரெண்டுமே உன்னுடையதுன்னு நினைச்சு அனுபவிக்க முடியலியா, ராஜி?''

''ரஞ்சிதான் அப்படி நினைச்சு நடக்கறவ, விது. அவ ஒரு 'டைப்'. எனக்கு வித்தியாசங்கள் அதிகம் உறுத்தும்; தாண்டிப் போக முடியலை. நான் இன்னொரு 'டைப்'. அட, நம்ம உலகத்துக்கு எல்லா 'டைப்'பும்தான் வேண்டியிருக்கு!'' ராஜி சிரித்தான்.

ராஜியின் சிரிப்பில் ஒரு சின்ன வறட்சி இருப்பதாய் விதுவுக்குத் தெரிந்தது.

''சார், என்னைக் கண்டபடி திட்டி வாரமொரு முறை மொட்டைக் கடிதம் வருது...!''

''உங்களுக்கு யார் மேலாவது சந்தேகமுண்டா?''

''நேர்ல திட்ட பயந்துபோய் என் புருஷனே எழுதியிருப்பாரோன்னு சந்தேகப்படறேன், சார்...!''

- ரெ. இராமன்



"அப்போ, மின்னி எப்படி?" கேட்ட பிறகு தான் கேட்டிருக்கவேண்டாமோ என்று தோன்றியது. ராஜியின் முகத்தில் ஒரு மாற்றம். இறுக்கம். ஒரு மெல்லிய திரை இடையே விழுவது போல் உணர்வு.

"அங்கேயே பிறந்தாலும் நம்ம முறைப் படியே வளரலாம், விது."

அப்படியும் நிறையக் குழந்தைகள் அங்கே வளர்வது விதுவுக்குத் தெரியும். திருமணம் கூட அப்பா அம்மாவே பார்த்து நடத்தி வைக்கட்டும் என்றிருக்கும் சில இளைய தலைமுறையினரையும் தெரியும். அவர்களும் பொதுவாகச் சந்தோஷமாய்த்தான் இருக்கிறார்கள்.

ஆனாலும், விதுவுக்கு மின்னியை நினைத்தால் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. சில ஆயிரம் வருடத்துப் பாரம்பரியத்தின் அழுத்தம் வீட்டுக்குள். வெளியே வேறு சூழல். இரண்டுக்கும் நடுவே, கம்பி மேல் நடக்கும் கழைக்கூத்தாடி போல்.

ராஜியையும் ரஞ்சியையும் பார்த்து இந்த விஷயத்தை இன்னும் புரிந்து கொள்ள வேண்டும். அருணாவும் அம்பிகாவும் இந்த அழுத்தம் இல்லாமல் வளர வேண்டும். எந்த அழுத்தமுமே அதிகம் இல்லாமல் வளர வேண்டும். அவர்கள் அம்மாவைப் போல் இல்லாமல்.

விது மீண்டும் கடலைப் பார்த்தாள். நீலங்களும் பச்சைகளுமாய் விரிந்த கடலின் மேல் வெண் மேகங்களின் கருநிழல் தீவுகள்.

"ஆமா, என்னைப் பற்றி இவ்வளவு கேக்கறியே, விது... நீ எந்த 'டைப்'னு சொல்லலியே? உனக்கு அங்கே பிடிச்சிருக்கா?"

ரமேஷ் வந்து போனதிலிருந்து விது தன்னைத்தானே கேட்டுக்கொண்ட கேள்விதான். பதில் இன்னும் தெளிவாகவில்லை.


தன் மீது கிடந்த அம்பிகாக்குட்டியின் வலது கையையும் காலையும் மெல்ல ஒதுக்கினாள் விது. முனகிக்கொண்டே புரண்டு படுத்த அம்பிகாவின் முதுகில் மெல்லத் தட்டிக்கொடுத்தாள். அம்பிகா தூங்கிப் போனாள். விதுவின் தூக்கம் முழுதாய்க் கலைந்திருந்தது.

சமையலறையில் தண்ணீர் குடித்து விட்டு ஹாலைக் கடக்கையில், சன்னல் வழியே கடல் அழைத்தது. கதவைத் திறந்து முற்றத்துப் பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். மதியம் இங்கு ராஜியுடன் பேசினது நினைவுக்கு வந்தது. வேரூன்றி நிற்பவள் என்று அவள் நினைத்த ராஜி, வேரற்று மிதக்கும் பாசியாய்த் தன்னை உணர்வது. நினைத்ததற்கு மாறாக, வேரும் விழுதுமாய் நிற்கும் ரஞ்சி. பெருமளவு விழுதுகளை ஊன்றித் தழைத்திருக்கும் மற்ற சில நண்பர்கள். நாடோடிகளிலும்கூட எத்தனை வகை.

'வேரோ விழுதோ, ஏதாவது எனக்குண்டா?' விது தனக்குள் சிரித்தபடி நிறுத்தினாள். இப்போதே உவமைகளைத் தூக்கி எறிந்து விடுவது நல்லது. அல்லது அவற்றின் எல்லைகளைத் தாண்டி யோசிக்க முடியாது.

அவளுக்குத் தன்னை நினைத்தால் ஆச்சரியமாய் இருந்தது. குழந்தைப் பருவத்தின் ஆழமான காயங்கள் உருவானது இங்கே. பின்னால் வரும் உறவுகள் கோணலாவதற்கான முதல் சுழி போடப்பட்டது இங்கே. ராஜி சொன்னது போல் கால மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதும் இங்கே. ஆனால், ராஜி உணரும் அந்நியத்தை இங்கே விது உணரவே இல்லை. ஏன்?

விமான நிலையத்தில் வந்திறங்கிய கணத்திலிருந்து இப்போது வரை, இந்த நிலத்தின் ஓர் இயல்பான பகுதியாய் அவள் உணர்வது ஏன்? டெல்லி வீட்டின் குல்மொஹர் போல், யமுனைப் படுகையில் ஒரு கூழாங்கல் போல். இதோ இங்கே நிற்கும் தென்னை போல், அதோ அந்தப் பாறை போல். ஏதோ, இடப்பெயர்ச்சியும் காலப் பெயர்ச்சியும் நிகழவே இல்லை



"எங்கப்பாவுக்கு விஷயம் தெரிஞ்சு, 'இனி பாய்பிரண்டு சகவாசமே கூடாது'ன்னு திட்டிட்டார், டியர்!"

"சே! எனக்கு நூறு ரூபாய் கடன் கொடுத்ததையெல்லாம் எதுக்கு அவரிடம் சொல்லித் தொலைக்கிறே?"

-உ. ராஜாஜி

மிஸ்டர் க்ளீன்!

கேரள மாநில முதல்வர் ஏ.கே. அந்தோணி எளிமைக்கும் உயர் பண்புகளுக்கும் உரியவர். அவர் மனைவி இன்றும் ஆசிரியராகப் பணிபுரிந்து வருவாய் ஈட்டி வருகிறார். கேரளாவில் ஒரு சிறிய வீட்டில் அவர்களது வாழ்க்கை தொடர்கிறது.

இந்திய அரசியலில் சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட பரிசுத்தமான மனிதர் என்று பெயரெடுத்த அவரைப் பாராட்டி அண்மையில் மும்பையிலுள்ள ஒரு தென் இந்திய கல்வி நிறுவனம், அவருக்கு 'அப்பழுக்கற்ற மனிதர்' (Mr. Clean) என்ற விருதையும் இரண்டரை லட்சம் பணமுடிப்பையும் அளிக்க முன்வந்தது. அதனை ஏற்றுக் கொள்ள மறுத்த அந்தோணி, "தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் விரும்பினால் எனக்கு வழங்குவதாக இருந்த இரண்டரை லட்ச ரூபாயை முதல்வர் நிவாரண நிதிக்கு அனுப்பி வைக்கலாம்" என்று எழுதினார். அந்த கல்வி நிறுவனம் ஏனோ இதற்கு பதில் எதுவும் அனுப்ப வில்லை!



தகவல்: 'நந்தினி குரல்'

- வி.ஆர். சந்திரன்

என்பது போல்.

தன் முன்னால் விரியும் காட்சியைப் பார்த்தாள். வானமே தெரியாமல் இங்கே எவ்வளவு நட்சத்திரங்கள். தென்னஞ் சோலைக் கரையில் மோதும் கடல், நட்சத்திர ஒளியில் வித்தியாசமாய்த் தெரிகிறது. அங்கே தொட்டில் போல் படுத்திருக்கும் நகக்கீறல் பிறைநிலா இங்கே பக்கவாட்டில் சாய்ந்து நிற்கிறது. அங்கும் இங்கும் இதே கடல். இதே நிலா. இதே நட்சத்திர வானம். ஆனால், வித்தியாசங்களுடன்.

எங்கேயோ வாசித்தது ஞாபகம் வந்தது. ஆங்கிலமா, ஹிந்தியா, உருதுவா என்று இப்போது ஞாபகமில்லை. 'நீ என்னிடம் ஒரு கவிதை கேட்கிறாய். நான் ஒரு புல்லை உனக்குத் தருகிறேன். போதாது என்கிறாய் நீ. கவிதைதான் வேண்டும் என்கிறாய். இந்தப் புல்லே போதும் என்கிறேன் நான். பனியை உடுத்திக்கொண்டிருக்கிறது புல். அது என்னால் உருவாக்கக் கூடிய எந்தக் கவிப் படிமத்தையும் விட நெருக்கமானது, நிஜமானது. மீண்டும் புல்லையே உன்னிடம் தருகிறேன். எரிந்து விழுகிறாய். அபத்தம் என்கிறாய். யாராலும்தான் ஒரு புல்லைப் பறித்துக் கொடுக்க முடியுமே என்கிறாய். மீண்டும் கவிதை கேட்கிறாய். கடைசியில் ஒரு சோகக் கவிதை எழுதித் தருகிறேன் உன்னிடம்; ஒரு புல்லைக் கொடுப்பது எவ்வளவு கடினமாகி விட்டது என்பது பற்றி; வயதாக ஆக, ஒரு புல்லை ஏற்றுக் கொள்வதும் எவ்வளவு கடினமாகி விட்டது என்பது பற்றி.'

ஒரு நுட்பமான மெல்லிய சோகம் மனத்தில் படர்ந்தது. புல்லைக் கொடுப்பதும், ஏற்றுக் கொள்வதும் ஒருபுறம் இருக்கட்டும். புல்தரை இருப்பதே புரியாமல் இவ்வளவு காலமாய் மழுங்கிப் போயிருந்த மன நிலையை என்னவென்று சொல்வது.

அவள் விருப்பமோ அனுமதியோ இல்லாமல் அவள் விட்டுப் போன இந்த நிலம். காலத்தால் மாறிப் போய் அவளை மறந்து போன தேசம். ஆனால், அவளே அறியாமல் அவளுள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் தேசம். மேலோட்டமான எல்லாவற்றையும் கடந்த, புரியாததோர் உணர்வாய்.

அவள் முடிக்காமல் விட்டுப் போனவை பல இங்கே இருப்பதாய்த் தோன்றியது. ஆனால் அவை என்னவென்று இனம் தெரியாததால் ஒரு சங்கடமும் கூடவே குடைந்தது. 'இங்கேயே இருந்திருந்தால்...' என்கிற நிழல் உருவங்கள் தெரிந்தன. அடையாளம் புரியாத அவற்றை இழந்த ஊமை வலி கனத்தது.

அவள் தோள்களின் மேல் திடீரென்று சால்வையின் கதகதப்பு. அம்மா, விதுவுக்கு ஒழுங்காய்ப் போர்த்திவிட்ட பின் பக்கத்துப் பிரம்பு நாற்காலியில் சாய்ந்துகொண்டாள். நட்சத்திரங்கள் வெளிறும் வரை அப்படியே உட்கார்ந்திருந்தார்கள் இருவரும். கடலைப் பார்த்தபடி மௌனத்தின் மூலமே மனப் பாரங்களையும் கேள்விகளையும் அமைதியையும் பகிர்ந்தபடி.

எக்கரையிலும் அந்நியமாய் உணராத கடல் மட்டும் உற்சாகமாய் விளையாடிக் கொண்டிருந்தது.

(தொடரும்)



ராவண ராஜ்ஜியம்!

மதவெறி சார்ந்த வன்முறை மீண்டும் ஒருமுறை தன் கோரப்பற்களை வெளிப்படுத்தி ஓர் ஊழிக் கூத்தினை நிகழ்த்திக் காட்டியுள்ளது. அரசியல் தலைவர்களும் மதவாத இயக்கத் தலைவர்களும் உயர்ப் பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் குளிர் பதனப்படுத்தப்பட்ட அறைகளிலும் குண்டுகள் துளைக்காத கண்ணாடித் தடுப்புகளின் பின்னாலும் நின்று அறிக்கைப்போர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்களின் தூண்டுதல்களினால் இயங்கும் அப்பாவித் தொண்டர்கள் அடையாளம் தெரியாமல் கருகிய சதைப்பிண்டங்களாக மாண்டு போகிறார்கள். கத்திகுத்துப் பட்டு ரத்தம் சிந்துகிறார்கள்.

அயோத்தியில் விஸ்வ ஹிந்து பரிஷத் நடத்திய மஹாயக்ஞத்தின் பூர்ணாஹுதியில் கலந்து கொண்ட ராம் சேவக்குகளின் ஒரு பகுதியினர், அகமதாபாத் செல்லும் சபர்மதி எக்ஸ்பிரஸில் பஜன், கீர்த்தனைகள் இசைத்தவாறு உற்சாகமாக தங்கள் பயணத்தைத் துவக்கியிருக்கிறார்கள் - வழியில் கோர மரணம் தங்களுக்காக காத்திருப்பது தெரியாமல்! பரோடாவிலிருந்து சுமார் எழுபது கிலோ மீட்டர் தள்ளி அமைந்துள்ள கோத்ரா ரயில் நிலையத்தில் வழக்கம்போல காலை 745 மணிக்கு ரயில் நிற்கிறது. பயணிகள் அந்த ரயிலின் எஸ்-6 பெட்டியில் இருந்து தேனீர் அருந்த இறங்குகிறார்கள். இறங்குகிற வேளையில் பிளாட்பாரத்தில் இருந்த இரண்டு இளைஞர்கள் ஏதோ தகராறு வளர்க்க, மற்றவர்கள் சமாதானப்படுத்தி பயணிகளை ரயிலில் ஏற்றுகிறார்கள். ரயில் மீண்டும் கிளம்பி ஒரு அரை கிலோ மீட்டர் கடப்பதற்குள் யாரோ அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுக்க, ரயில் கிறீச்சிட்டு நிற்கிறது. நின்றதுதான் தாமதம். ரயில் பெட்டிக்கு வெளியில் சுமார் ஆயிரத்து ஐந்நூறிலிருந்து இரண்டாயிரம் பேர் கொண்ட ஒரு கும்பல் அவர்களைச் சுற்றி வளைக்கிறது. இரும்புத் தடிகளாலும் வாள்களாலும் ரயில்

பெட்டிக்குள் இருப்பவர்கள் தாக்கப்படு கிறார்கள். பெட்டிக்குள் எங்கும் கூச்சல், குழப்பம், ஓலங்கள். ஐம்பது வயதுக்கு மேற் பட்ட பெண்களும் குழந்தைகளுமே அதிகம் இருந்த பெட்டி அது. அந்த அமளியில் பெட்டியின் கதவு வழியாகச் சிலர் தப்பிக்க முயல, வெளியில் இருந்தவர்கள் உடனடியாகக் கதவுகளை அடைக்கிறார்கள். கோணிச்சாக் குத் துணி பெட்ரோல் நனைத்து உள்ளே வீசி எறியப்படுகிறது. பெட்ரோல் வெடிகளும் திராவக வெடிகளும் உள்ளே வீசி எறியப்படுகின்றன. இதுபோதாதென்று பெட்டியின் வெளிப்புறத்திலும் பெட்ரோல் வீசி தீ வைக்கப்படுகிறது!

இந்தத் தாக்குதலில் உயிர்பிழைத்த சில ராம்சேவக்குகள் தாங்கள் பஜன்



• அசோக் சிங்கல்

களும் கீர்த்தனைகளும் பாடிக் கொண்டு வந்ததாகவும் இந்தத் தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்றும் சொல்கிறார்கள். இதில் மிகவும் பதைக்க வைக்கும் ஒரு விஷயம் என்னவென்றால் தாக்குதல் ஆரம்பித்த அதே நேரத்தில் வெளியில் இருந்த கும்பலில் ஒரு பகுதி, அந்த ரயிலில் இருந்த பதினைந்துக்கும் மேற்பட்ட இளம் பெண்களை உயிருடன் கடத்தித் தூக்கிச் சென்றது என்ற செய்திதான். மாவட்ட அதி காரிகளைப் பத்திரிகையாளர்கள் இதுகுறித்து கேட்டபோது பெண்கள் கடத்தித் தூக்கிச் செல்லப்பட்டதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆனால் தீவிர புலனாய்வுகளுக்குப் பிறகே இதை உறுதி செய்ய முடியும் என்று கூறினார்கள்.

ஆனால் இன்னொரு தரப்பு என்ன சொல்கிறது என்றால், கோத்ராவைச் சேர்ந்த சிலர் இந்த ரயிலில் பயணம் செய்து வந்ததாகவும் அவர்களை வழியெங்கும் ராம்சேவக்குகள் கேலியும் கிண்டலும் செய்து வந்ததாகவும் அவ்வாறு கிண்டல் செய்யப்பட்ட பயணிகள், கோத்ராவில இறங்கிய உடனே ஆட்களை அழைத்து வந்து தாக்குதல் நடத்தியதாகவும் சொல்லப் படுகிறது. இன்னும் சில பேர், கோத்ராவில் தேனீர் அருந்த இறங்கிய ராம்சேவக்குகள், பிளாட்பாரத்தில் இருக்கும் கடைகளில் பொருள்களை வாங்கி, விட்டுக் காசு தர மறுத்ததால் இந்தத் தாக்குதல் நடைபெற்றது என்றும் சொல்கிறார்கள்.

இதையெல்லாம் வி.எச்.பி. தரப்பு வலுவாக மறுக்கிறது. வி.எச்.பி.யின் முக் கியத் தலைவர்களான அசோக் சிங்கலும், ஆச்சார்ய கிரிராஜும் உடனடியாக குஜராத் விரைந்ததால் வி.எச்.பி. தேசிய இணை செயலாளர் ஓம்கார் பார்வே, கடந்த வியாழன் அன்று டெல்லியில் ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தைக் கூட்டினார். நாம் இது குறித்து அவரிடம் கேட்டபோது இந்தக் குற்றச்சாட்டை மிகவும் தீவிரமாக மறுத்தார். "சரி. அப்படியே வைத்துக் கொள்வோம். அப்படி கிண்டலுக்கு ஆளானவர் கள் எப்படி மிகவும் குறுகிய நேரத் தில் இரண்டாயிரம் பேர்களை ஓரிடத்தில் சேர்க்க முடியும்? இந்தக் குறுகிய நேரத்தில் அவர்களால் எப்படி பெட்ரோல் கேன்களை யும் சேர்க்க முடிந்தது? இது கண்டிப்பாகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல்தான்" என்றார். "ராம்சேவக்குகளைத் தடுத்து நிறுத்துவதிலேயே குறியாக இருக்கும் இந்த அரசு, பாகிஸ்தான் உதவியுடன் நாட்டில் நடக்கும் வன்முறைச் சம்பவங்களைப் பற்றி எந்தக் கவலையும் படவில்லை. இப்போது நடப்பது ராவண ராஜ்யம்தான் என்றார். பிரதமரையும் அத்வானியையும் மிகவும் காட்டமாக விமர்சித்தார். "மக்கள் பிரதிநிதி கள் கூடும் பாராளுமன்ற கட்டடத்தின் மீதே தாக்குதல் நடத்தும் அளவுக்கு இவர்கள் பயங்கரவாதிகளை விட்டு வைத்துள்ளார் கள். ஆனால் கரசேவக்குகளைப் பயங்கர வாதிகளைவிட மிகக் கேவலமாக நடத்து கிறார்கள்" என்று சொன்ன பார்வே, "இந்த

அரசுக்குத் தைரியமிருந்தால் ராமர் கோவில் விவகாரம் குறித்து நாடு தழுவிய அளவில் மக்களிடையே ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்தட்டும். அப்போது தெரியும் யார் மீது தவறு என்று...!'' எனச் சவால் விடுத்தார்.

கோத்ரா சம்பவம் குறித்த அறிக்கை, குஜராத் மாநில அரசிடமிருந்து உடனே மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டது. 27 பிப்ரவரி மாலை நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து, பல மாநிலங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்த உத்தர விடப்பட்டது. குஜராத்தின் பல நகரங்களில் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டது. எந்த ஊருக்கும் ஒட்டு மொத்தமான ரயில் ரிசர்வேஷன்கள் தருவது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. அயோத்தி எல்லையிலேயே கரசேவகர்களை நிறுத்தி வைக்குமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பத்தாயிரத்துக்கும் அதிகமான கரசேவகர்கள் ஏற்கெனவே அயோத்தியில் குவிந்துள்ளனர். அவர்களுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரபடுத்துமாறு உத்தரவுகள் சென்றுள்ளன. கோவில் கட்டுவதற்கான தூண்களை அயோத்திக்கு எடுத்துச் செல்வது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. பல மாநிலங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

இன்னொரு தகவல் பாதுகாப்பு அதிகாரி களை உறைய வைத்திருக்கிறது. கொல்கத்தா வில் நடந்ததைப் போன்ற ஒரு தாக்குதலை அயோத்தியில் இருக்கும் கரசேவகர்களின் மீது நிகழ்த்த ஜெய்ஷ் பயங்கரவாத அமைப்பு திட்டமிட்டுள்ளது என்கிற தகவல்தான் இது! கும்பல்கும்பலாக உள்ளே நுழைபவர்களை எல்லையிலேயே தடுத்து நிறுத்தப்போவதால், ஒவ்வொருவராக அயோத்தியில் நுழைந்து இந்தத் தாக்குதலை நடத்த பயங்கரவாத அமைப்புகள் இட்டமிட்டுள்ளன. மேலதி காரிகள் ராத்தூக்கத்தைத் தொலைத்து விட்டனர்!

ஆஸ்திரேலிய பயணத்தை ரத்து செய்த பிரதமர், ராமர் கோயில் திட்டத்தை ஒத்திப் போடுமாறு கோர, வி.எச்.பி. மறுத்து பிரதம ரிடம் உறுதிமொழி கோரி மிரட்டுகிறது. 'குஜராத்தில் ஹிந்துக்கள் ஏதோ கொஞ்சம் வன்முறை நிகழ்த்திவிட்டார்கள்; அவ்வளவு தான்' என்று கிரிராஜ் கிஷோர் மழுப்ப, குஜராத் அரசு கைகட்டி வேடிக்கை பார்க்க.. இதுவல்லவோ ராவண ராஜ்ஜியம்!



''நம்ம மேல குருவுக்கு நம்பிக்கையே இல்லை...''

''எப்படிச் சொல்றே?''

'' 'ஈயம் பித்தளைக்கு பேரீச்சம் பழம்'னு சப்தம் கேட்டதும் கமண்டலத்தை இறுக்கிப் பிடிக்கிறார் பார்!''

- ஜோசப் காமராஜ்

''பம்மல் கே. சம்பந்தம் படத்துக்கு யார் கூட போனீங்க?''

''என் நண்பர்கள் சிக்கல் ஆர்.சாமிநாதன், வார்ப்பட்டு கே.சிங்கமுத்து, கொட்டாம்பட்டி எஸ்.கதிரேசன் ஆகியோருடன்..''


- உ. ராஜாஜி



''அந்தத் தயாரிப்பாளர் தன்னோட படத்துக்கு பிரம்மாண்டமா பூஜை போட்டாரு! பெரிய ஹீரோவைப் போட்டாரு! மும்பை நடிகையை ஹீரோயினா போட்டாரு! கோடிக் கணக்கிலே முதல் போட்டாரு..!''

''அதான் இப்ப தலையிலே துண்டைப் போட்டுட்டாரா?''

- தஞ்சை தாமு



எட்டாம் வகுப்புத் தமிழ் ஐயா சங்கர சாமியை அமிர்தாவுக்கு மிகவும் பிடிக்கும். அவள் கற்பனையை அவர் மிகவும் ரசித்துப் பாராட்டுவார். அவர் 'பேஷ்' சொல்வதற் காகவே மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டு அமிர்தா கட்டுரை எழுதுவாள். ஒருமுறை 'எனக்குப் பிடித்தது' என்ற தலைப்பில் அவள் மலை பற்றி எழுதி இருந்தாள்.

'மலை எனக்குப் பிடிக்கும். அது, தரை யிலிருந்து திடீரென்று புறப்பட்டு மேல் கிளம்பி நிற்கும். தன் சிறகை அகலமாக விரித்துக்கொண்டு நிற்கிற கருடப் பட்சி மாதிரி இருக்கும் மலை. தூரத்தில் இருந்து பார்க்கும்போது, கறுப்பாக இருட்டைப் பிசைந்து செய்த கல் மரம் மாதிரி தோணும். அதன் மேல், மிதித்து நான் மேல் ஏற வேண்டும். அதன் உச்சிக்குப் போகும் நாள் எப்படி இருக்கும்? எருமை மாட்டில், நிம்மதி யாக லட்சுமிப் பாட்டி மாதிரி உட் கார்ந்துகொண்டு பயணம் போகும் மஞ் சள் குருவி மாதிரி நான் இருப்பேன். எனக்கு ஆறு, கடல் பிடிக் காது. அது படுத்துக் கிடக்



பிரபஞ்சன்

கிறது. மலை, எழுந்து எப்போதும் கறுகறுப்பாய் நிற்கிறது...

அமிர்தா எழுதியதைச் சங்கரசாமி சார் வகுப்பில் படித்துக்காட்டினார். வகுப்பே இவளைப் பார்த்தது. பெருமை யாகவும் இருந்தது. கூச்சமாகவும் இருந்தது. அடுத்த; இரண்டாம் நாளே, தமிழ் சார், நீல அட்டை போட்ட டைரி ஒன்றை அவளுக்குப் பரிசாகத் தந்தார்.

'அமிர்த சரஸ்வதி, எழுது. இதுல, உனக்கு மனசில தோணுவதை எல்லாம் எழுது' என்று அவர் சொன்னார்.

அமிர்தா, பத்தாம் வகுப்பு படிக்கும் போதுதான் மலையை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. பத்து 'ஆ' வகுப்பு மாணவ மாணவிகள், முப்பது மைல் தூரத்திலிருந்த சிம்ம மலைக்கு 'எக்ஸ்கர்ஷன்' போனார்கள். அவள் பங்குக்குப் பதினைந்து ரூபாய் கொடுக் கும்படி ஆயிற்று. சந்தோஷமான செலவு. பஸ்ஸில் மலை ஏறும்போது பிரமிப்பாக இருந்தது. மனசு 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. மூச்சு வேகம் வேகமாக வெளிப் பட்டது. போகும் வழியில், அதுவரை அவள் பார்க்காத பறவைகளை யெல்லாம் அவள் பார்க்க நேர்ந்தது. நீலமும் சிவப்பும் கலந்த உடம்பு கொண்ட பறவை. ஒன்று புரிந்தது. பறவைகள், சமதளத்தைக் காட்டிலும், மலைப்பாங்கான இடங்களையே விரும்பி வசிக்கத் தேர்ந்தெடுக் கின்றன என்பது. போகும் வழியில், சமண முனிவர்கள் தங்கி வாழ்ந்து படுத்த இடங்களை தமிழ் சார் காட்டினார். பறவைகள் மட்டுமல்ல. முனிவர் களுக்கும் மலைதான் பிடித்த இடம். ஓகோ, அப்புறம், பெரிய பெரிய பெயர் தெரியாத மரங்கள். மேகத்தை ஒட்டடை அடித்து வானத்தைச் சுத்தம் செய்யும் மரங்கள். அவளுக்குத் திடுமென மரங்கள் பிடித்துப் போயின. அவை மேல் நோக்கி, மலையைப் போலவே வளர்கின்றன. தரையை இலக்கு வைத்துப் படரும் கொடிகள் அல்ல அவை.

பூசணிக் கொடி அல்ல. பீர்க்கு அல்ல. மரங்கள். அவள் பட்டியல் நீண்டது. பறவை, முனிவர், மரம் மற்றும் அமிர்தா.

கொண்டு வந்ததை எல்லோரும் சாப்பிட்டார்கள். அத்தை, எலுமிச்சைச் சாதம் உருளை வறுவல் பண்ணிக் கொடுத்தாள். மஞ்சள் சோறும், கரும்பழுப்புப் பருப்பும், சாதத்துக்கே அழகு பண்ணின. என்ன அழகான வண்ணக் கலவை. உணவு, வண்ணமயமாய் இருக்க வேணும். நல்லெண்ணெய்யில் மினுங்கிய

சுருண்டு, காற்றை நிறைத்துக்கொண்டிருந்தது.

'ஏ... மல்லிகைப் பூவுடி' என்று கோமதி எகிறிக் குதித்தாள்.

அமிர்தா கொடியின் அருகில் சென்றாள். பாறையின் இறக்கத்தில், பெரும்பரப்பில் தழைத்திருந்தது கொடி. இறக்கத்தில் இருந்த நுணா மரத்தை ஒரு கையால் பிடித்தபடி எட்டிக் கொடியைப் பிடிக்க முயன்றாள்.

'ஏ அமிர்தா... பார்த்து, ஜாக்கிரதை' என்று கத்தினாள் கோமதி.

வாசனை

மினி தொடர் 2



அமிர்தா, கொடியின் ஒரு பகுதியைப் பிடிப்பதில் வெற்றி கண்டாள். ஒரு கையில் கொடியைப் பிடித்து இழுக்கும் அவள் கவனத்தைப் பாறையின் சரிவிறக்கத்தில் நிகழ்ந்த ஒன்று கவர்ந்தது. நிலை குத்தி நின்றாள். ஆணும் பெண்ணும் இருவர். சுற்றுப்புறத்தை அறவே மறந்து, இரு உடல்களும் முயக்கத்தில் இருந்தன. கல்லில் பதிந்திருந்த அவள் பாதங்கள் வெலவெலத்துத் தழைந்தன. காற்றில் மிதந்தது அவள் உடல்.

"என்னடி, என்ன ஆச்சு?" என்று கோமதி தவித்தாள்.

கொடியை நழுவவிட்டுத் திரும்பினாள், அமிர்தா.

'ஏண்டி?' என்று கோமதி கேட்டதற்கு, அவள் பதில் சொல்லவில்லை.

சாதமும், ஆயில் பெயிண்டிங். அதற்கு இசைவாக சிவப்பும் கருமையும் கலந்த வறுவல். உண்டு முடிந்து, அருவி நீரைக் குடிப்பது, பரம சுகம். அவள் சற்று தூரம் நடந்துவரக் கிளம்பினாள். பின்னாடிக் கோமதியும் கலந்துகொண்டாள். இருவர்கள் செடி, மரம், பாறைகளைப் பார்த்தபடி நடந்தார்கள். ஓரிடத்தில் பாறையின் சரிவில் மல்லிகை பூத்திருந்தது. மல்லிகையின் வாசனை, காற்றில், சுருள்முடி மாதிரி சுருண்டு

"பெண், காணாமல் போய் மூணு நாளாச்சு. இன்னும் இப்படி சும்மா இருந்தா எப்படி?" என்றார் முன்னாள் எச்.எம். கிருஷ்ணபிள்ளை.

"நான் என்ன பண்ணட்டும், எச்.எம். சார்? அவள் என்ன குழந்தையா? யாரும் அவளைக் கடத்திவிடவில்லை. அவளாகத்தான் போயிருக்கிறாள். அவளாகப் போனாள். அவளாக வருவாள்" என்றார் ஆராவமுது.

"இப்படிச் சொன்னா எப்படி? இத்தனை வயசு வரைக்கும் தனியாக எங்காச்சும் போயிருக்காளா, குழந்தை...? எந்த பஸ், எந்த திக்கில் போறதுன்னுகூட அவளுக்குத் தெரியாதே! அப்படிப் பொத்திப் பொத்தி அல்லவா

வளர்த்திருக்கிறீர்?'

'ப்ச்... ஒத்தைக் குழந்தை. தாயைப் பார்க்காத குழந்தை. அவளும் என்ன, நான் புத்தி சொல்லும்படியா நடந்துக்கிட்டா? இல்லையே. கற்பூரம்னா அவ. அவளை என் அம்மான்னு நினைச்சேன். எச்.எம். சார் மகன்னு நினைக்கலையே..!

துண்டை வாயில் பொத்திக் கொண்டு விம்மினார் ஆராவமுது. எச்.எம்.மின் கண்களும் கலங்கின.

"எங்க போயிருப்பா, ஏதாவது தட்டுப்படுதா?"

"இல்லையே. என் மூளையே மரத்துப் போயிருக்கு."

எச்.எம். ஆராவமுதை ஆசுவாசப்படுத்தினார். பொறுமையாகச் சொன்னார்.

"ஏன், ஆராவமுது சார்... குழந்தைக்கு ஏதாச்சும் சகவாசம். ஐமீன், லவ் அஃபேர்... அப்படி இப்படி எதாவது?"

கண்கள் நிலை குத்தியபடி எச்.எம்.மைப் பார்த்தார் ஆராவமுது.

"அப்படியும் எதுவும் இல்லையே, எச்.எம். சார். குழந்தைக்கு அதுதான் சந்தோஷம்னு அவங்களைச் சேர்த்து வச்சிருப்பேனே, சார். தனக்கான சந்தோஷத்தைக்கூடத் தேடிக் கொள்ளத் தெரியாத குழந்தைன்னா அவ. பெரிசு பெரிசா, நாம் எல்லாம் சிந்திக்க முடியாத பிரதேசத்துல பேசுவாளே தவிர, இது பற்றிச் சிந்திச்சானான்னு தெரியலை. அந்த ஜன்னலைத் திறக்கவே இல்லை, அவ. பாவம், நாலு மணிக்கு எழுந்து வீடு பெருக்கி கோலம் போட்டு, குளிச்சு, பலகாரம் பண்றது. அப்புறம் வாசல்லே காய் கறி வாங்கி மதியம் சமையல், அப்புறம் காஃபி, கோயில், சமையல்னு வாழ்ந்தவள். இதுக்கெல்லாம் அவளுக்கு ஏது நேரம்?"

உலவியபடி எச்.எம். சொன்னார்.

"எதுக்கும் போலீஸ்ல புகார் எழுதி வைச்சா என்ன? அவாளும் தேடுவா. நமக்கும் உபகாரமா இருக்குமே... என்ன அபிப்ராயம்?"

கூடத்தில் மாட்டியிருந்த, கல்யாணக் கோலத்து அமிர்தாவைப் பார்த்தார் ஆராவமுது. கண்ணை மூடிக் கொண்டு சிறிது நேரம் அமைதி காத்தார்.

"என்னன்னு புகார் பண்றது? குழந்தை, வழி தவறிப் போய்ட்டான்னா? இல்ல, எங்க குழந்தை ஓடிப் போய்ட்டான்னா? சொன்னா, அவ சரித்திரத்தை அவாள் கேட்பா. எவனோடாவது தொடர்பு உண்டான்னு கேட்பா. சட்டம் கேட்கும். அதுக்குப் பல சந்தேகம் வரும். குடையும். புருஷன் ஏன் வரலைம்பா. புருஷன், இருக்கானா, இல்லையாம்பா. பேப்பர்காரா எதையும் விசாரிக்காமே, இளம் பெண் ஓட்டம்னு எழுதுவா. அப்புறம், குழந்தை, எந்த ஊர்லயாவது, ரயில்லயாவது, பஸ்ஸிலேயாவது தட்டுப்பட்டாள்னா, போலீஸ் அவளை ஸ்டேஷன்லே கொண்டு வச்சு விசாரிப்பா. போலீஸ், யோக்யதை என்னமா இருக்குன்னு படிக்கறோமே. என் குழந்தைக்கு இந்த அவமானத்தை நானே தரணுமா? அது சரியா? குழந்தையோட கௌரவத்தைக் காப்பாத்தறது அல்லவா, தகப்பனார் கடமை? சொல்லுங்கோ..!"

எச்.எம். வருத்தம் தொனிக்கும் குரலில் "நீர் சொல்றது ரொம்ப சரி" என்றார்.

ஒரு மார்கழி மாசத்தின்போது, வேதமும் மணிகண்டனும் வாத்தியாரிடம் படிக்க வந்தார்கள். சிறப்புத் தமிழில், இருவருமே சொல்லி வைத்துக்கொண்டு பெயிலானார்கள்.

"உங்களுக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுச்சா?"

"உனக்கு எப்படித் தெரியும்?"

"இரண்டு நாளா பீச்சுல எதுவும் செலவழிக்க மாட்டேன்றீங்களே!"

- அம்பைதேவர்

"படிக்கலாம். பாடம்தானே? பாஸ் பண்ணுகிற அளவுக்குப் படிக்க ஒரு கிழமை போதும்பா. தமிழ், பாடப் புத்தகத்துக்கு வெளியே இருக்கு. வெளியே இருந்து உள்ளே வாருங்கள். புகுங்கள். அதுதான் படிப்பு. அதுதான் ஆன்மிகம். முதல்லே, ஆண்டாளை மனக்குள்ளே வணங்கிக் கொள்ளுங்கோ. அவளும் நமக்குத் தாய்தான். ஏன்னா, இது அவ மாசம். கிருஷ்ணனுக்கும் இதுதான் மாசம்... எங்கே சொல்லுங்கோள்... மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்..!"

வாத்தியார் தொடங்கிவிட்டார். அன்றே அப்போதே. நல்ல நாள் பார்க்க வேண்டாமா என்று கேட்டதற்கு, எது நல்ல நாள் இல்லை என்றார் அவர். என்ன சம்பளம் என்றதற்கு, அது பகவான் கொடுக்கிறான். நீங்கள் அதற்கு அதிகாரி அல்ல என்றார். மனிதப் பிழைகள் ஆயிரம். அதுலே முதல் பிழை எதுன்னு பட்டிணத்து அடிகள் சொல்றார். கல்லாப் பிழை... படிக்காதது. சதா படிக்காதது... அன்

நாடம், அனவரதமும் படிக்காததுதான் முதல் பிழையாம். நமக்குச் சொல்றார் அவர். படியுங்கோன். குப்பைகளையெல்லாம் வெளியே கொட்டிவிட்டுப் படியுங்கோன் என்றார்.

"இது மார்கழி மாசம்டா. முதல் மாதம். அதோட பௌர்ணமி. சந்திரன் ஜொலிக்கிறது. ஐயோ, அதை வீணாக்கிண்டு, ஜனங்கள் உறங்கிறாங்களே... அல்பம்... எழுந்திரு... நீராடுவோம். கிருஷ்ண அருள் பிரவாகத்துல படிவோம். படிந்து ஸ்நானம் பண்ணுவோம். ஞான ஸ்நானம்டா. ஆய்ப்பாடிப் பெண்டுகளே, எழுந்திருந்து வாங்கோ... கிருஷ்ண பகவான் யார் தெரியாதா? நந்த கோபாலன் பையன். எப்படிப்பட்ட நந்தன் அவன்? கூர்மையான வேலைக் கையிலே வைச்சிருக்கான். ஐயோ... புல் தரையைக் கூட மிதிக்கப் பயப்படுகிற பரம சாது. அவனா கொடுந்தொழில் பண்றான்? இல்லை. அசத்தே! குழந்தைக் கண்ணனுக்கு ஈ, எறும்பு



மொய்க்க விடாதபடிக்கு, வேலைக் கையிலே எடுத்தவன். இது பகவான் சேவை. தப்பில்லை. அப்புறம், அந்தப் பயல் கண்ணனோட அம்மா யார்? கண்ணழகி... என்னத்தினாலே, அவள் கண் அழகாச்சு? அழகையே பெத்து, வளர்த்துண்டு, எந்த நேரமும் அழகையே பார்த்துண்டு இருந்தா, பார்க்கிற கண்கள் அழகா ஆகுமோ, ஆகாதோ?"

சலக் சலக் என்ற மெட்டிச் சத்தம் அமைதிக்குச் சுருதி சேர்த்தது. கரிய அடுப்பறையிலிருந்து அமிர்தா ஒரு தட்டில் மூன்று டம்ளரில் காஃபி கொண்டு வந்து அவர்கள் முன்னால் வைத்து அகன்றாள். அகல் விளக்குச் சுடர், ஆள் உயரம் வளர்ந்து, நடந்து வந்து மூலத்தில் கரைந்து போனதாக வேதத்துக்குத் தோன்றியது. அந்த நிமிஷம், அவள், அவன் மனத்தில் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள். காலைவேளைகளில், குளித்த கூந்தலை உலர்த்தியபடி முற்றத்தில் நிற்பாள். வீடு முழுக்கக் கற்பூர வாசனை பரவியதாக அவனுக்குத் தோன்றும்.

"உக்காருங்க... அப்பா பூஜை அறையில் இருக்காங்க."

சிரித்த முகம். சிரிக்காமல் அவளால் பேச முடியாது என்பதாக இருக்கும். சொல்வாள், அடுத்தகணம், தனக்குள் புகுந்து கொள்வாள். பார்வையை எங்கோ, அப்பாலுக்கு அப்பால் செலுத்திவிட்டு நிற்பாள். உலகம், ஊர், தெரு, வீடு, தெருவில் போகும் கீரைக்காரி, வேலியில் மேயும் மாடு, 'கிணிங் கிணிங்' என்று மணி அடித்துக்கொண்டு விரையும் பள்ளிப் பையன்கள் எதுவும் அவள் கவனத்தில் பதியாது. ஏன்? வேதம் ஆச்சரியப்படுவான். இவன் பேசினால், உடன் அவள் பேசுவாள். பொய்க்கூச்சம், வெட்கம் எதுவும் இல்லாமல், இயல்பாகப் பதில் உரைப்பாள். அவளாக எதுவும் பேசினாளா என்றால் இல்லை.

வேதத்துக்கு உறக்கம் வர மறுத்தது. புத்தகத்துள் வைக்கப்பட்ட மயிலிறகு போல, அவள் நினைவு அவனுக்குள் பதிந்து போனது. மணிகண்டன், கடிதம் கொடேன் என்றான். பத்து நாள் அவஸ்தைக்குப் பிறகு, 'சரி, நீயே எழுது' என்றான் வேதம். அவன் எழுதினான்.

'என் கண்ணின் கருமணிக்குள் சிக்கிக் கொண்ட காரிகையே... என் இதயத்துடிப்பின் சப்தம் உனக்குக் கேட்குமானால், அது உன் கால் விரலில் இருந்து எழும் மெட்டி நாதமாகவே இருக்கும். நான் ஒரு ரோஜாவாக மாட்டேனா? உன் கூந்தலில் என்னை நீ சூடிக் கொள்ள மாட்டாயா? உன்னிடம் என் மனத்தில் உள்ளதைச் சுத்தமாகத் துடைத்துச் சொல்ல வேண்டும். நாளை, மாலை ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சரியாக ஆறு மணிக்கு வரவும். உன் நினைவாகவே இருக்கும்...'

ஏதோ யோசித்தான், மணிகண்டன்.

"என்ன?"

"இந்த இடத்தில் ஒரு இருதயம் வரைந்து, அதுக்குள்ளே ஒரு அம்பு நுழையணும். ரெண்டு சிவப்பு ரத்தத் துளி வந்தா தேவலை. சிவப்பு மை பேனா வேணுமே."

"படம் நல்லா இருக்காது. அது வேணாம்."

"உனக்குத் தெரியாது, வேதம். மூர்த்திக்கு இது மாதிரிப் படம் போட்டுதான் லவ் லெட்டர் எழுதிக் கொடுத்தேன். லவ் ஓ.கே ஆச்சு. தெரியுமா? மூர்த்தியை வேணும்னா கேளு." வேதம் கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டான். கையெழுத்துப் போட்டான். ஸ்டைலாக, இங்கிலீஷில் போட்டான். மறுநாள், அமிர்தா. குளியல் முடித்து, குடத்தில் தண்ணீர் முகந்து, அரசடிப் பிள்ளையாரை வணங்கி நின்று, நகர்கையில் அவன் முன் போய் நின்றான். கடிதத்தை நீட்டினான்.

"என்ன?" என்றாள் அமிர்தா.

"வீட்டுக்குப் போய்த் தனியாகப் படிச்சுப்

ஒரு விருந்து... ஒரு மருந்து!



ஒருமுறை வின்ஸ்டன் சர்ச்சில் மிகப் பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். உணவு வகைகள் வெள்ளிப் பாத்திரத்தில் பரிமாறப்பட்டிருந்தன. பெரிய பதவி வகிக்கும் ராணுவ அதிகாரி ஒருவர் இந்த விருந்தின் நினைவாக இருக்கட்டுமே என்று ஒரு வெள்ளி ஸ்பூனை எடுத்து தம் பாக்கெட்டில் போட்டுக் கொண்டார். இதைக் கவனித்து விட்ட சர்ச்சில், தம் பாக்கெட்டில் வெளியே தெரியும்படி ஒரு ஸ்பூனை எடுத்துப் போட்டுக் கொண்டு நேராக அந்த உயர் அதிகாரியிடம் சென்றார். "ஹலோ, நாம இரண்டு பேரும் ஸ்பூனை எடுத்துப் பாக்கெட்டுல வைச்சதை எல்லோரும் பார்த்து விட்டாங்க. அதனால மேஜையில திரும்ப வைச்சிடுவோம்" என்று தம் பாக்கெட்டிலிருந்து ஸ்பூனை எடுத்து மேஜையில் வைத்தார். வேறு வழியில்லாமல் அந்த ராணுவ அதிகாரியும் ஸ்பூனை மேஜையில் வைத்துவிட்டார்.

- சச்சின் சக்திவேல்

பாரு."

''சரி'' என்று கடிதத்தை வாங்கிக் கொண்டு நகர்ந்தான் அமிர்தம், சிரிப்போடு.

அன்று வேதமும், மணிகண்டனும் வகுப்புக்குப் போகவில்லை. கடிதத்தை, அமிர்தா அப்பாவிடம் கொடுக்க மாட்டான் என்பதுக்கு என்ன உத்தரவாதம்?

"என் வேஷ்டி , சொக்காய் எப்படி?" என்றான் வேதம்.

"பிரமாதம்.. சிவாஜி மாதிரி இருக்கே" என்றான் மணிகண்டன்.

வாயில் வேஷ்டியும் கட்டம் போட்ட சட்டையும் போட்டிருந்தான். அமிர்தா, காதலிக்காமல் போக எந்தச் சாத்தியமும் இல்லை. கிராப் வேறு, நெளி நெளியாகப் பம்மி 'புஸ்' என்று இருந்தது. இருந்தாலும் மனசு கிடந்து, மழையில் நனையும் பனை மட்டை மாதிரி சத்தமாய் அடித்துக்கொண்டிருந்தது.

திடுமென நினைத்துக்கொண்டு, ''அனுமார் கோயில்னு சொல்லி இருக்கப் படாது. காமாட்சி அம்மன் கோயில்னு எழுதி இருக்கலாம்'' என்றான் வேதம்.

"ஏன்? அனுமார் வரப்பிரசாதி. தெரிஞ்சுக்கோ"

"இருந்தாலும் பிரம்மச்சாரி. இதெல்லாம் அவருக்குப் பிடிக்குமோ. என்னவோ?"

"இல்லை. தூது போன சாமி அவர். மனுஷான் மனசு அவருக்குத் தெரியும். நம்ம பத்தாம் கிளாஸ் 'பி'யில் படிச்சாளே, அபிராமி, அவ, அனுமாருக்கு வடை மாலை சாத்தி, கல்யாணம் ஆகி, அமெரிக்காவிலே செட்டில் ஆயிட்டா. இல்லேன்னா, அந்த அழுக்கு மூட்டைக்கு இந்த ஜென்மத்துலே கல்யாணம் நடக்குமா?"

"அதுவும் சரிதான்."

மறுநாள், வெயில் தாழும் முன்பாகவே வேதமும், மணிகண்டனும் அனுமார் கோயிலுக்குப் போய் விட்டார்கள். மடைப்பள்ளிக்குக் கட்டடம் பழுது பார்க்க மண் கொட்டியிருந்தது. வேதம், மண்ணில் உட்கார்ந்து கொண்டான். சரியாக ஆறு அடிக்க, அஞ்சு நிமிஷம் முன்பு, மணி தனியாக ஆழ்வார் மண்டபத்துக்குப் போய்விட வேண்டியது என்பது திட்டம்.

ஆறே முக்காலுக்கு வந்தான், அமிர்தம்.

எப்போதும் அவனுக்குப் பிடித்த நீலத் தாவணியும் மஞ்சள் பாவாடையில் இருந்தாள். அவளைக் கண்டதும், மணிகண்டன் எழ முயன்றான். கோயிலுக்குள் நுழையும் போதே அவர்கள் இருவரையும் அமிர்தா பார்த்துவிட்டிருந்தாள். மணிகண்டனிடம், "நீங்கள் இருங்கள்" என்றாள்.

மண் குவியலின் ஒரு ஓரமாக அவள் அமர்ந்தாள். அங்கிருந்து அனுமார் ஸன்னிதி தெரிந்தது.

அதைப் பார்த்தபடிச் சொன்னாள் அமிர்தா.

"படிச்சேன், எனக்கு இதுலே விருப்பம் இல்லை. இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்னும் புரியலை. வேணாம்... இதுக்கும், நீங்க படிக்க வர்றதுக்கும் சம்பந்தம் இல்லை. வழக்கம் போல படிக்க வரணும். அப்பாகூட, ஏன் வரலைன்னு கேட்டார். வாங்க..

அவள் சென்று, பல நிமிஷங்களுக்குப் பிறகே, வேதத்துக்கு உறைத்தது.

அடுத்த நாள் இவர்கள் படிக்கப் போகும் போது வாத்தியார், "எங்கே ரெண்டு நாளாகக் காணலை...?" என்றார்.

"உடம்பு சரியில்லை" என்றான்.

''மருந்து சாப்டியோ? உடம்பைக் கவனிச்சிக்கோ. உடம்பு போனா உயிர் போகும்பார் திருமூலர்... சரியா?"

"சரிங்க ஐயா" என்றான் வேதம்.

மெட்டிச் சங்கீதம் கேட்டது. மூன்று பேருக்கும் காஃபி கொண்டு வந்து வைத்தாள் அமிர்தம். வேதத்தைப் பார்த்துச் சிநேகம் தோன்ற சிரித்தாள். (தொடரும்

“அவருடைய தைரியமான கருத்துகளைப் பாருங்கள்”

சர்வதேச இந்திய இலக்கிய விழா ஒன்று 'AT Home in the World' என்ற பெயரில் நடைபெற்றது. நோபல் பரிசு பெற்ற நைபாலும் இதில் கலந்துகொண்டார். விக்ரம் சேத், அமிதவ் கோஷ், வேத் மேத்தா, பைக்கோ ஐயர் போன்றவர்களுடன் தமிழ் எழுத்தாளர் அசோகமித்ரனும் கலந்து கொண்டார். அவருடன் ஒரு நேர்காணல்.

எதற்காக இப்போது இந்த விழா? எந்த அமைப்பு இதை ஏற்பாடு செய்திருந்தது?

நைபாலின் தாத்தா இந்தியர். அந்த விதத்தில் நைபாலுக்குக் கிடைத்த நோபல் பரிசு ஒரு விதத்தில் இந்தியாவுக்குக் கிடைத்ததாகப் பொருள். எனவே அவரைக் கௌரவிப்பதற்காக இந்தக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்திய கலாசாரக் கூட்டமைப்பின் (ICCR) இயக்குனர் என்ற முறையில் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தவர், மேற்கு வங்காள மாநிலத்தைச் சேர்ந்த ஹிமாச்சல் சோம். இலக்கியத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். விரைவில் இத்தாலி நாட்டுக்கு இந்திய தூதராகச் செல்லவிருக்கும் அவரது ஆர்வம் குறிப்பிடத்தக்கது.

கருத்தரங்குக்கு நைபாலின் இங்கிலாந்து நண்பர்களும், அவரது பிரசுர ஏஜெண்டும் வந்திருந்தனர். அனந்த மூர்த்தி, பாலச்சந்தர் நிமாடே போன்ற பிரபல எழுத்தாளர்களுடன் கலந்துரையாட முடிந்தது.

இதில் கலந்து கொண்ட எழுத்தாளர்களை எந்த அடிப்படையில் தேர்ந்தெடுத்தனர்?

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் மொழி வாரியாக எழுத்தாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. கருத்தரங்கம் முழுவதுமே ஆங்கில மொழியில் நடைபெற்றதால், அந்த மொழியிலும் கருத்து பரிமாறிக் கொள்ளும் அளவுக்குப் பரிச்சயம் உள்ளவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். கலந்து கொண்டவர்களில் பாதி பேர் டெல்லியைச் சேர்ந்தவர்கள்.





முதல் இரண்டு நாள் கருத்தரங்கம் ராஜஸ்தானில் உள்ள நீம்ராணா என்ற இடத்தில் நடைபெற்றது. சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களுக்கு மட்டுமே இதற்கு அனுமதி. பிறகு டெல்லியில் மூன்று நாள் கருத்தரங்கம். பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாகவே இருந்தன என்றாலும் பத்திரிகையாளர்கள் போன்ற பிற பிரிவினரும் அனுமதிக்கப்பட்டனர்.

குறிப்பாக ராஜஸ்தானில் உள்ள நீம்ராணாவைத் தேர்ந்தெடுத்ததற்கு ஏதாவது காரணம் உண்டா?



"என்னது, பொண்ணைப் பாடச் சொன்னவுடனேயே, "உன்னை நான் சந்தித்தேன். நீ ஆயிரத்தில் ஒருவன்'னு பாட ஆரம்பிச்சுட்டாளே?"

"இதுவரைக்கும் 999 பேர் அவளைப் பெண் பார்த்துப் போயிட்டாங்க என்பதை அப்படி சிம்பாலிக்கா சொல்றா!"

- மல்லிகை மன்னன்

இந்தியாவின் சரித்திரச் சின்னமொன்றில் அமர்ந்து கருத்து பரிமாறிக் கொள்ளும் அனுபவம் எங்களுக்கு இருக்கட்டுமே என்பதற்காகத்தான். நீம்ராணாவில் உள்ள கோட்டை ஒன்று ஹோட்டலாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்குதான் நாங்கள் தங்கியதும், கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றதும். அந்த இடத்தை அடைவதே வித்தியாசமான அனுபவம். பேருந்தில் முக்கிய சாலைவரைதான் செல்ல முடியும். அதற்குப் பிறகு சின்னச் சின்ன கார்களில் பயணம். அதற்குப் பிறகு கணிசமான தூரம் நடந்துதான் செல்ல வேண்டும். காரணம் நிறைய படிக்கட்டுகளை இடையில் கடக்க வேண்டியிருந்தது.

இந்த விழாவில் உங்கள் அனுபவம் எப்படி அமைந்தது?

இந்திய மொழிகளில் கதைகள் பிரசுரமாவதில் என்னென்ன கஷ்டங்கள் உள்ளன என்பது குறித்துப் பேசிக் கொண்டோம். எம்.டி. வாசுதேவன் நாயர் 'சின்னஞ்சிறு புன்னகை' என்ற தமது படத்துக்கு விருது கிடைத்ததாகச் சொன்னார். கொஞ்ச காலம் திரைப்படத்தின் பக்கம் போகாமல் இருந்த அவர் விரைவில் ஒரு குறைந்த பட்ஜெட் படமொன்றைத் தயாரிக்கவிருப்பதாகக் கூறினார். பெரும்பாலான இந்திய ஆங்கில எழுத்தாளர்கள் குறிப்பிடத் தகுந்த ஆழமான எண்ணங்கள் இல்லாதவர்களாக இருந்தார்கள். அது அவர்களது குற்றமல்ல.

ஆங்கிலப் பத்திரிகைகள் இந்த மாநாட்டுக்கு ஆதரவாக இல்லை. இந்திய மொழி எழுத்தாளர்களின் பாதுகாவலர்கள் போல் இவர்கள் தங்களை எண்ணிக் கொண்டார்கள். இவர்களில் பலரும் இந்திய இலக்கியங்களையும் ஆழமாகப் படித்தவர்கள் இல்லை. (என்னைக்கூட 'கவிஞர்' என்று ஒரு பத்திரிகையில் அறிமுகப்படுத்தியிருந்தார்கள்!). இவர்களது இந்தப் போக்கு எதிர்மறை விளைவைத்தான் உண்டு பண்ணியது.

நைபாலின் எழுத்துக்கள் குறித்த உங்கள் கருத்து என்ன? அவர் எந்த அளவு 'இந்தியராக' இருக்கிறார்?

அவருடைய எழுத்துக்கள் மகத்தானவை என்று நான் கருதவில்லை. ஆனால் அவருடையது நல்ல எழுத்து. தமது கடந்த காலத்தைப் பற்றி அவர் பெருமைப்படுகிறார். அவரிடம் பல நல்ல குணாதிசியங்கள் இருப்பதை அறிந்துகொண்டேன். அப்படியிருக்க அவரைக் கோபக்காரர் என்று மட்டுமே வரிந்துகட்டிக் கொண்டு ஆங்கிலப் பத்திரிகைகள் முத்திரை குத்தியதில் எனக்குச் சம்மதமில்லை.

திருமணம் போன்ற விஷயங்களில் நைபாலின் மேற்கத்திய சிந்தனைகள் நமக்கு அதிர்ச்சிகரமாக இருக்கலாம். ஆனால், அவர் கூறிய பல நல்ல விஷயங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். 'மதமாற்றம் கூடாது. அதனால் ஆன்மா ஒழிந்துவிடும். கலாசாரம் சிதைந்துவிடும்' என்றெல்லாம் தைரியமாகக் கூறியவர் அவர்.

எந்த அளவு அவர் இந்தியராக இருக்கிறார் என்று கேட்பதே சரியில்லை. அவரது வேர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவை. அவர் வாழ்ந்தது பிற கண்டங்களில். அவரது மனைவி பாகிஸ்தானைச் சேர்ந்தவர். அவருடைய 'இந்தியத் தன்மையை'க் கொண்டு அவரை நாம் மதிப்பிடக் கூடாது. அவர் எழுத்தை வைத்துதான் மதிப்பிட வேண்டும்.

'காலனி ஆதிக்கத்தைப் பற்றி எதற்கு திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கோபப்பட்டது, வெளிநடப்பு என்றெல்லாம் அமைந்த நைபாலின் செயல்பாடுகள் குறித்து பல விமர்சனங்கள் எழுந்துள்ளனவே!

ஒரே சமயத்தில் மூன்று நான்கு கூட்டங்கள், பத்து பதினைந்து அமர்வுகள் என்று நடத்திவிட்டு எல்லாவற்றிலும் நைபால் கலந்து கொண்டு கௌரவிக்க வேண்டுமென்றால்? எழுபது வயதுக்காரரை எவ்வளவுதான் இம்சைப்படுத்துவது? அதுவும் நோபல் பரிசு பெற்ற பிறகு அவரை எல்லோருமே துளைத்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவரிடத்தில் நான் இருந்தால் அப்படி கோபப்பட்டிருக்க மாட்டேன். ஆனால் அதே சமயம் அதை இந்த அளவுக்குப் பத்திரிகைகள் மிகைப்படுத்தியிருக்க வேண்டாம்.

- ஜி.எஸ்.எஸ்



வேலூர் நகர ஃபாலோ அப்

கடந்த இருபது ஆண்டு காலமாக தி.மு.க. தக்க வைத்திருந்த வேலூர் நகரசபையை, இம்முறை அ.தி.மு.க. கைப்பற்றிக் கொண்டுள்ளது. 'செயல்படாத நகராட்சி' என்று வர்ணிக்கப்படும்



• கீதா இளங்கோவன்



கணவர் பிடியில் வேலூர் நகரசபைத் தலைவர்?

வேலூர், நாற்பத்தெட்டு வார்டுகளைக் கொண்ட தமிழகத்தின் மிகப்பெரிய நகர்சபை. இன்று முப்பது இலட்சம் மக்கள் தொகை கொண்ட வேலூரின், குடிநீர் வினியோகக் குழாய்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் நிர்மாணிக்கப்பட்டவை. இந்தக் குழாய்களை மாற்றுவதற்கே நகரசபை முடிவு செய்யாதபோது, விரிவு படுத்துதல் பற்றி கனவு மட்டும்தான் காண முடியும் என்கிறார்கள் வேலூர் மக்கள். வார்டு விசிட் செய்யாதது, பன்றிகள் ஒழிப்பில் அக்கறை காட்டாதது, தி.மு.க. ஆட்சியில் தேர்வு செய்யப்பட்ட இடத்தை விட்டுவிட்டு குருத்தோப்புக்கு புதிய பேருந்து நிலையத்தை மாற்ற முயற்சி எடுப்பது, கணவரின் உத்தரவுகளை தலைமேற்கொண்டு செயல்படுவது உட்பட, அ.தி.மு.க. நகரசபைத் தலைவர் கீதா இளங்கோவன் மீது பல்வேறு

குற்றச்சாட்டுகள். இவற்றுக்கு அவர் தரும் பதில் என்ன?

"நாங்கள் பொறுப்பேற்ற பிறகு வேலூரில் தண்ணீர்ப் பஞ்சம் என்பதே இடையாது. பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர்விட்ட காலமெல்லாம் போய் இன்று, இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் விடுகிறோம். தினசரி தண்ணீர் விடும் அளவுக்கு ஓட்டேரியின் தண்ணீர் அளவு கணிசமாக உள்ளது. தினசரி விட்டால் தண்ணீரை மக்கள் வீணாக்கி விடுவார்கள். வேலூரின் இன்றைய மக்கள் தொகைக்கு ஏற்ப குடிநீர் குழாய் வசதியை விரிவுபடுத்தவும், பழைய குழாய்களைப் புதுப்பிக்கவும் நூற்று முப்பத்தைந்து இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தப் பணிகளைத் தொடங்கிவிடுவோம். இது தவிர ஓட்டேரியில் ரூபாய் ஆறு இலட்சம் செலவில் ஆழ்குழாய்க் கிணறு ஒன்று அமைத்திருக்கிறோம். தேவைப்பட்டால் மேலும் ஆழ்குழாய்க் கிணறுகள் இரண்டை அமைக்கும் உத்தேசம் உள்ளது. எனவே இனி வேலூரில் தண்ணீர்ப் பிரச்னை என்ற பேச்சுக்கே இடமில்லை.



• சுதந்திரமாகத் திரியும் பன்றிகள்...



"அடுத்து பன்றிகள் ஒழிப்பு பிரச்னை. பன்றிகளைச் சுட்டுத்தான் பிடிக்க வேண்டும். அதற்கு மாவட்ட ஆட்சியர்தான் அனுமதி வழங்க வேண்டும். அதற்கான முயற்சிகளைத் தீவிரமாக முடுக்கிவிட்டுள்ளோம். இது ஒருபுறம் இருக்க, எக்ஸ்னோரா உதவியுடன் ஒவ்வொரு வீட்டுக்கும் பச்சை மற்றும் சிவப்பு நிறங்களில் இரு பிளாஸ்டிக் பக்கெட்களைக் கொடுத்து குப்பைகளைச் சேகரிக்கும் பணியைத் தொடங்கியிருக்கிறோம். இந்த திட்டத்தின்படி காய்கறிகள், மிஞ்சிய உணவுப் பொருட்களை ஒரு பக்கெட்டிலும், கண்ணாடி, பிளாஸ்டிக் போன்றவற்றை இன்னொரு பக்கெட்டிலும் போடச் சொல்கிறோம். தினசரி காலையில் மூன்று சக்கர கமை வண்டியில் வரும் துப்புறவு ஊழியரிடம் குப்பைகளைக் கொடுத்துவிட வேண்டும். அவர் அந்தந்த வார்டுக்கென்று உள்ள கம்போஸ்ட் யார்டில் குப்பைகளைப் புதைத்துவிடுவார். இவ்வாறு செய்வதால் பன்றிகளுக்குக் கிடைக்கும் உணவுப் பொருள்கள் தடைபடுவதோடு, குடியிருப்புப் பகுதிக்கு பன்றிகள் வருவதும் நாளடைவில் நின்று போய்விடும். இந்த முயற்சியை முதல் கட்டமாக தங்கமணி ஆனந்தன் வார்டிலிருந்து தொடங்கியிருக்கிறோம். எல்லா வார்டுகளுக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தத்

திட்டத்தை எக்ஸ்னோராவுடன் இணைந்து விரிவுபடுத்த இருக்கிறோம். அதன்பிறகு நகர எல்லைக்குள் பன்றிகள் நடமாட்டம் இருக்காது என்று உறுதியாகச் சொல்லுவேன்.

சூழ்நிலையில், விலை குறைவான இடம் என்றுதான் குருத்தோப்பைத் தேர்வு செய்தோம். மக்களுக்கு அந்த இடம் வசதிப்படாது என்று தெரிந்தால் அதை மக்கள் மன்றத்தின் முடிவுக்கே விட்டுவிடுவோம். மக்களுக்கு வசதியான இடத்தில்தான் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும். இதில் அரசியல் இருக்காது."

"பதவியேற்று மூன்றுமாத காலமே ஆகியுள்ள நிலையில், நகராட்சி அலுவலகப் பணிகளைக் கற்றுக் கொள்ளவே எனக்கு இரண்டு மாத காலம் பிடித்தது. இதனால் வார்டு விசிட் செய்ய முடியவில்லை. இதை மக்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது வார்டு உறுப்பினருடன் பாரபட்சம் இல்லாமல் ஒவ்வொரு வார்டாகச் சென்று மக்கள் கோரும் உடனடிப் பிரச்னைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதுவரை நகரில் உள்ள தொண்ணூறு விழுக்காடு தெருவிளக்குகளைப் பழுது பார்த்து முடித்து விட்டோம்.

• வேலூர் ஓட்டேரி இன்று...



"வேலூர் பஸ் நிலையச் சுற்றுச் சுவருக்கு ரூபாய் ஐந்து இலட்சம் ஒதுக்கீடு செய்தது நியாயமானதுதான். இந்தப் பணியை தி.மு.க.வைச் சேர்ந்தவர் ஒப்பந்தம் எடுத்துச் செய்கிறார் என்பதற்காக இதைப் பிரச்னையாக்குகிறார்கள். எனது கணவர் இருபது ஆண்டுகாலமாக அரசியலில் இருப்பவர். தொடக்கத்தில் அவரிடம் ஆலோசனைகள் பெற்றுக் கொண்டது உண்மை. அவர் என்னை இயக்குவதாகச் சொல்வது அபாண்டம். காரணம் நான் முதுகலைப்பட்டதாரி. ஆசிரியர் பணியை உதறிவிட்டுத்தான் அரசியலுக்கு வந்தேன். எனக்குச் சுய அறிவு உண்டு" என்கிறார் கீதா இளங்கோவன்.

"புதிய பேருந்து நிலையத்தை, மூடப்பட்ட கூட்டுறவு பழத் தொழிற்சாலை வளாகத்துக்கு மாற்றலாம் என்றால் பத்தொன்பது கோடி ரூபாய் கேட்கிறார்கள். அவ்வளவு பெரிய தொகை நகராட்சியிடம் இல்லை. நகராட்சி ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கவே திணறிக் கொண்டிருக்கும்

சந்திப்பு : **ஜெயந்த்**


படங்கள் : **ராஜன்**



மேஷம் : உங்க மதிப்பு அந்தஸ்து, கௌரவமெல்லாம் உயரப் போகுது. மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் ஏற்படும். மத்தவங்க ஆச்சரியப்படும்படி ஏதாவது காரியம் பண்ணுவீங்க. குடும்பத்துல சலசலப்பு வரும். இதனால மனம் கலங்கிடாதிங்க. எதிர்பாராத அதிர்ஷ்டம் தேடி வரும். அரசியல்வாதிகளுக்கும் புகழ், பாராட்டு கூடும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றி வாய்ப்பு. முன்ன பின்ன தெரியாதவங்ககிட்ட எச்சரிக்கையா பழகுங்க. எதிலேயும் அவசரம், பதற்றம் வேண்டாம்.



ரிஷபம் : நீங்களே ஆச்சரியப்படற மாதிரி உங்க பேச்சில் இனிமையும், திறமையும் அதிகரிக்கும். வீட்ல சுபகாரியம் நடக்க சந்தர்ப்பம் வரும். எதிர்ப்புகள் குறையும், வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரும். மருத்துவம் இரசாயனம் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. வேலை இல்லாம தவிச்சிட்டு இருந்தவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும். சிலருக்கு பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். அலைச்சலும், உழைப்பும் அதிகரிக்கும். பயணத்தில் பாதுகாப்பு அவசியம்.




மிதுனம் : மனசுல உற்சாகம் துள்ளிக் குதிக்கும். குடும்பத்துல குதூகலத்துக்குப் பஞ்சமிருக்காது. முன்னேற்றத்துக்கான நல்ல தகவல் வந்து சேரும். பேச்சாற்றல் கூடும். பத்திரிகை, ஓவியம் துறைகளைச் சேர்ந்தவர்கள் எண்ணம் நிறைவேறும். பெண்கள் சந்தோஷத்துல திக்குமுக்காடுவாங்க. கேளிக்கை, விருந்து, உல்லாசம்னு பங்கு கொள்ள வாய்ப்பிருக்கு. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வெளிநாட்டுத் தொடர்போடு வியாபாரம் பண்றவங்க எச்சரிக்கையா இருக்கணும்.



கடகம் : இந்த வாரம் எந்தக் காரியத்தையும் தலைகீழா நின்னாவது முடிச்சிடுவீங்க. விளையாட்டு விநோதங்கள்ல வெற்றி பெறலாம். மனை, நிலம், வாகனம், வீடு வாங்க வாய்ப்பிருக்கு. சிவப்பு பொருள் லாபம் தரும். பொறியியல் சட்டம், காவல், இராணுவம் போன்றத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு பாராட்டு உண்டு. கொடுக்கல், வாங்கல் துறைகளில் அதிக பலன் எதிர்பார்க்க முடியாது. சூரியன் எட்டில் என்பதால் உஷ்ண சம்பந்தமான பாதிப்பு ஏற்படலாம். உஷார்.



சிம்மம் : உங்க புத்திசாலித்தனமான செயல்பாடுகள் வெளிப்படும். வியாபாரத்துல முன்னேற்றம் காணலாம். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரும். எழுத்து, கணிதம், விஞ்ஞானம், மருத்துவத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டு குவியும். பொருளாதார நிலையில வளர்ச்சி காணலாம். குடும்பத்துல சுபகாரியம் நடக்க வாய்ப்பிருக்கு. தெய்வப் பணிகளிலும், புனிதப் பணிகளிலும் ஈடுபாடு அதிகரிக்கும். எதிலும் அவசரம், பதற்றம் வேண்டாம்.



கன்னி : அரசியல்வாதிகளின் கொள்கைகள் திட்டங்களுக்கு வரவேற்பும் ஆதரவும் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் அளவோடு உதவுவார்கள். நிதானம் அவசியம். கணவன் மனைவிக்குள்ள இருந்த பிரச்னைகள் விலகி சுமுகமாகும். விட்டுக் கொடுத்துப் பழகுறது நல்லது. சிலருக்கு எதிர்பாராத இடத்துக்கு இடமாற்றம் வரும். கடல் வாணிபம் பண்றவங்களுக்கு லாபம் உண்டு. தந்தை உடல் நலன்ல கவனம் அவசியம். குடும்பத்துல சின்ன சின்ன பிரச்னைகள் ஏற்பட்டு விலகும்.

நடக்குமென்பார், நடக்கும்!

துலாம் : இதுவரை பூட்டி வச்சிருந்த எண்ணங்கள், திட்டங்களுக்கு இது நல்ல நேரம். ஒரு சில ஈடேறும். பொருளாதார நிலை, பண விஷயம் அபிவிருத்தி அடையும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். நண்பர்கள், உறவினர்கள் உதவ முன் வருவார்கள். பண விஷயத்துக்குப் பஞ்சமில்லை. புதிய சொத்துக்கள் வாங்க வாய்ப்பிருக்கு. சினிமா, நாடகம், சங்கீதம் போன்றத் துறைகளைச் சேர்ந்தவங்க நல்ல பயன் இருக்கு. சனி, ராகு, கேது சஞ்சாரம் அனுகூலமாக இல்லாததால் சிறுசிறு இடர்பாடுகள் தொல்லைகள் ஏற்படும்.

விருச்சிகம் : உங்க துணிச்சலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உடல் நலம் சீராக இருக்கும். எதிர்ப்புகள் குறையும். எடுத்த காரியத்துல வெற்றி காணலாம். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான சூழ்நிலை உருவாகும். வழக்கு விவகாரங்கள்ல வெற்றி காணலாம். பெண்கள் புதுசா ட்ரெஸ், நகைகள் வாங்க வாய்ப்பிருக்கு. வியாபாரிகள் அகல கால் வைக்க வேண்டாம். சிறு பிரச்னைகள் தொந்தரவு வரலாம். பயணம் தவிர்ப்பது நல்லது.

தனுசு : எடுத்த காரியங்களை எப்பாடுபட்டாவது நிறைவேத்திடுவீங்க. அரசு விவகாரங்கள்ல அனுகூலமான போக்கு தென்படும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். பொருளாதார நிலை திருப்தியா இருக்கும். பண நடமாட்டம் தாராளமா இருக்கும். வேலை இல்லாம இருந்தவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வந்து சேரும். புதிய துறையில் முதலீடு செய்ய சிலருக்கு சந்தர்ப்பம் வரும்.

அக்னிசர்மா பக்கம்

மார்ச் 6 முதல் 12 வரை

விருச்சிக ராசிக்காரரான மீனாவுக்கு செழிப்பான சூழ்நிலையாமே!



மகரம் : பணம் கொடுக்கல் வாங்கல் பண்றவங்க ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுங்க. மக்களால பிரச்னை, மனக்கவலை உண்டாகும். ஊரைச் சுற்றினாலும் உடல் நலத்துல கவனம் வையுங்க. வயிறு, தலை சம்பந்தப்பட்ட நோய்கள் வரலாம். மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். பார்ட்னர்ஷிப்ல தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. செலவுகள் எகிறும். மத்தவங்க கிட்ட பேசும்போது பேச்சில் இனிமை வேணும். அதிலயும் அவசரம், பதற்றம் வேண்டாம்.

கும்பம் : சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு பரிசுடன் விருதுகள் கிடைக்க வாய்ப்பிருக்கு. மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். மத்தவங்க ஆச்சர்யப்படும்படி ஏதாவது சாதனை புரிவாங்க. பெண்கள் பார்ட்டி, பங்ஷன்னு சுத்தறதுக்கு சான்ஸ் இருக்கு. பக்திமார்க்கத்துலயும், ஞானமார்க்கத்திலயும் ஈடுபாடு அதிகரிக்கும். நெருங்கிய உறவினரையோ நண்பரையோ பிரிய நேரிடலாம். வீடு, மனை நிலம் இந்த வகையில் லாபம் வரும். போட்டி பந்தயங்களில் வெற்றி காணலாம்.

மீனம் : இந்த வாரம் பொருள் வரவு தூள் பறக்கும். குடும்பத்துல மகிழ்ச்சி குதூகலம் நிறைந்திருக்கும். பயணத்தால அனுகூலம் உண்டாகும். கலைத் துறையைச் சேர்ந்தவங்க வெற்றி நடை போடுவாங்க. நண்பர்கள், உறவினர்கள் முக்கியமானவர்கள் தொடர்பு பயன்படும். எதிர்ப்புகள் குறையும். எதிரிகள் ஓடி ஒளிவாங்க. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்கெல்லாம் இந்த வாரம் சிறப்பானது. அரசியல்வாதிகள், ஆன்மிகத்துல உள்ளவங்க உஷாரா இருப்பது நல்லது.



"அந்த விஷயத்தில் நான் பாட்டிதான்!"

நடிகை ஷோபனா நடித்த 'மித்ர, மை பிரெண்ட்' படம் வெளியாகியுள்ளது. சமீபத்தில், ஜாகிர் உசைன், மாண்டலின் ஸ்ரீனிவாஸ், ஹரித்துவாரமங்கலம் ஏ.கே. பழனிவேல் காம்பினேஷனில், நடத்திய நாட்டிய நிகழ்ச்சிக்கு ஒரே பாராட்டு மழை! ஷோபனாவின் கலார்ப்பணா நாட்டியப் பள்ளியில் சந்தித்து 'ஹலோ' சொன்னோம்!

"சினிமாவில் உங்களுக்கு ஏன் ஓர் இடைவெளி ஏற்பட்டுவிட்டது?"

"ஒன்பது வயதில் நடிக்க வந்த நான் முன்னூறு படங்கள் முடித்துவிட்டேன். சினிமா என்பது இங்கே முழுக்க முழுக்க ஒரு பொழுதுபோக்கு சாதனம். அதில் பங்கு கொள்வது என்பது சந்தோஷமான விஷயம் தான்! ஆனால் வாழ்க்கை என்பது மாற்றங்களின் தொடர்ச்சியாயிற்றே! பத்து வருடங்களுக்கு முன்புவரை மரத்தைச் சுற்றி டூயட் பாடுவது எனக்குப் பிடித்திருந்தது. அதன்பின், சலிப்பு ஏற்பட்டுவிட்டது. ஒதுங்கிக் கொண்டேன். சவாலான பாத்திரங்கள், என் மனத்துக்கு திருப்திகரமான முறையில் வந்தால் மட்டுமே நடிப்பது என்று தீர்மானித்துக் கொண்டதால் தான் நீங்கள் குறிப்பிட்ட இடைவெளி.

பணம் கிடைக்கிறது என்பதற்காக, மட்டும் எல்லா சினிமா, டீ.வி. வாய்ப்புகளையும் ஒப்புக் கொள்ள இஷ்டமில்லை. கிரியேடிவ்வாக ஏதாவது செய்ய வேண்டும் என்பதே என் ஆசை.

"அதனால்தான், சமீபத்திய ஜாகிர் உசைன் நிகழ்ச்சியைப் போன்ற நடன நிகழ்ச்சிகளில் இறங்கிவிட்டீர்களா?"


"ஆமாம்! ஜாகிர் உசைன் நிகழ்ச்சி போல, ஏற்கெனவே பல புதுமையான நடன நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறேன். சமஸ்கிருதம் அல்லது தெலுங்கில் உள்ள சாஹித்தியங்களை நடன அசைவுகள் மூலம் வெளிப்படுத்துவதே பெரிய சவால்தான். வயலினிலோ, மாண்டலினிலோ, சாஹித்தியங்களை வாசிக்க, அதற்குத் தபலாவும், தவிலும் பக்கவாத்தியமாக இருக்க, ஆடியன்ஸுடன் கம்யூனிகேட் பண்ணுகிறபோதுதான் கற்பனை தளம் இன்னும் செழிப்படைகிறது. தவிர பெரிய அளவில், பிரபலங்கள் இணைந்து, இதுபோன்ற புதுமையான நிகழ்ச்சிகள் செய்கிறபோது சமூக அமைப்புகளுக்கு நிதி திரட்டி உதவுகிற திருப்தியும் கிடைக்கிறது..."

"வயதில் இளமையாய் இருந்தாலும், பரதநாட்டியத்தில் உங்களை பாட்டி என்று சொல்லிப் பாராட்டலாமா?"

"குரு சித்ராவிஸ்வேஸ்வரனிடம் பரதம் கற்றுக் கொண்ட மாணவி நான். நான் நடனம் பயின்று ஒரு நடன ஆசிரியையாக, மாணவிகளுக்குப் பரதம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். இன்று என் மாணவிகள், நடன ஆசிரியைகளாகி, தங்கள் மாணவிகளுக்கு நடனம் சொல்லிக் கொடுக்கிறார்கள். அந்த விதத்தில் பார்த்தால் பாட்டியாகிவிட்டேன் என்று சொல்லலாம்!"

- மானஸா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)





*ஒவ்வொரு 10 கிராமிலும்

வழங்குகிறோம் ஜண்டு கோல்டன் மஞ்சள் நிற பாம். தலைவலியைப் போக்கிடும், ரூ. 2.44* சேமித்திடும்.

இப்போது ஜண்டு கோல்டன் மஞ்சள் நிற **10 கிராம்** பாமின் விலை **ரூ. 12/-**. அதே சமயம் மற்ற மஞ்சள் நிற **9 கிராம்** பாம்கள் உங்களுக்குக் கிடைக்கிறது **ரூ. 13/-** என்ற விலையில். ஜண்டு கோல்டன் பாம் தலைவலியைப் போக்குவதோடு உங்கள் செலவையும் குறைத்திடும். இது மட்டுமல்ல, இதை வழங்குவது ஜண்டு நிறுவனம்.

வருகை தரவும் : **www.zanduayurveda.com**

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

HOTEL
DARLING RESIDENCY
(Centrally Air - Conditioned)



35 Well Furnished Luxurious Rooms
Multi - Cuisine Roof Garden Restaurant
Exclusive Vegetarian A/c Restaurant
Spacious Car Parking
Elegant Permit Room

3 Conference Hall to accommodate 50 to 350 Persons
Business Centre
ISD & Internet Facilities
Credit Cards & Foreign Currency Accepted

No. 11/8, Officer's Line, Vellore - 632 001
Phone : 213 001 - 213 008 Fax : 210 451
Email : darling_residency@yahoo.com